ஜெயலலிதா பேட்டி

KALKI 16.9.84

ரூ.1.50



கல்கி

இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!



கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது. ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும். மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப்போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி சுலபமாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!



இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

Godrej
பவுடர்
ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

புதிய அமைச்சர்கள்…



✖ கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன்

கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் என்று சுருக்கமாய்(!) அழைக்கப்படுகிற கோபாலபுரம் — கந்தசாமி ரெட்டியார் — சுப்பா ரெட்டியார் — சுப்பா ரெட்டியார்— ரங்கனாத ரெட்டியார் — ராமச்சந்திரன் தமிழகத்தின் புதிய கூட்டுறவுத் துறை அமைச்சர். வயது 36.

ஆஜானுபாகுவான தோற்றம். விரலில் எம். ஜி. ஆர். உருவம் பதித்த மோதிரம். இடது கையில் தங்கநிற கடிகாரம். வலது கையில் தங்க பிரேஸ்லெட். க. வே. சி. கரை வேட்டி, வெள்ளைச் சட்டை, பெரிய மீசை. பேச்சில் வார்த்தைக்கு வார்த்தை அண்ணே. அண்ணாச்சி சரளமாய் வருகிறது.

நாலு தலைமுறையாய் பருத்தி வியாபாரம். ஆண்டுக்கு சுமார் பத்து பன்னிரண்டுகோடி பிஸினஸாம். நல்ல லாபம் கிடைக்குமாம்; தமிழ் தவிர, தெலுங்கும் சரளமாய்ப் பேசுகிறார். இவருக்கு 2 மகன்கள் ஒருமகள். எல்லோரும் பள்ளியில் படிக்கிறார்கள்.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்குப் பின், மந்திரிசபையில் இடம் பெற்றுள்ள ரெட்டியார் சமூகத்தவர் இவர்தான் என்பதில் இவருக்கு ஏக. சந்தோஷம்.

இவர் குடும்பத்தில் இரண்டு பேர், இரண்டு அரசியல் கட்சிகளில் தீவிரமாய் ஈடுபட்டு மோதிக் கொள்ளக் கூடாது என்பதாய் ஒரு கொள்கையாம். ஆகவே, தம்பி வீராசாமி அ. தி. மு. க. வில் தீவிரமாய் வேலைசெய்ய ஆரம்பித்ததும், காங்கிரஸில் இருந்த அண்ணன், அரசியலிலிருந்து விலகி விட்டார்.

முதல் முறை தேர்தலில் நின்றபோது, தேர்தலுக்குப் பதினைந்து நாட்கள் முன்பு, கார் விபத்தில் எலும்பு முறிவுக்குள்ளாகி, ஜி. ஹெச்சில் பல மாதம் இருக்கவேண்டிய தாகி விட்டதாம். அந்தச் சமயத்தில் பல முறை எம். ஜி. ஆர். இவரை வந்து சந்தித்து. ஆறுதல் சொல்வாராம். இரண்டாவது முறை தேர்தலின் போது, எலும்பு முறிவு முற்றிலும் குணமாகாத நிலையில் காரின் டாப் மீது அமர்ந்து கொண்டே வோட்டுக் கேட்டு, முதல்வர் ஆசியால் வெற்றி பெற்றதாய்ச் சொன்னார்

''எஸ். டி. எஸ். குரூப்பைச் சேர்ந்த உங்களை இந்தப்பக்கம் இழுக்கத்தான் இந்தப் பதவி என்று பேசப்படுகிறதே?'' என்ற கேள்விக்கு அமைச்சர பதில்: ''என்னைப் பொறுத்தவரை எம். ஜி. ஆர் தான் எல்லாம் அவர் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவர். எனக்குப் பல நண்பர்கள் இருக்கலாம் ஆனால் அவர்கள் என் தலைவருக்கு எதிராய்ப் போகும் போது நான் தலைவர் பக்கம்தான்.''

• • • •

புதிய உணவு அமைச்சர் டீ. வீராசாமி (வயது 46) பிற்பகல் நண்பருடன் ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வரும்போது, ரேடியோவில் நியூஸ் கேட்டுத் தான், தாம் அமைச்சராய், நியமிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்து கொண்டாராம். ''செய்தியைக் கேட்ட போது எப்படி இருந்தது?'' என்றேன். 'எந்தவித ரியாக்‌ஷனும் இல்லை' என்றார்.

விவசாயக் குடும்பம். இரண்டு அண்ணன் ஒரு தம்பி. எல்லோருமே விவசாயம்தான்.

✖ வீராசாமி



செவ்வாய்க்கிழமை (4—ம் தேதி) இரண்டு புது அமைச்சர்களுமே மற்ற அமைச்சர்கள் ஒவ்வொருவர் வீட்டுக்காய்ப் போய்ப் பார்த்து விட்டு வந்தனர். அமைச்சர் வீராசாமியை நான் சந்தித்தது, அமைச்சர் விஜயலட்சுமி பழனிச்சாமி வீட்டில். பேட்டியும் அங்கேதான்.

—எஸ். சந்திரமௌலி

…புதிய செய்திகள்

ஜெயலலிதா பேட்டி



வரவேற்பறையின் அந்த சுவரில் சின்ன வயது ஜெயலலிதா எங்களைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தார். அறையின் மூலையில் இருந்த இரட்டை இலையுடன் கூடிய கேடயத்தில் ஒரு இலையில் எம்.ஜி.ஆரும், இன்னொரு இலையில் ஜெயலலிதாவும் இருந்தார்கள். எல்லா அமைச்சர்கள் வீட்டிலும் இருக்கும் எம். ஜி. ஆரின் வண்ணப்படம் ஒன்று வரவேற்பு அறைக்கு வரும் வழியில் மாட்டப்பட்டிருந்தது. அந்தக் குளிர்ப்பதன அறையின் குளிர் லேசாக எங்களை பாதித்திருந்தாலும், பேட்டி ஆரம்பித்த உடன் குளிர் இருக்குமிடம் தெரியாமல் சூடேறிவிட்டது! நாங்கள் பேட்டி காணும்போது அ.தி.மு.க.வின் கொள்கை பரப்பு செயலாளராகவும் இருந்தார் ஜெயலலிதா, எம். பி.

I am a Fighter

நிருபர்: சின்ன வயதிலேயே அரசியலில் சேர வேண்டும் என்ற எண்ணம் இருந்ததா?

ஜெ: அப்படிக் கூற முடியாது. ஆனால் என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆர்வம் அதிகம், நம் நாட்டு விஷயங்களை மட்டுமல்ல, வெளிநாட்டு விஷயங்களைக் கூட ஆவலோடு படித்து அறிந்துகொள்வதுண்டு.

நிருபர்: அ. தி. மு. க. வில் சேருவதற்கு முன்பு வேறு ஏதாவது கட்சியில் சேர வேண்டும் என்ற எண்ணம் இருந்ததா?

ஜெ: இல்லை. ஒருவேளை நான் திரைப்படத் துறையில் இறங்காதிருந்தால் முன்னமே அரசியலில் ஈடுபட்டிருக்கலாம். பள்ளிப் படிப்புப் படித்து, கல்லூரிப் படிப்பை முடித்து வழக்கறிஞராகி நிச்சயம் நான் அரசியலுக்கு வந்தே இருப்பேன். சினிமாவில் நான் இருந்ததால் சற்றுத் தாமதமாயிற்று என்று சொல்லவேண்டும்.

நிருபர்: அ. தி. மு. க. வில் சேருவதற்கு முன்னர் ஏதாவது தலைவர் உங்களைக் கவர்ந்ததுண்டா?

ஜெ: உலக அளவில் சிலர் என்னைக் கவர்ந்திருக்கிறார்கள். சரித்திரம் படிக்கும்போது சிலர் கவர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தலைவரின் பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று நினைத்தது அ. தி. மு. க. தோன்றிய பிறகுதான். படிக்கும் போது மார்க்ஸ், லெனின், நேரு, காந்தி ஆகியோரின் கருத்துக்கள் ஒவ்வொரு வகையில் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால் இன்றைய உலகில் நடைமுறையில் நான் பின்பற்ற முடிவு செய்தது முதல்வரின் பாதையைத்தான்.

நிருபர்: எந்தக் கட்டத்தில் அ. தி. மு. க. வில் சேர வேண்டும் என்று முடிவு செய்தீர்கள்.

ஜெ: என்னைப் பொறுத்தவரையில் 80–81 வாக்கிலேயே சேர வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். பிற்காலத்தில் என்னுடைய முடிவை நினைத்து நான் வருத்தப்படக் கூடாது என்பதால் முதல்வர்தான் 'நன்றாக யோசித்துச் சேர்' என்று சொல்லி விட்டார். அதனால் தான் 82–ல் சேர்ந்தேன்.

நிருபர்: உங்கள் கட்சிக்குக் கொள்கையே இல்லை என்று பேசப்படுகிறது. அண்ணாயிசம் கிண்டலுக்கு உள்ளாகிறது. உங்கள் கொள்கையான 'அண்ணாயிஸம்' பற்றிச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

✖ விளக்கேற்றி வைக்கிறார்





✕ ராணி அண்ணாவுடன்...

ஜெ: எந்தெந்த துறைகளில் என்னென்ன செய்யவேண்டும் என்று அண்ணாவகுத்துக் கொடுத்த பாதைகளின் அடிப்படையில் உருவானது தான் 'அண்ணாயிஸம்'. இதைக் கிண்டல் செய்பவர்கள் அண்ணாவையே இழிவு படுத்துகிறவராகிறார்கள். அவர்களுக்காக வருந்துகிறேன். நலிந்த பிரிவினருக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர வேண்டும். சமுதாய அநீதிகளைக் களைய வேண்டும். வாழ்க்கையில் எல்லோரும் முன்னேறுவதற்குச் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். தனி நபர் சொத்துக்களைச் சேர்க்காமல் தடுத்து, எல்லோருக்கும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவாவது வசதி ஏற்பட வேண்டும்... இவ்வாறு பல கொள்கைகள் இருக்கின்றன. இவையெல்லாம் சோஷலிஸப் பாணியில் அமைந்து இருக்கின்றன. இதே போல் தொழிலாளர்கள் பற்றி மொழியைப் பற்றி என்று பல்வேறு விஷயங்கள், கொள்கை விளக்கத்தில் இருக்கின்றன.

நிருபர்: இவையெல்லாம் பொதுவான அடிப்படைக் கொள்கைகள். எல்லா கட்சிகளுமே கூறுகிறவை. ஆனால் இவற்றை நிறைவேற்றுவது எப்படி? ராஜாஜி சுதந்திரா கட்சி ஆரம்பித்த போது அதிக பட்ச சுதந்திரம், குறைந்த பட்சக் கட்டுப்பாடு — பெர்மிட், லைசென்ஸ் போன்றவை இருக்கக் கூடாது. தனியார் தொழில்கள் துவங்கச் சுலபமாக அனுமதிக்க வேண்டும். எல்லாவற்றையும் அரசே செய்வது

✕ சத்துணவு சாப்பிடுகிறார்



என்றால் கடினம் என்று குறிப்பாக நாட்டின் வளம் பெருகத் திட்டங்களைச் சொன்னார். அதுபோல் சொல்ல முடியுமா?

ஜெ: கொள்கையைச் சொன்னால் திட்டங்களைக் கேட்கிறீர்கள், திட்டங்களைச் சொன்னால் கொள்கையைக் கேட்கிறோம் என்கிறீர்கள்! இந்த அரசு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது, நிறைவேற்றப் போகிறது என்பது உங்களுக்கே தெரியும். தனியார் துறை வளர்ச்சியை நாங்கள் தடுத்து நிறுத்தவில்லை. மின் உற்பத்தியில் கூட தனியார் துறையை அனுமதிக்கலாம் என்று இப்போது முடிவு எடுத்திருக்கிறார்கள்.

நிருபர்: ஆக நீங்கள் தனியார் துறை வளர்ச்சியை ஆதரிப்பவர்கள் என்று சொல்லலாமா?

ஜெ: தனியார் துறை, பொதுத் துறை இரண்டுமே வளர்ச்சி பெற வேண்டுமென்பது தான் எங்கள் கொள்கை. தனியார் துறையைப் பொறுத்த மட்டில், அதன் வளர்ச்சி, பொது நலனைப் பாதிக்காத வரை பிரச்னையில்லை. சொத்துக்கள் தனி நபர் கையில் ஏகமாகச் சேர்ந்து மற்றவர்களுக்கு அடிப்படை வசதிகளும், வாய்ப்புக்களும் சேராமல் இருப்பது நல்லதல்ல. இத்தகைய அநீதிகளைத் தடுப்பது எங்கள் கொள்கை.

நிருபர்: மற்றபடி நீங்கள் தனியார் துறைக்கு வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கத் தயார்!

ஜெ: செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது அரசு.

நிருபர்: உங்கள் கொள்கையை ஒரே வரியில் சொல்வதென்றால்...?

ஜெ: ஏழ்மையைப் போக்குவது. இதுதான் முக்கியமான கொள்கை. அறியாமையைப் போக்குவது அடுத்தது. பசி நீக்குவது என்பது கூட ஏழ்மையில் அடங்கியது தான்.

நிருபர்: அ.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் கொள்கை அளவில் என்ன வித்தியாசம்?

ஜெ: தி.மு.க.வைப் பொறுத்தவரை கொள்கை எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அண்ணா காலத்தை விட்டு விடுங்கள். அவர் மிகக் குறுகிய காலம் தான் ஆண்டார். அதன் பின் வந்தவர்கள், தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொண்டார்களே தவிர மக்களுக்கு என்று எதுவும் செய்யவில்லை. ஆக அவர்கள் ஏதாவது கொள்கை இருக்கிறது என்று சொன்னால் கூடப் பேச்சுக்குத் தான் சொல்கிறார்கள், நடைமுறையில் காட்டவில்லை என்றுதான் நான் சொல்லுவேன். எங்கள் ஆட்சியில் என்னென்ன நன்மைகள் மக்களுக்குச் செய்து கொண்டிருக்கிறோம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். குற்றம் சொல்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். எந்த ஆட்சியும் சிறிது கூடக் குறையில்லாமல் இருக்க முடியாது. எங்கள் ஆட்சி ஏழரை ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. கருணாநிதியும் ஏழரை ஆண்டுகள் ஆண்டார். இந்த அரசு வெவ்வேறு துறைகளில் செய்த சாதனைகளையும் கருணாநிதி செய்த சாதனைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நாங்கள் எவ்வளவு நன்மைகள் செய்திருக்கிறோம் என்பது புரியும். புள்ளி விவரங்களை வைத்துத்தான் நான் சொல்கிறேன். நிரூபித்துக் காட்ட முடியும்.

நிருபர்: வளர்ச்சித் திட்டங்களைப்போட்டு வேலை வாய்ப்பைப் பெருக்கினால் சமுதாயத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்குப் பண உதவி அளிக்க வேண்டிய அவசியம் இருக்காதே! இலவசமாக இதைத் தருகிறோம் அதைத் தருகிறோம் என்று மக்களைப் பிச்சைக்காரர்கள்போல் ஆக்குவது உற்பத்திக்கு உதவாத இனங்களில் வரிப்பணத்தைச் செலவிட்டுக் கொண்டே போவதும் சரியல்லவே?

ஜெ: வேலை வாய்ப்புக்களைப் பெருக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. தொழில்வளம் பெருகவும் ஏற்பாடுகளைக் கவனிக்கிறது. ஆனால் இவை நீண்ட காலச் செயல் திட்டங்கள். வேலை இல்லாத எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இன்றே ஏற்படுத்தித் தர முடியாது. அதே நேரத்தில் இன்று பசியால் வாடுகிறவனையும், வேலையின்றித் தவிப்பவனையும் நாங்கள் கவனித்தாக வேண்டும். தொழிற்சாலைகள் துவங்கவேண்டுமென்றால் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். மாநில அரசை மட்டும் குற்றம் சொல்லிப் பயன் இல்லை. 67-க்குப் பிறகு எந்த ஒரு பெரிய தொழிற்சாலையும் அமைக்க மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. இப்போது தான் மைய அரசின் அணுகு முறை சற்று மாறியிருக்கிறது.

நிருபர்: குஜராத் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி தமிழகத்தில் ஏற்படவில்லையே!

ஜெ: குஜராத்தில் எந்த ஆட்சி, தமிழகத்தில் எந்த ஆட்சி என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாலையை இரண்டாகப் பிரிக்கும் மஞ்சள் கோட்டைக் கடக்கக் கூடாது என்பதற்காக பெங்களூர் சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும் வாசகம்: ''மஞ்சள் கோட்டை லட்சுமணன் கோடு போல் பாவிக்கவும்!''

—ப. அருள்மணி.



நிருபர்: குஜராத்தில் காங்கிரஸ் ஆட்சியினால்தான் வளர்ச்சி என்கிறீர்களா?

ஜெ: என்னுடைய வாயில் வார்த்தைகளைத் திணிக்காதீர்கள். என் கருத்தைச் சொல்லி விட்டேன். மைய அரசாங்கம் இங்கு தொழில்களைத் துவங்கத் தாராளமாய் அனுமதி கொடுப்பதில்லை. ஏகப்பட்ட தடைகள். மோதிப் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். தொழில்கள் துவங்குவதற்குப் போதிய மின்சார வசதியும் இங்கு இல்லை. நீர் மின் நிலையங்களுக்குத் தண்ணீர் வரத்து கிடையாது. பேச்சு வார்த்தை நடக்கும் போதே கர்நாடகாவில் ஒன்பது அணைக்கட்டுக்கள் காவிரியில் கட்டி முடித்து விட்டார்கள். இன்னும் கட்டுகிறார்கள். கேட்பாரில்லை. சரி அனல் மின் நிலையமாவது சரியாக இயங்கலாமே என்றால் நிலக்கரிப் பற்றாக் குறை. வடக்கேயிருந்து நிலக்கரி வர ரயில் வாகன் இல்லை. நிலக்கரி தரம் மோசம். கப்பலில் தருவிக்கலாம் என்றால் மத்திய அரசு குறுக்கே நிற்கிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் கண்மூடித்தனமாக மாநில அரசை மட்டுமே குறை கூறுகிறார்கள். இப்போது ஃபர்னஸ் ஆயில் உபயோகித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் மிக அதிகமாக செலவு ஆகிறது. அயல் நாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதிக்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் முயற்சியில் அலட்சியப் போக்கு கிடையாது. மைய அரசு ஏன் ஒத்துழைப்பதில்லை என்று என்னைக் கேட்காதீர்கள்! வறட்சி சமயத்தில் மைய அரசிடம் இருந்து அரிசி பெற முதல்வர் உண்ணாவிரதமிருக்க நேர்ந்தது! அண்மைக் காலமாகத்தான் ஓரளவு சுமுகமாக உறவு இருக்கிறது.

நிருபர்: கொள்கை அடிப்படையில் தான் நம் நாட்டில் கட்சிகள் இயங்குவதாகக் கருதுகிறீர்களா? அ. தி. மு. க. என்றால், எம். ஜி. ஆர்., தி. மு. க. என்றால் கருணாநிதி... காங்கிரஸ் என்றால் இந்திரா காந்தி. இந்தப் போக்கு நல்லதா?

ஜெ: எந்த ஒரு நாட்டின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தாலும் இது தவிர்க்க முடியாத ஒன்று. எந்த ஒரு அமைப்போ, அரசியல் கட்சியோ ஓங்கினால் தலைமைப் பொறுப்பை யாராவது ஒருவர் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது அந்தத் தலைவர் விரும்பியோ, விரும்பாமலோ, மக்கள் எண்ணத்தில் பெரிதாக வளர்ந்து விடுகிறார். இதைத் தவறு என்றோ வேண்டுமென்று செய்யப்படுவது என்றோ சொல்ல முடியாது. மேல்நாடு ஒன்றில் இப்படி தனி நபர் பிரபை வளருவது தவறு என்று எடுத்துக் காட்டவே ஒரு கட்சி துவங்கப்பட்டது. கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? அந்தக் கட்சியில் தலைவரும் தமது இமேஜை வளர்த்துக் கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டார்!

நிருபர்: இந்த நிலையில் அந்தத் தலைவருக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்குப் பொறுப்புக்கள் குறைந்து விடும். எல்லாவற்றையும் தலைவரே தீர்மானிக்க வேண்டும். எம். ஜி. ஆர். ஆட்சியிலேயே அமைச்சர் அளவில் முடிக்கப்பட வேண்டிய கோப்புகள் எல்லாமும் அவரிடம் தான் செல்கின்றன என்று சொல்கிறார்கள்!

ஜெ: அது தவறு. எல்லாக் கோப்புகளையும் முதல்வர் பார்ப்பது என்பது நடக்காத காரியம். எல்லா இலாகாவையும் முதல்வர் தான் கவனிக்க வேண்டுமென்றால் எந்த வேலையுமே நடக்காது.

நிருபர்: மதுவிலக்கு பிரச்சினையில் அ. தி. மு. க. வின் நிலை என்ன?

ஜெ: கருணாநிதிதான் ஒரு தலைமுறைக்கு மதுவை அறிமுகப்படுத்தினார். பின்னர் மதுவிலக்குக் கொணர்ந்து கடுமையான சட்டங்கள் போட்டும் கள்ளச் சாராயம் குடிக்க ஆரம்பித்தார்கள். கள்ளச் சாராயத்தின் நிலைமைகள் பற்றி உங்களுக்கே தெரியும். நிர்ப்பந்தத்தின் பேரில் தான் மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறது அரசு. 1985–ல் அமுல் படுத்துவோம் என்று சொல்லியிருக்கிறோம். படிப்படியாக இதைச் செய்ய வேண்டும். திடீரென்று ஒரு அறிவிப்பைத் திணிக்க முடியாது. அப்படிச் செய்தால் மறுபடி கள்ளச் சாராயம் அதிகரிக்கும்.

நிருபர்: கட்சிக்குள் கள்ளச் சாராய சாம்ராஜ்யம் இருப்பதாக முதல்வர் சொல்லியிருக்கிறாரே?

ஜெ: ஆமாம்! அதைக் களைந்தெடுப்பதாகவும் சொல்லியிருக்கிறாரே! இதற்கு மேல் என்னால் எதுவும் சொல்ல முடியாது. ஏன் என்றால் என் விருப்பத்துக்கு ஏற்ப கருத்துக்களை வெளியிடுவதற்கு நான் எஸ். டி. எஸ். அல்ல.

நிருபர்: என்ன நடவடிக்கைகள் முதல்வர் எடுத்திருக்கிறார்?

ஜெ: முதல்வர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதையெல்லாம் உங்களிடம் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இது ஒரு குடும்ப விஷயம். முதல்வர் தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று உங்களுக்கு எப்படித்

சென்னை எழும்பூரிலிருந்து புதிய பல்லவன் ரயில் அதிகாலை 5.30–க்குப் புறப்படுகிறது. வண்டியைப் பிடிக்க எந்த பஸ்ஸும் அந்த நேரத்தில் இல்லை. முதல் நாள் இரவே எழும்பூருக்குச் சென்று வண்டி ஏற வேண்டும். இதுதான் இரயில்வே இலாகா செய்யும் பொது நல சேவை!

—எஸ். சண்முக சுந்தரம்.



தெரியும்? இது ஒரு உட்கட்சி விவகாரம். கட்சிக் கட்டுப்பாடு என்று ஒன்று இருக்கிறது. சிலர் வெளியே பேசுகிறார்கள். அதுபோல் எல்லோரும் பேசுவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

திருபர்: கட்சியில் குடிப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்று எஸ். டி. எஸ். கூறியிருக்கிறாரே?

ஜெ: இலட்சக்கணக்கான தொண்டர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் என் எதிரில் யாரும் குடித்துவிட்டு வந்ததில்லை. தவறே நடக்காது என்று சொல்லவில்லை. எல்லோரும் உத்தமர்கள் என்றும் சொல்லவில்லை. எல்லா இயக்கத்திலேயும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருப்பார்கள். எங்கள் கட்சியினர் சிலர் குடித்து விட்டு மீட்டிங்குகளுக்கு, வர இதுபற்றி எனக்குத் தகவல் தெரிவிக்கப் பட்ட உடனே அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்து உள்ளோம்.

திருபர்: பரூக் அப்துல்லா ஆட்சிக் கவிழ்ப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜெ: இதுபற்றி நான் மாநிலங்கள் அவையில் பேசியுள்ளேன். மேலும் 356 பிரிவையே ஒழிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளோம். மையத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் இந்தப் பிரிவை உபயோகப் படுத்த வேண்டும் என்ற ஆசை இருக்கும்.

திருபர்: இப்போது என்.டி.ஆர். மந்திரிசபை கவிழ்ந்தது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ஜெ: இதுபற்றிக் கட்சித் தலைமை கருத்து எதுவும் சொல்லாத நிலையில் நான் எதையும் கூறத் தயாராக இல்லை. (செப்டம்பர் 1, 2–ல் கூடிய அ. தி. மு. க. பொதுக்குழு என். டி. ஆரைக் கவிழ்த்த கவர்னர் ராம்லாலைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.) பொதுவாக ஒன்று சொல்லுகிறேன். அரசியல் சட்டத்துக்கு புறம்பாக நடக்கும் எந்தக் காரியத்தையும் அ.தி.மு.க.ஆதரிக்காது.

திருபர்: ஆட்சியிலிருக்கும் ஒரு கட்சியே, மறியல் போராட்டம் என்று அறிவிப்பது சரிதானா? ஹோட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்கா விட்டால் போராட்டம் நடத்துவோம் என்று முதல்வர் கூறியிருக்கிறாரே?

ஜெ: தனியார் துறை எங்கள் கட்டுப்பாட்டில் இல்லையே. ஆட்சி கடுமையான சட்டங்கள் போட்டால், எதிர்ப்பு கிளம்புகிறது. எதிர்க் கட்சிகளும் எதிர்க்கின்றன. ஆதலால் கட்சி என்ற முறையில் போராட்டம் நடத்துவதில் என்ன தவறு? ஹோட்டலுக்குத் தர வேண்டிய மைதா, ரவை கோட்டாவை நிறுத்த வேண்டிய நிலை வரும் என்று மிரட்டி விலையைக் குறைக்கச் செய்யலாம். ஆனால் பத்திரிகைகளும், எதிர்க் கட்சிகளும் சும்மா இருக்காதே. உரிமைகளைப் பறிக்கும் செயல் என்று கோஷம் போடுவார்களே! எனவே தான் போராட்டம்.

திருபர்: குழந்தைகளுக்கு மதிய உணவு போடுவதால்பெற்றோர்களுக்குப்பொறுப்பு குறைந்து விடுகிறதே?



அவன்: "நம்ம கல்வி முறை சரியானதுதானா? இல்லே சரியில்லையா..?"
இவன்; "என் ரிசல்ட் வந்ததும் பதில் சொல்றேன்!"

—உ. ராஜாஜி.

ஜெ: கிராமப் புறங்களில் ஒருவேளை சாப்பாடு கூடப் போட முடியவில்லையென்று தான் குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். அதனால் தான் முதல்வர் அந்த ஒரு வேளை சாப்பாடாவது நாங்கள் போடுகிறோம். நீங்கள் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புங்கள் என்கிறார். இப்போது அரசு குறித்த குறியீட்டிற்கு மேல் இரண்டரை மடங்கு அதிகமாகப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இந்தக் குழந்தைகள் தானே எதிர்காலத்தில் நாட்டில் உள்ள தொழிற்சாலையில் மற்றும் பல்வேறு துறைகளில் பணியாற்ற வேண்டும்? சரியானபடி ஊட்டச்சத்து இல்லாமல் மூளை வளர்ச்சி குன்றி, உடல் பலம் இன்றி இன்றைய குழந்தைகள் வளர்ந்தால் நாடு நாளை எப்படி இருக்கும்? ஆரோக்கியமான ஒரு சமுதாயம் எதிர்காலத்தில் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் சத்துணவு போடப்படுகிறது. இதைச் செலவு என்பதை விட எதிர்காலத்திற்கான முதலீடு என்று சொல்லலாம். எதிர்காலம் என்று பேசும்போது மக்கட் தொகை அதிகரிப்பு பற்றியும், அதனால் ஏற்படக் கூடிய பாதிப்பு பற்றியும் கூறியாக வேண்டும். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை மிக வெற்றிகரமாக அமல்படுத்தி வருகிறது தமிழகம். அதனால் ஜனத்தொகை அடிப்படையில் தமிழகத்துக்கு மத்திய அரசினால் தரப்படுகிற அபிவிருத்தித் திட்டத் தொகையும் குறைகிறது. இப்படித் திறமைக்குத் தண்டனை போல் நடந்தால் எப்படி முன்னேற முடியும்?

திருபர்: 1972–ல் தி. மு. க. விலிருந்து எம். ஜி. ஆர். வெளியேறிய போது கணக்குக் காட்ட வேண்டும் என்று சொன்னார். அ. தி. மு. க. வில் யாரும் கணக்குக்காட்டியதாகத் தெரியவில்லையே?

ஜெ: கணக்கைக் காட்ட வேண்டும் என்று சொன்னது உண்மைதான். வெளியே காண்பிக்க வேண்டும் என்று சொல்லவில்லையே. முதல்வரிடம் காட்டியிருப்பார்கள். இல்லையென்றால் அவர் நடவடிக்கை எடுத்திருப்பார்.

திருபர்: 1972ல் கட்சியில் சேர்ந்தவர்களை விட 1982–க்கு அப்புறம் சேர்ந்தவர்களுக்கு மரியாதையும், பதவிகளும் தரப்படுகின்றனவே?

ஜெ: ஒவ்வொருவரிடம் ஒருதிறமை இருக்கிறது. சீனியர், ஜூனியர் என்று பார்த்துக் கொண்டிருந்தால் எந்த இயக்கமும் வளராது. திறமை எங்கு இருக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதுதான் தலைவர்களின் ராஜதந்திரம், சாணக்கியம் என்று சொல்ல வேண்டும். 1972–லிருந்து கட்சியிலிருப்பவர்களை மதிக்கிறோம். தொண்டு, தியாகம் இவைகளைப் போற்றுகிறோம். ஆனால் அதே நேரத்தில் கட்சியில் புதிதாகச் சேர்ந்தவர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டால்தான் கட்சி வளரும். இல்லையேல் ஒரு தலைமுறையோடு கட்சி முடிந்துவிடும். இந்த இயக்கத்தைப் பொறுத்தவரை, ஆரம்பத்திலிருந்து இருப்பவர்களும் சரி, பின்னால் வந்தவர்களும் சரி, ஒரு நியாயமான வாய்ப்புக்களைத் தான் பெறுகிறார்கள்.

திருபர்: எம்.பி. ஆகி முதல் முறை ராஜ்ய சபாவில் பேசும் போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

ஜெ: எனக்கு ஒரு இனிமையான ஆச்சர்யம். எனக்குக் கொடுக்கப்பட்ட 'சீட்' அண்ணா அவர்கள் ராஜ்ய சபைக்கு சென்றபோது அவருக்குக் கொடுக்கப்பட்ட ஆசனம் என்று பலர் சொன்னார்கள். அவர் ஆசி கிடைத்தது போல் உணர்ந்தேன். இது எதேச்சையாக நிகழ்ந்த ஒன்று.

திருபர்: டெல்லியில் நீங்கள் பெரிய தர்பாரே நடத்துவதாகக் கூறுகிறார்களே?

ஜெ: இப்படி என்னைப் பற்றி எத்தனையோ பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். சமீபத்தில் ஒரு பத்திரிகையில் எனக்கு டெல்லியில் 'காஸ்டியூமர்' அமர்த்தியிருப்பதாக எழுதியிருக்கிறார்கள். நான் நவீன உடைகள் எதுவும் அணிவது கிடையாது. புடவை தான் கட்டிக் கொள்கிறேன். இம்மாதிரி அவதூறான பேச்சு, எழுத்தை நான் லட்சியம் பண்ணுவதே இல்லை.

திருபர்: நீங்கள் சுற்றுப் பயணம் செய்யும் போது அரசு அதிகாரிகள் உங்களுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கிறார்கள் என்றும் கலெக்டரே வந்து கார் கதவைத் திறந்து விடுவதாகவும் கூறப்படுகிறதே!

ஜெ: அடிப்படையே இல்லாத செய்திகள். எந்தக் கலெக்டரும் என் கார் கதவைத் திறந்தது கிடையாது. என்னைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டும். ஒன்றும் இல்லையென்றால் கற்பனை செய்து எழுதுகிறார்கள். என் கூட்டங்களுக்கு வரும் மக்களுக்கு உண்மைகள் தெரியும். என்னை நன்றாகக் காண வேண்டும் என்று சில சமயம் மக்கள் ஆரவாரம் செய்வார்கள். அப்போது மேடையில் என்னை முன்னிருத்தி மற்றவர்கள் நாற்காலிகளைப் பின்னுக்குத் தள்ளிக் கொள்வதுண்டு. அவ்வளவுதான். எங்கள் கட்சிக்காரர்கள் அலங்காரம் செய்து வரவேற்பு வளைவுகள் போட்டால், ஆடம்பரம், அது, இது என்று குறை கூறுகிறார்கள். கருணாநிதியின் மணிவிழாவுக்குச் செய்த ஆடம்பரத்தைப் பற்றி யாரும் ஒன்றும் குறை கூறவில்லையே? 60 அடி உயரத்துக்கு வைத்த Cut–out ஐ ''கண்ணைக் கவருகிறது'' என்று பாராட்டாகத்தானே அதே ஆங்கிலப் பத்திரிகை எழுதியது? எந்த விழாவானாலும் அளவுக்கு மீறி செலவு செய்வதில்லை. ஆனால் அரசு விழாவாகட்டும், கட்சி விழாவாகட்டும் மக்கள் ஓரளவு கோலாகலத்தை எதிர்பார்க்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு இருக்கிறது.

திருபர்: கோவிலுக்குப் போவீர்களா?

ஜெ: அம்மாவின் திருப்திக்காக கோவிலுக்கு சென்றதுண்டு. நானாகச் சென்றதில்லை. எனக்குச் சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் நம்பிக்கை இல்லை. நான் ஒரு நாத்திகவாதியும் இல்லை. 'ஒன்றேகுலம், ஒருவனே தேவன்' என்ற அண்ணாவின் கொள்கை தான் என் கொள்கை. மற்றவர்கள் கோவிலுக்குப் போவதை நான் குறை கூற மாட்டேன். வாழு, வாழவிடு என்பது தான் என் கொள்கை.

திருபர்: எதற்கு அரசியலில் நுழைந்தோம் என்று எப்போதாவது நினைத்ததுண்டா?

ஜெ: இல்லை. அவ்வளவு சீக்கிரம் சோர்ந்து போய் விட்டால் எப்படி? I am a fighter. அரசியலுக்கு வரும்போது ரொம்ப சௌகரியமாக இருக்கும் என்றோ அல்லது இன்பமான அனுபவமாக இருக்கும் என்றோ எதிர்பார்த்து வரவில்லை. கரடு முரடான அனுபவத்தை எதிர்பார்த்தே வந்தேன். தைரியத்துடனும் இருக்கிறேன்.


—பேட்டி: ப்ரியன்


படங்கள்: சுபா

அட்டை: வண்ணப்படம்: உத்ரா

அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு மத்தியான உணவு எடுத்துப் போகிறவர்கள் பம்பாயில் 2000 பேர் இருக்கிறார்கள். இவர்களுக்குச் சங்கம் உண்டு. இவர்களில் சிலர் தினமும் 45 மைல் மின்வண்டியில் பிரயாணம் செய்கிறார்கள். ஒரு காரியருக்கு மாதம் 20 முதல் 40 ரூபாய் வரை வாங்குகிறார்கள். இப்போது இவர்கள் ஒரு மாத போனஸ் கேட்கிறார்களாம்!

—அனிதா ராமச்சந்திரன்.




எதிர்க்கட்சிகள் என்னைப் பதவியிலிருந்து விரட்டப் பார்க்கறாங்க!.. அது நடக்கவே நடக்காது!
அ.இ.அ.தி.மு.க
அ.தி.மு.க


அசெம்பிளி மெஜாரிடி நிர்ணயம்
ராமராவ்
பாஸ்கரராவ்

கல்கி

1984 செப்டம்பர் 16
மலர் : 43 இதழ் : 7
ரக்தாக்ஷி ஆவணி 31





ஒப்புதல் வாக்குமூலம்!

'எந்த லஞ்ச ஊழல் குற்றச்சாட்டைக் கூறி எம். ஜி. ஆர். தி. மு. க. விலிருந்து வெளியேறிப் புதுக்கட்சி தொடங்கினாரோ அதே லஞ்ச ஊழல் அ. இ. அ. தி. மு. க. விலும் ஏகமாகப் பெருகிவிட்டது' என்பது எஸ். டி. எஸ்ஸின் குற்றச்சாட்டு.

'எமது கட்சியிலும் ஆட்சியிலும் லஞ்ச ஊழல் என்ற நாமதேயமே கிடையாது; நிர்வாகம் தூய்மையாக இருக்கிறது' என்று அடித்துக் கூற முதல்வரால் முடியவில்லை. அதற்குப் பதில் 'விசாரணைக் குழு அமைத்திருக்கிறேனே' என்கிறார். இந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறவர்கள் யார், யார் என்று பார்க்கும் போது இது, குற்றவாளிகள் என்று கருதப்படுகிறவர்களே நீதிபதிகளாகித் தீர்ப்பு வழங்குகிற புரட்சித் திட்டமாக இருக்கிறது!

குற்றம் சுமத்தியவர் மீதே குற்றம் சாட்டி, எஸ். டி. எஸ்ஸையே 'லஞ்ச ஊழல் பேர்வழி' என்று முத்திரை குத்துவது அரசியல் தந்திரங்களுள் ஒன்று. இத்தகைய அநாகரீக அரசியல் இன்று நமக்கு நன்கு பழகி விட்டது. யாருடைய குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என்று நிர்ணயிக்க மக்களிடம் சாட்சியம் ஏதுமில்லை. ஆனால் இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போவதால் அ. இ. அ. தி. மு. க. நிச்சயமாகத் தூய்மை கெட்டு லஞ்ச ஊழல் மயமாகிப் போனதாக முதல்வரே ஒப்புக் கொண்டதாகி விட்டது. இன்று டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ள எஸ். டி. எஸ். நேற்று வரை ஆளும் கட்சியில் இருந்ததோடு நேர்மையாளர், திறமையாளர் என்றெல்லாம் முதல்வரிடம் பாராட்டுப் பெற்று வந்தவர்தான் என்ற உண்மை மேற்படி முடிவுக்கு வலிமை சேர்க்கிறது.

'பாருங்கள், வருமான வரி பாக்கி கட்டவும் இதர சொந்தச் செலவுகளுக்கும், 40 லட்சம் தனி நபரிடம் கடன் வாங்கியுள்ளேன்' என்று பத்திரங்களைப் பத்திரிகை நிருபர்களிடம் காட்டியிருக்கிறார் முதல்வர். ''என்னைப் போய் லஞ்ச ஊழல்காரன் என்கிறார்களே' என்றும் கேட்டிருக்கிறார். எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வளவு பெரிய தொகையை யார் அவருக்குக் கடன் தந்தார்கள்? வட்டியும் முதலும் திருப்பித்தர முதல்வர் என்ன திட்டம் வைத்துள்ளார்? குறைந்த பட்சம் 12 சதம் வட்டி என்றால் கூட மாதம் 40 ஆயிரம் ரூபாய் வட்டி தர வேண்டுமே? முதல்வரின் சம்பளம் இதற்கு எந்த மூலை? சொத்துக்களை விற்கப் போகிறார் என்றால் எப்போது? என்று பெறப்பட்ட எந்த சொத்துக்களை? என்றெல்லாம் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழும். இதற்காகத்தான் பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள் தமது சொத்து விவரங்களைப் பொது மக்கள் பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பது. இதை நிபந்தனையாகச் சொன்னவர்கள் இன்று வரை செய்து காட்டவில்லையே?

அ. இ. அ. தி. மு. க. வில் லஞ்ச ஊழல் மலிந்து விட்டதை மட்டுமின்றி, கட்டுக் கோப்பின்மையும் கோஷ்டி மனப்பான்மையும் அதிகரித்து விட்டதையும் சரித்திரம் காணாத அளவில் அமைச்சரவையை விஸ்தரித்திருப்பதன் மூலம் எம். ஜி. ஆர். ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

மூலக் கனல்

நா. பார்த்தசாரதி

அத்தியாயம் 23

எதிலும் தர்ம நியாயங்களைப் பற்றிக் கவலைப்பட்டிராத அவன் இயக்கத்து ஆட்கள் அரசியலிலும் அப்படித்தான் இருந்தார்கள். கிடைத்த சந்தர்ப்பத்தை உடனே பயன்படுத்திக் கொண்டு முன்னேறவும், பணம் பண்ணவும் ஆசைப்பட்டார்கள். இரு சித்த ஸ்வாதீனம் அற்றவனாகி மாதக் கணக்கில் படுத்த படுக்கையாகி மருத்துவமனையில் விழுந்து விட்டான் என்றதும் அவனது எதிரிகள் பலருக்குக் கொண்டாட்டமாகி விட்டது. பத்திரிகைகளில் அவனது இயக்கத்தைச் சார்ந்த ஆட்களே ஜாடை மாடையாக அவனைக் குறிப்பிட்டு 'லஞ்ச ஊழல் பேர்வழிகள் பதவி விலகியாக வேண்டும்'— 'சொத்துக் கணக்கைப் பகிரங்கமாக வெளியிட்டாக வேண்டும்' என்றெல்லாம் எழுத ஆரம்பித்தார்கள். அவன் கட்சிக்காகவும், இயக்கத்துக்காகவும் பம்பரமாக ஓடியாடி உழைத்துச் சிரமப்பட்ட நாட்களைப் பற்றிய விசுவாசம் இப்போது யாருக்கும் இருக்கவில்லை. யானை வலுவிழந்து தளர்ந்து படுத்தால் எறும்பு கூட அதன் காதில் புகுந்து கடித்துவிட முடியும். கண் முன் விழுந்த எலும்புத்துண்டிற்காகத் தெரு நாய்கள் அடித்துப் பிடுங்கிக் கொள்வது போல் பதவிக்காக மனிதர்கள் நாயாகப் பறந்தார்கள். அசிங்கமான அளவு பதவியை அடைய அவசரப்பட்டார்கள். இவ்வளவிற்கும் நடுவில் வேறு ஏதோ வேலையாக மாநிலத் தலைநகருக்கு வந்திருந்த சின்னக் கிருஷ்ணராஜ உடையார் அவனுடைய அரசியல் எதிரி என்று அவனே கருதியும் வித்தியாசம் பாராமல் அவனை மருத்துவமனைக்கு வந்து பார்த்து ஆறுதலாகச் சில வார்த்தைகள் சொல்லி விட்டுப் போனார். அவருடைய தொடர்ந்த பெருந்தன்மைக் குணம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. சின்னக் கிருஷ்ண ராஜன் பிறந்த அதே ஊரில், அதே ஜமீன் அரண்மனையில் அதே தந்தைக்கு மகனாகப் பிறந்தும் தன்னிடம் ஏன் அந்தப் பெருந்தன்மையும் பண்பாடும் சிறிதும் வளரவில்லை என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. எவ்வளவோ யோசித்தும் பொருள் விளங்காத புதிராயிருந்தது அது.

'பத்திரிகையாளன் எழில் ராஜா தன்னைக் கடத்தியவர்களிடமிருந்து தந்திரமாக உயிர் தப்பி விட்டான்' — என்று டாக்டர் சொல்லிய பொய் இருவிடம் பல மாறுதல்களை உண்டாக்கியது. சித்தப் பிரமை நீங்கிச் சற்றே தெளிவும் தென்படத் தொடங்கியது அவனிடம். கட்சியில் எம். எல். ஏக்களிடமும் செயற்குழு உறுப்பினர்களிடமும் அவனுக்கு எதிராகக் கையெழுத்து வேட்டை நடப்பதாகக் கன்னையன் மூலம் தகவல் தெரிந்தது. அவனைக் கீழே தள்ளுவதற்குத் தாண்டவராயனே பணம் செலவழிக்க ஆரம்பித்து விட்டதாகவும் தெரிந்தது. தன்னைச் சுற்றியிருந்த எல்லாரும் எல்லாமும் குமட்டியது அவனுக்கு. தன்னைக் காண வந்த தாண்டவராயனைத் தான் திட்டியதும் பார்க்க மறுத்ததுமே இன்று அவன் தன்னை எதிர்ப்பதற்குக் காரணமென்று சுலபமாகவே அனுமானிக்க முடிந்தது.

நம்பிக்கையின்மையின் காரணமாக எந்தச் சமயத்திலும் மேற்பகுதியில் ராஜிநாமாவை டைப் செய்து கொள்ள ஏற்ற வகையில் அவன் உட்பட அனைத்து எம். எல். ஏக்களிடமும் இடம் காலி விட்டு வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கி வைத்திருந்தது கட்சிமேலிடம். இப்படிக் கையெழுத்து வாங்கி வைத்துக் கொள்வது தான் பாதுகாப்பான ஏற்பாடு என்று அவனே கட்சி மேலிடத்துக்கு அன்று யோசனை சொல்லியிருந்தான். அப்போதுதான் பயப்படுவார்கள், கட்டுப்பட்டு நடப்பார்கள் என்று முதல்வருக்கு அவனே யோசனை சொல்லியிருந்தான். இப்படி வெள்ளைத்தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கும் வழக்கம் அதற்கு முன்பு இருந்ததில்லை. இன்று அந்தக் கையெழுத்து அவனுக்கே உலை வைத்துவிடும் போன்ற நிலைமையை உண்டாக்கியிருந்தது. வயதுக்கும் அனுபவத்துக்கும் மதிப்பு மரியாதை, உழைத்துப் பாடுபட்ட தியாகியை உயர்த்துதல், போன்ற மதிப்பீடுகள் மாறிக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யாரும் எத்தகைய பெரிய நாற்காலிக்கும், பதவிக்கும் ஆசைப்பட்டு அதில் ஏற்கெனவே இருப்பவரைக் கீழிறங்கச் சதி செய்யலாம் என்ற நிலை இன்று ஏன் வந்தது என்று அவனே இப்போது யோசித்தான். உடலும், மனமும் பலவீனமான அந்த நிலையில் படுத்த படுக்கையாக இருந்து அப்படி யோசிப்பது கூடச் சுகமான அனுபவமாக இருந்தது அவனுக்கு.

உலகில் எதிலுமே மதிப்பு இல்லாமல் எதையுமே உயர்வாக நினைக்காமல், எதையுமே நம்பாமல் பணம், பதவி இரண்

டுமே குறியாக உள்ள ஒரு தலை முறையைத் தன் போன்றவர்களே உருவாக்கி விட்டு விட்டோமோ என்று மிகவும் கூச்சத்தோடு இப்போது உணர்ந்தான் அவன். தான் தளர்ந்து விழுந்து விட்டதற்காக உள்ளூர மகிழ வேண்டிய தன் அரசியல் எதிரி உடையார் தன்னைத்தேடிவந்துபார்த்துஆறுதல்கூறுகிறார். தான்உடல்நலமற்றிருப்பதற்காக உண்மையிலேயே தன்னைத் தேடி வந்து அநுதாபமும் ஆறுதலும் கூற வேண்டிய தன் கட்சிக்காரர்கள் தனக்குக் குழி தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். 'வேல்யூஸ்' என்றும் மதிப்பீடுகள் என்றும் எதைப் பற்றியும் அவன் இளமையில் கவலைப் பட்டதில்லை. அவற்றை அறவே இலட்சியம் செய்யாததோடு சடுமையாக எதிர்த்துமிருக்கிறான் அவன். இன்றோ அவனே அவைகளைப் பற்றிச் சிந்திக்க நேர்ந்திருந்தது. காரணம் அவனே அவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தான்.

'தன் மகன் பிழைத்து விட்டான். அவன் சாகவில்லை' — என்று டாக்டர் சொல்லியதும் அதற்காக அவன் அதுவரையில் நம்பியிராத கடவுளுக்குக் கூட நன்றி கூறத் தவித்தது அந்தரங்கம். நேர்மையையும், சைகத்தத்தையும் கட்டிக் காக்க எழுத்து மூலம் போராடும் அந்த இளம் பத்திரிகையாளன் தன் மகன் என்றறிந்த போது அவனுக்குப் பெருமிதம் பிடிபடவில்லை. அவனைக் கொலை செய்யத் தானே ஆள் ஏவித் தூண்டினோம் என்று நினைக்கவே இப்போது அருவருப்பாக இருந்தது. பதவியும் புகழும் ஏற்பட்ட



கொலை பாதகத்துக்குத் தன்னைத் தூண்டிவிட்டிருக்கின்றன என்பதைமறுபடிநினைத்துப் பார்த்த போது நூதனமாக இருந்தது. ஆயிரம் பேர் புகழ்கிற அளவு உயரத்துக்குப் போய் விடுகிற ஒருவன் — ஒரே ஒருவன் இகழ்வதைக்கூடப்பொறுத்துக் கொள்ள முடியாத அளவு கர்வம் படைத்தவனுகி விடுவதைத் தவிர்க்க முடியாதுதான். 'புகழ் கள்ளை விடப் போதை மிகுந்தது' — என்று பலமுறை பலருடைய வாசகங்களாகக் கேள்விப்பட்டிருந்த வாக்கியத்தின் உண்மையான அர்த்தம் இப்போது தான் அவனுக்குப் புரிவது போலிருந்தது.

இன்று இந்தப் பலவீனமான வீழ்ச்சி நிலையில் சுய விசாரணையிலும் சுயவிமர்சனத்திலும் ஈடுபட்ட அளவு இதற்கு முன்பு எந்த நாளிலும், எந்த நாழிகையிலும் அவன் மனம் ஈடுபட்டதே இல்லை. தன்னைத் தானே திரும்பிப் பார்த்து உள் முகமாக மடக்கி மடக்கி விசாரிக்கும் ஆத்ம விசாரணை என்பதை எல்லாம் அவன் அநுபவிக்க நேர்ந்ததே இல்லை. அந்தந்த விநாடிகளில் எப்படி எப்படித் தோன்றியதோ அப்படி, அப்படி எல்லாம் தான் இதுவரை அவன் வாழ்ந்திருந்தான். முன் யோசனை பின் யோசனைகளில் ஈடுபட அவனுக்கு நேரமிருந்ததில்லை. எந்த முன்னேற்றமும் ஜெட் வேகத்தில் தன்னை நாடி வர வேண்டுமென்று தவித்து ஓடியிருக்கிறான் அவன்.

சென்னை கம்பன் விழா கல்லூரி மாணவ, மாணவியர் கருத்தரங்கு. மருத்துவக் கல்லூரியில் படிக்கும் செல்வி. சுதாவை அடுத்து செல்வன் ராம சுப்பிரமணியன் பேச்சின் ஆரம்பத்திலேயே ''என்றும், எங்கும் அம்மையாரை ஒட்டிப்பேசினால் ஆபத்து ஒன்றும் இல்லை'' என்று கூறிக் கலகலப்பை உண்டாக்கினார். அவர் பேசிய பேச்சை ஒட்டி செல்வி. சுதா ஒரு கருத்து விளக்கம் கூற, மற்றொரு மாணவி அதை மறுத்துக் கூற, சமயோசிதமாக, ''இரு பெண்களின் கருத்து வேறுபாடு நாட்டையே உலுக்கும் தன்மையயுடையது; இதை நாம் நன்கு அறிந்தவர்கள்'' என்று கூறிப் பெருத்த கைத்தட்டல்களைப் பெற்றார் ராமசுப்பிரமணியன்.

—ராஜீவி நரசிம்மன்.



தடுக்கி விழுந்து, தளர்ந்து படுத்த பின்பே தான் வந்த வேகத்தில் தன் காலடியில் யார், யார் எது எது சிக்கி, மிதிபட்டு, நசுங்கியிருக்கக் கூடும் என்பதே உணர்வில் பட ஆரம்பித்தது. வேகத்தைப் பற்றி நினைத்து ஒரிரு கணங்கள் பின்னால் திரும்பிப் பார்ப்பதற்கே நிதானம் தேவைப்பட்டது. தலை தெறிக்க முன்னேறி ஓடுகிறபோதே பின்னால் திரும்பிப் பார்ப்பது என்பது சாத்தியமில்லை. பின்னால் திரும்பிப் பார்க்க வேண்டுமானால் முதலில் முன்னேறி ஓடுவதிலிருந்து விடுபட்டு நிற்க வேண்டும். அல்லது நிறுத்தப்பட வேண்டும். இப்போது அவன் தளர்ந்து நின்று போயிருந்தான் அல்லது நிறுத்தப்பட்டிருந்தான். முன்னேறித் தலை தெறிக்க ஓடாத, அல்லது ஓடமுடியாத காரணத்தால் பின்நோக்கித் திரும்பிப்பார்ப்பது இந்த விநாடியில் சுலபமாயிருந்தது. தான் ஓடிவந்த ஜெட் வேகத்தில் தனக்குத்தெரியாமல் தன் சொந்த மகனை மிதிபட்டு அழிந்திருப்பானு என்கிற பயமும், பதற்றமும் வந்த போதுதான் இன்று அவனுடைய ஓட்டமே நின்றது. நலிந்துபோன மனத்தோடு குழம்பிக் குழம்பி அவன் மனநோயாளியாகவே ஆகியிருந்தான். அவன் தங்கியிருந்த மாடவீதி மருத்துவமனையில் அவனுடைய வழக்கமான டாக்டரோடு அவருக்கு வேண்டிய நண்பரான ஒரு சைக்கியாட்ரிஸ்ட்டும் அவனை வந்து பார்த்துக் கொண்டிருந்தார். அந்த டாக்டர்களும் வேணுகோபால சர்மாவுமாக அவனது உடல்நிலை தேறுவதற்காக ஒரு தத்ரூபமான நாடகத்தை அடிக்கடி அவன் முன் நடித்துக்காட்ட வேண்டியிருந்தது. உண்மை நிலைகளையும், வேறு விவரங்களையும் அவனிடம் பேசியோ, விசாரித்தோ, அவனைக் குழப்பாமலிருக்க டாக்டர்களும், சர்மாவும் உதவியாளன் கன்னையாவும் தவிர வேறு யாருமே இருவைச் சந்தித்து விடாமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரு எது,எதை விசாரித்தால் எப்படி எப்படிப் பதில் சொல்லவேண்டும் என்று நர்ஸுகளுக்கும், வேலைக்காரிகளுக்கும் கூடப் பல முறை முன்னேற்பாட்டுடன் ஒத்திகை நடத்திச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. தினசரி சைக்கியாட்ரிஸ்ட்டு இருவைச் சந்திக்கும் போது சர்மாவும் அவரோடு உடனிருந்தார்.

''உங்க மகன் தப்பிச்சுட்டான். மறுபடி ஆபத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாதுன்னு ஜாக்கிரதையா இருக்கான். நீங்க கவலைப் படாம இருங்கோ'' — என்று சர்மா தன்னிடம் கூறும்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் இரு அவரிடம் தன் ஆசையை வெளியிடத் தவறியதில்லை.

''சாமி! ஒரு தடவை அவனை இங்கே கூட்டிக்கிட்டு வாங்க. இல்லாட்டி என்னையாவது அவன் இருக்கற இடத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போங்க... அவனுக்கு என்னைப் பிடிக்காது! என்னைப் பத்தி ரொம்பக் கண்டிக்கத் திட்டி எழுதியிருக்கான்.... இருந்தாலும் அவன் கிட்ட நான் மன்னிப்புக் கேட்கக் கூட அருகதை இல்லாதவன்...''

இந்த ஆசையை அவன் கண்ணீரோடும், கலங்கி நெகிழ்ந்த குரலோடும் வெளியிடும்



சமயங்களில் எல்லாம், ''கொஞ்ச நாள் பொறுத்துக்குங்கோ! அவன் மனசை மெல்ல மெல்ல மாத்தி நானே அவனை இங்கே கூட்டிண்டு வரேன்'' — என்று பதில் சொல்லிச் சர்மா திருவைச் சமாளித்துக் கொண்டு வந்தார். திருவுக்கே தன் மகன் தன்னைப் பார்க்க ஒப்புக் கொண்டு வருவானா என்பதில் சந்தேகமும் தயக்கமும் இருந்தன. லஞ்ச ஊழல் பேர்வழி, பதவியை துஷ்பிரயோகம் செய்து பணம் பண்ணியவன், என்றெல்லாம் தன் மேல் ஏற்கெனவே மகனுக்கு இருக்கும் வெறுப்புக்களைத் தவிரக் கொலைக்குத் தூண்டி விட்டு ஆள் அனுப்பியதே தான்தான் என்ற சந்தேகமும் வந்திருந்தால் அவன் எப்படித் தன்னை ஒரு பொருட்டாக மதித்துச் சந்திக்க வருவானென்ற சந்தேகமும், பயமும், தயக்கமும், கூச்சமும் எல்லாம் திருவுக்குள் இருந்தன. வெளியே விவரித்துச் சொல்லவே கூடக் கூசும் இரகசியக் காரணங்களாக இருந்தன அவை. தாறுமாறாகக் கரைகளை அழித்துக் கொண்டு காட்டு வெள்ளமாகப் பெருகிய காரணத்தால் அருமை மனைவியை இழந்திருந்தான் அவன். அரசியலில் தன்னை ஆளாக்கி, உருவாக்கி விட்ட பொன்னுச்சாமி அண்ணனுக்குத் துரோகம் செய்திருந்தான். சொந்த மகன், மைத்துனன் எல்லோருக்கும் துரோகங்கள் செய்திருந்தான். துரோகங்களை சகஜமான விளையாட்டைப் போல் செய்கிற பலரை உருவாக்கியிருக்கும் இன்றையசூழ்நிலைக்குத் தானும் ஒரு முன்மாதிரியாக வாழ்ந்திருப்பதாகவே இப்போது அவனுக்குத் தோன்றியது. அவனுடைய எண்ணங்கள் அனைத்தும் வெறும் கழிவிரக்க நினைவுகளாகவே இருந்தன. திருத்திக்கொள்வதற்கு வாழ்க்கை அதிகமாக மீதமில்லாத காலத்தில் ஏற்படும் கழிவிரக்க நினைவுகளால் யாருக்கு என்ன பயன் விளைய முடியும்?

'நான் முடிந்து கொண்டிருக்கிறேன். என் மகனாவது நல்லவனாக — யோக்கியனாக — யோக்கியதையின் காரணமாக ஒரு மனிதனுக்கு ஏற்படுகிற தார்மீகத் துணிவுடனும் சர்வத்துடனும் உலகில் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும்— புகழ் பெறவேண்டும்' என்று தனக்குள் பிரார்த்தித்துக்கொள்ளத் தொடங்கியிருந்தான் திரு. இதுவரை பிரார்த்தனைகளை அவன் கிண்டல் செய்திருக்கிறான். இகழ்ந்திருக்கிறான். ஆனால் இன்றென்னவோ தன்னையறியாமலே தன் அருமை மகனின் நலனுக்காகப் பிரார்த்தனை செய்யத் தோன்றியது அவனுக்கு. அவனுடைய வற்புறுத்தல் பொறுக்க முடியாமல் எழில்ராஜாவைப் பார்த்துப் பேசி அங்கே அழைத்து வருவதாகக் கூறிவிட்டுச் சர்மா புறப்பட்டுப் போனார். அவர் போன சிறிது நேரத்துக்கெல்லாம் உதவியாளன் கன்னையா மாலைத் தினசரியுடனும் ஒரு முக்கியமான செய்தியுடனும் திருவைச் சந்திக்க அவசர அவசரமாக வந்து சேர்ந்தான். அப்போது டாக்டர், நர்ஸ்கள் யாரும் திருவின் அருகில் இல்லை. அதனால் கன்னையனுக்குப் போதுமான தனிமை திருவிடம்கிடைத்தது. (தொடரும்)

வட்டமேஜை

● கல்கி வழங்கும் 'நேரம் நல்ல நேரம்' கேட்டேன்; சுவைத்தேன்; மகிழ்ந்தேன். பெருந்தலைவரைப் பற்றிய தங்களின் கேள்விகளும், ஐயா அவர்களின் பதில்களும் அருமை. அடுத்த வார 'நேரம் நல்ல நேரம்' பகுதிக்காகக் காத்திருக்கிறேன்.
சீர்காழி, க. இளங்கோ.

● 'டிபரன்ட் ஸ்ட்ரோக்' ட. வி. தொடரின் கதாநாயகனான குட்டிச்சிறுவன் பற்றிய செய்தித் துணுக்கில், அவன் பெயர் 'ஆர்னல்ட்' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கதாபாத்திரத்தின் பெயராகும். அச்சிறுவனது சொந்தப் பெயர், 'கேரி கோல்மான்'
பம்பாய், சௌந்தர்.

● பொற்கோயில் வளாகத்தில் உயிர்நீத்த மாவீரன் எம். குப்புசாமி அவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி அவர்களின் குடும்பத்தாருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் இரும்புக் கம்பி (Fitter) வேலை செய்யும் தொழிலாளர்களாகிய நாங்கள் எங்களால் இயன்ற அளவு இங்கு பணம் வசூலித்து அதற்குச் சமமான இந்திய ரூபாய்க்கான டிராப்ட் வாங்கி திருமதி. காசியம்மாளுக்கு அனுப்பியுள்ளோம்.
குவைத்.
தமிழ் நண்பர்கள்.

(மேற்படி கடிதத்துடன் இருபது அன்பர்களின் நன்கொடையான ரூ. 700-க்கான டிராப்டின் ஜெராக்ஸ் நகல் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்.)

● வெள்ளை உடை பற்றிய கேள்விக்குப் பதில் சொல்லி இருக்கும் 'தராசு' மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்ஸ்களை அந்த லிஸ்டில் சேர்க்கவில்லையே! மறதியா?
கிருஷ்ணகிரி, ஆர். பூபாலன்

● எஸ். பி. முத்துராமன் பதில்கள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி.
வேதாரண்யம்
பா. தியாகராஜன்

● அமைச்சர் எஸ். டி. எஸ். ஸுடன் பேட்டி நன்றாக இருந்தது. கேள்விகளில் முதிர்ச்சி; பதில்களில் ஒரு தெளிந்த அரசியல்வாதியின் அனுபவம். இருந்தபோதிலும் கொ.ப.செ. கேள்விக்கு அவர் ஏன் ஜகா வாங்கியிருக்கிறார்?
சென்னை-45,
கணபதி சுப்பிரமணியம்.

● ''தராசு அவர்களின் உயிர் நண்பரின் பிரிவு (திருமதி சிவசங்கரியின் கணவர்) குறித்த அவரின் துயர் நிறைந்த மன வெளிப்பாடு கண்களைக் குளமாக்கி விட்டது.''
ஊரூர்வெளிக்கடை.
டி. ராஜன்.

● ஆர்.கே.நாராயண், ஆர். கே லக்ஷ்மண் இராசிபுரத்துக்காரர்கள் என்ற செய்தி— எங்களுக்கெல்லாம் மகிழ்வும் — பெருமையும் தருவன.
ராசிபுரம்
டி. ஆர். பாரத்மணி

● ''கல்கி'' 26.8.84— இதழில் முதல் பக்கத்தில் அலசல் பகுதியில் இலங்கை பிரச்சினைக்காக மாணவர்கள் நடத்திய ஊர்வலங்கள் பற்றிப் பொது மக்களின் கருத்துக்களைக் கூறியிருந்தீர்கள். உண்மை அறியாத பொது மக்களுக்கு ஒரு விளக்கம்:



சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் தடியடி பட்டவர்களில் நானும் ஒருவன். இரவு முழுவதும் பிரச்சாரத் தட்டிகளைத் தயார் செய்து விட்டு, மறுநாள் காலை அண்ணா சாலைக்குச் சென்று எங்கள் தோழர்களுடன் கலந்து கொண்டோம். சுமார் 12 மணி அளவில் அனைவரும் கோட்டையை நோக்கிப் பயணமானோம். சுமார் 10,000 பேரைக் கொண்ட அமைதிப் படை.

ஊர்வலம் தொடங்கிய சிறிது நேரத்தில், அடையாளந் தெரியாத சிலரால் கல்லெறியப்பட்டது. அதை தொடர்ந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி தடியடி நடத்தப்பட்டது. ஓடிய மாணவர்களை ஜீப்பில் துரத்தி அடித்தனர். சிலர் சுரங்கப் பாதைக்குள் சென்று பதுங்க போலீஸார் உள்ளிறங்கி, இருபுறமும் கதவை மூடி அடித்த அடிகள் வார்த்தையில் அடங்கா. நாங்கள் சிலர் சர்ச் பார்க் கான்வென்ட்டிற்குள் புகுந்து ஒட அங்கிருந்த ஆசிரியர்கள் எங்களுக்குப் புகலிடம் தந்தனர். அங்கிருந்த சகோதரிகள் நாங்கள் எதுவும் கேட்காமலேயே, எங்கள் காயத்திற்குக் கட்டுப் போட்டதோடு நில்லாமல் முதலுதவிகளைச் செய்தனர்.

ஆனால் போலீசாரோ நாங்கள் சர்ச் பார்க் கான்வென்டிற்குள் சென்றதால் தான் தடியடி நடத்தியதாகக் கூறுகின்றனர். இதற்கு அக் கான்வென்டின் ஆசிரியர்களே மறுப்பு தெரிவித்துள்ளார்கள்.
சென்னை—
பாதிக்கப்பட்ட மாணவன்.
(கடைசி கடிதம் பரிசு பெறுகிறது.)

அமைதிப் படைத் தடியடி!



சிரஞ்சீவி **Dr. S.** வஸந்த்குமார், M.B.B.S., சௌ. சித்ரா B.A.,

வாழி மங்கலம் நிறை மணமக்கள்


இந்து சிட் பண்ட்ஸ் (ம) பி. லிமிடெட், நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு S. சுப்பராயன் M.A., அன்னாரின் புதல்வி சௌபாக்கியவதி **S. சித்ராவிற்கும்**, திரு **N.** சம்பத்குமாரன் அன்னாரின் குமாரன் **Dr. S. வஸந்த்குமாருக்கும்**, சென்னை ஆபட்ஸ்பரியில் 24-8-84 அன்று நடந்த திருமண வைபவத்திற்கும் ஏராளமான நண்பர்களும், பிரமுகர்களும் வந்து அகமகிழ வாழ்த்தினர்.

மணமக்கள் மங்கலமெல்லாம் பெற்று இனிதே வாழ
நலம் தரும் நாயகன் அருள் வேண்டுகிறோம்.

தனுர் ஆஸனம்

முதுகெலும்புத் தொடர் என்பது 33 அல்லது 34 தனித்தனித் துண்டு எலும்புகள் இணைந்த ஒன்று. கம்பியில் பாசிமணியைக் கோத்து மாலை தொடுக்கிற மாதிரி, தண்டு வடம் என்கிற நரம்புத் தொகுதியில் இவை கோக்கப்பட்டிருக்கும். அதாவது முதுகெலும்புத் துண்டுகளில் உள்ள சிறு துளைகளின் வழியே இந்தத் தண்டுவடம் என்கிற நரம்பு மண்டலம் தலைப்பகுதியிலிருந்து கீழ்ப்பகுதிக்கு வருகிறது. துண்டு முதுகெலும்புகள் ஒன்றுடன் ஒன்று உராயாமல் பாதுகாப்பதற்காக இடையிடையே குஷன் மாதிரி ஒரு பொருள் உண்டு.

முதுகெலும்பை வில்லாக வளைக்கிற பயிற்சி ஒன்று இருக்கிறது. அதுதான் தனுர் ஆஸனம். உடம்பு இப்படி வில்லாக வளைகிற போது தண்டுவடம் எனும் நரம்பு மண்டலம் புத்துணர்ச்சி பெறுகிறது. நாள் முழுவதும் குனிந்து குனிந்து வேலை செய்து கொண்டிருக்கிறோம் அல்லவா? அதற்கு மாற்றாகத் திகழ்கிறது. வயிறு நன்கு அமுங்குகிறது. நெஞ்சு விரிகிறது. நுரையீரல்கள் பயன்பெறுகின்றன. கால், கைகள் உருவிவிடப் பட்டாற்போலாகின்றன. கழுத்துக்கும் நல்ல பயிற்சி கிட்டுவதால் தைராய்ட் சுரப்பி சுறுசுறுப்படைகிறது.





முதுகெலும்புப் பகுதியில் காயங்கள், புண் ஏற்பட்டிருந்தாலும், இரத்த அழுத்தம், இருதய நோய் இருந்தாலும் அவர்கள் தனுர் ஆஸனம் செய்யக்கூடாது.

ஸ்லிப்டிஸ்க் போன்ற முதுகெலும்பு நோய் உள்ளவர்கள், டாக்டர்கள், யோகாசன நிபுணர்கள் மேற்பார்வையில்தான் பயிற்சி செய்ய வேண்டும்.

உடலின் வளையும் தன்மை சீரடையவும், முதுசெலும்பை உறுதியானதாக ஆக்கவும், கூன் விழுவது போன்றவற்றைத் தவிர்க்கவும் தனுராஸனத்தை நம்பலாம்.

முதுகெலும்பும் தண்டுவடமும் பலப்படவும் தைராய்டு சுரப்பி நன்கு செயல்படவும், ஆஸ்துமா நோயை அண்ட விடாமல் தடுக்கவும் வயிற்றுப் பகுதியில் அதிகமாகச் சதை போடுவதைத் தவிர்க்கவும் இது உதவுகிறது.

தனுசு என்பது வில். வில் வளைந்ததுபோல் தோற்றம் தரும் ஆஸனம் தனுர் ஆஸனம்.

பயிற்சி முறை:

வயிறு தரையோடு ஒட்டியவாறு குப்புறப் படுக்க வேண்டும். தாடை தரையோடு படிந்திருக்க வேண்டும். கால்கள் ஒன்றோடொன்று நெருங்கி இருக்க வேண்டும். உள்ளங்கைகளை மேல் நோக்கியவாறு, கைகளை உடம்போடு ஒட்டி நீட்டிக் கொள்ள வேண்டும்.

இனி, கால்களை முழங்கால் பகுதியில் மேல் நோக்கி மடக்க வேண்டும். கணுக்கால்களை அந்த அந்தக் கைகளால் பிடித்துக் கொள்ளவேண்டும். பின்னர் மடங்கிய கால்களை அப்படியே மேலே உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தும் போதே தலை, மார்பு வரை உடலையும் உயர்த்த வேண்டும். கழுத்தை உயர்த்திப் பார்வை மேல் நோக்கி இருக்க வேண்டும்.

வயிறு மட்டும் தரையைத் தொடுகிற நிலையில், கால்கள், தலை, கழுத்து, நெஞ்சு கைகள் எல்லாம் வில்லாக வளைந்து இருப்பது சரியான நிலை. கைகள் மடங்கக்கூடாது.


இறுதி நிலையிலும் முழங்கால்கள் ஒட்டி இருக்கவேண்டும். கால் கட்டைவிரல்கள் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். சாதாரணமாக சுவாசிக்கலாம்.

குறைந்தது முப்பது விநாடி இப்படி இருக்கலாம். அதிகபட்சம் ஒரு நிமிடம்.

மெல்ல, முழங்காலை மடக்கி, உடம்பைத் தரைக்குக் கொண்டு வர வேண்டும். முழங்கால்கள், மார்பு, தாடை எல்லாம் தரையைத் தொட்டதும் கைகளை விட்டுவிட்டுப் பழைய நிலைக்கு வந்து விடலாம்.

எடுத்த எடுப்பிலேயே கச்சிதமான நிலையை அடைய இயலாது. பரபரப்பின்றி படிப்படியாக ஆசனப் பயிற்சி செய்து முன்னேறவும். (விளக்கம் தருபவர் திரு. வி. எஸ். உதயகுமார் யோகா பிரதர் ஹூட், சென்னை—2.

-சுப்ரபாலன்



தனுராசனம் செய்பவர் பரபோத் ஜெயின்
புகைப்படம்: தாமு

நெருப்பு மலர்

7

அன்புள்ள கீர்த்திக்கு,

இக்கடிதத்தை நான் பெங்களூரிலிருந்து எழுதுகிறேன். நாட்டிய நிகழ்ச்சிக்காக இங்கு வந்திருக்கிறேன். வரிசையாக மூன்று நிகழ்ச்சிகள். அதன் பின் மைசூரில் ஒன்று. முடித்துக் கொண்டு 18-ம் தேதி புதன்கிழமை காரிலேயே சென்னை திரும்புகிறேன். அப்புறம் பத்து நாட்கள் வெளியூர்ப் பயணம் எதுவும் இல்லை. மெட்ராஸிலேயேதான் இருப்பேன். நீ இல்லாமல் வீடு வெறிச் சென்று இருக்கிறது. எந்த அறைக்குப் போனாலும் உன் ஞாபகம் வந்து மனத்தைக் கஷ்டப்படுத்துகிறது. என்னை விட நாகம் தான் அதிகம் கஷ்டப்படுகிறாள். குழந்தை இல்லாமல் வீட்டில் ஒன்றுமே இல்லை என்பதை நொடிக்கு நூறு தரம் சொல்கிறாள். நான் புறப்பட்ட போது அவளுக்கும் உடம்பு சரியில்லை. நல்ல ஜுரம். நம் டாக்டரைப் பார்க்கச் சொல்லிவிட்டு நான் கிளம்பி வந்து விட்டேன். நேற்று டெலிபோனில் பேசிய போது தேவலாம் என்றாள். கூடவே உன்னை விசாரித்ததாக எழுதச் சொன்னாள்.

நீ எப்படி இருக்கிறாய்? உடம்பு ஒன்றுமில்லாமல் இருக்கிறாயா? ஹாஸ்டல் சாப்பாடு ஒத்துக் கொள்கிறதா? எனக்குச் சதா உன் நினைவுதான். வாரம் தவறாமல் என்னைத் தேய்த்துக் கொள். அப்போது தான் அந்த உஷ்ணத்திற்குச் சரியாக இருக்கும். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். கவர் இருந்தால் தான் சித்திரம் எழுத முடியும் என்பதை மறந்து விடாதே.

அப்புறம் சென்ற கடிதத்தில் நீ பிரிகேடியர் பாஸ்கரப்பாவையும், அவர் பிள்ளை அர்ஜுனையும் பற்றி மிகமிக உயர்வாக எழுதி இருந்தாய். அவர்கள் உனக்குச் செய்கிற உதவிகளையும், உன் மீது வைத்திருக்கிற அன்பையும் பற்றிக் குறிப்பிட்டிருந்தாய். படிக்கப் படிக்கச் சந்தோஷமாக இருந்தது. யாருமற்ற ஒரு அந்நிய இடத்தில் இப்படிப் பட்ட நட்பை தெய்வம் தான் உனக்குத் தேடித் தந்திருக்கிறது. எந்த நட்பையும் காப்பாற்றிக் கொள்கிற பொறுப்பு நம்மிடம் தான் இருக்கிறது. உனக்கு நான் சொல்லத் தேவையில்லை. அந்த நட்பைக் காப்பாற்றி மேலும் வளர்த்துக் கொள்கிற விவேகமும், ஆற்றலும் உன்னிடமுண்டு என்பதும் எனக்குத் தெரியும்.

உன் அப்பா உன்னையும், என்னையும் நிராதரவாக விட்டுப் பிரிந்த போது எனக்கு உதவியவர்கள் நண்பர்கள்தான். நாம் இன்று இந்த நிலைமையில் இருப்பதும் அந்த நண்பர்களால் தான். அப்போது என் உறவினர்களோ, அல்லது அப்பாவைச் சார்ந்தவர்களோ நமக்கு உதவ ஓடி வரவில்லை. அப்பாவின் காரியத்திலோ, துக்கம் கேட்கவோ கூட ஒருவரும் வந்து கலந்து கொள்ளவில்லை! நம் கஷ்ட நஷ்டத்தில் நண்பர்களைத் தவிர வேறு யாரும் பங்கெடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை. அதனால் நல்லபடியாக நடந்து கொள். திரு. பாஸ்கரப்பா சொட்டது போல் உனக்கு அவர்கள் வீட்டில் போய்த் தங்குகிற உத்தேசமிருந்தால் அதில் எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை. ஹாஸ்டலை விட அந்த இடம் சௌகரியமாக இருக்கிறபட்சத்தில் நீ அங்கே தங்கிக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. யோசித்து வசதிப்படி செய். திரு. பாஸ்கரப்பா அவர்களுக்கும், அர்ஜுனுக்கும் எனது நமஸ்காரங்களைத் தெரியப் படுத்து. அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி போகிறேன் என்கிறாய். நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறாய். அப்படியானால் அங்கு நிச்சயம் டெலிபோன் வசதி இருக்கும். வாரம் ஒரு முறையாவது அங்கிருந்து நீ என்னுடன் எஸ். டி. டி. போட்டுப் பேசக் கூடாதா? உன் குரலைக் கேட்டால் எனக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கும் தெரியுமா? இல்லாவிட்டால் அவர்கள் நம்பரை எழுதினால் நானாவது போன் பண்ணிப் பேசுகிறேன்.

படிப்பு எப்படி இருக்கிறது? அதிகநேரம் கண் விழித்துப் படிக்கிற ஆர்வத்தில் உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. வேறு என்ன விசேஷம்? பணம் ஏதாவது தேவையாக இருந்தால் தயங்காமல் எழுது. உடனே அனுப்புகிறேன். நான் சம்பாதித்தது, சம்பாதிக்கிறது எல்லாம் உனக்குத்தான் என்பது உனக்கே தெரியும். அதனால், தயக்கத்தினாலோ, வெட்கப்பட்டுக்கொண்டோ கேட்காமல் இருந்து விடப் போகிறாய்.


கடைசியாக ஒரு விஷயம். நீ டெல்லிக்குப் போய்க் கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாகியும் இன்னமும் நான் சொன்ன விஷ்ணு பிரஸாத் என்பவரை நீ போய்ப் பார்க்கவில்லை என்று தெரிகிறது. அவரை நீ அவசியம் சந்திக்க வேண்டும் என்பதற்காகத்

இந்துமதி

தான் அன்று உன்னை விட ஸ்டேஷனுக்கு வந்த போது விலாசம் தந்து நூறு முறை சொன்னேன். அது மட்டுமின்றி ஒவ்வொரு கடிதத்திலும் குறிப்பிட்டு எழுதியிருந்தேன். ஆனாலும் நீ போய் அவரைப் பார்க்கவில்லை. நேரமில்லை என்று சொல்லாதே. ஆக்ராவிற்கும், மற்ற இடங்களுக்கும் போக நேரமிருந்த மாதிரி இதற்கும் மனமிருந்தால் நேரம் கிடைக்கும். அவர் எனக்கு மிகவும் உதவி செய்தவர். உனக்கும் உதவி செய்யக் காத்திருப்பவர். அதனால்நாளைக்கே அவரைப் போய்ப் பார். பார்த்து விட்டு வந்து அடுத்த கடிதத்தில் அவரைப் பார்த்ததைப் பற்றி எழுது. உடனே அவசியம் நீ அவரைப் பார்த்தாக வேண்டும். ஏதோ எழுதினேன் என்றிருக்காதே. கடிதம் கிடைத்த மறுநாளே போய்ச் சந்தித்து, உடனே வந்து சந்திக்க இயலாததற்கான ஒரு நல்ல காரணத்தைச் சொல்லி அவரைச் சமாதானப்படுத்து.

வேறு ஒன்றுமில்லை. முடிந்தால் வியாழக்கிழமை 19–ம் தேதி மாலை என்னுடன் டெலிபோனில் பேசேன்.

இப்படிக்கு,
உன் அம்மா.



கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்த கிருத்திகாவிற்கு மனதிற்குள் மெலிதாசக் கோபம் ஒன்று ஏற்பட்டது. விஷ்ணு பிரஸாத்தைத் தான் போய்ச் சந்திக்கவேண்டும் என்பதற்காகவே அம்மா இந்தக் கடிதத்தை எழுதியிருப்பதாகப் பட்டது. இதுவரை எழுதிய அத்தனை கடிதங்களிலும் இதுபற்றிக் குறிப்பிட்டு விட்டாள். ஒரு கடிதத்திலாவது இந்த விஷ்ணு பிரஸாத்தைச் சந்திக்கிற விஷயம் இல்லாமல் இல்லை. இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிற இந்த விஷ்ணு பிரஸாத் என்பவர் யார்? நிறைய உதவிகள் செய்திருப்பதாக அம்மா எழுதியிருக்கிறாளே. என்ன உதவிகள்...? எங்கோ டில்லியில் இருக்கிற இந்த மனிதர் சென்னையில் இருக்கிற அம்மாவிற்கு எப்படி உதவியிருக்க முடியும்? ஒருவேளை அம்மா சௌதாமினியுடன் டில்லி வந்திருந்த சமயங்களில் உதவி செய்திருக்கக் கூடும். அல்லது இந்த விஷ்ணு பிரஸாத் அடிக்கடி சென்னைக்குப் போகிறவனாக இருந்து அங்கே அம்மாவைச் சந்தித்து உதவி இருக்கலாம். உதவி என்றால் என்ன மாதிரி உதவி...?

புரியவில்லை. ஆனால் என்ன காரணத்தினாலோ அவளுக்கு இந்த விஷ்ணுபிரஸாத்தை சந்திக்க வேண்டுமென்று தோன்றவில்லை.

ரேடியோவில் உரை நிகழ்த்துவதற்கு முன்பாக ஜனாதிபதி ரீகனின் குரல் சரி பார்க்கப்படுவதற்காக அவர் சில வார்த்தைகளைப் பேசவேண்டியிருந்தது. ரீகன் வேடிக்கையாக, ''எனது அன்பான அமெரிக்கப் பெருங்குடி மக்களே! உங்களுக்கு நான் ஒரு மகிழ்ச்சியான செய்தி சொல்லப் போகிறேன். இன்னும் 5 நிமிடங்களில் நமது விமானங்கள் ரஷியா மீது குண்டு வீசத் .துவங்கும். ரஷியா மீது நடவடிக்கை எடுப்பதற்கான உத்தரவில் இப்பொழுதுதான் நான் கையெழுத்திட்டேன்'' என்றார். விஷயம் அம்பலமாகவே வேடிக்கையாகக் கூட இப்படி விபரீத வார்த்தைகளைப் பேசலாமா என்று வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் அதிகாரபூர்வமான ஒலிபரப்புக்கு முன்னதாகக் கூறப்பட்டவைகளைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

—தகவல்: ம. வி. கிருஷ்ணசாமி.



பார்த்தே இராத அந்த மனிதரிடம் அவளுக்குள் மதிப்பு ஏற்படவில்லை. ஏன் என்பது அவளுக்கே பிடிபடவில்லை. எதுவானாலும் நாளை மாலை அர்ஜுனைச் சந்திக்கிற போது அந்தக் கடிதத்தைப் படித்துக் காட்டி அவனுடைய அபிப்ராயத்தையும் கேட்க முடிவு செய்தாள். அவன் சொல்கிறபடி செய்யலாம் என்ற நினைப்பில் கடிதத்தை மடித்து மறந்து போகாமலிருக்கக் கைப்பையில் வைத்து மேஜை விளக்கை அணைத்து விட்டுப் படுக்கப் போனாள்.

மறுநாள் மாலை ஆறு மணியளவில் ஹாஸ்டல் வாசலில் கிருத்திகாவை பிக்அப் பண்ணிக் கொண்ட அர்ஜுன் அவளின் கையைப் பற்றி லேசாக அழுத்தி. ''வாட்ஸ் ஒர்ரியிங் யூ கிருத்திகா...?'' என்று கவலையுடன் கேட்டதும் தான் தன் மௌனம் அவனை வெகுவாகப் பாதிப்பதைப் புரிந்து கொண்டாள் கிருத்திகா. உடனே பளிரென்று சிரித்து.

''ஓ... பெரிதாக ஒன்றுமில்லை அர்ஜுன். வீணாக உங்களையும் வருத்தப்படுத்தி விட்டேன் பாருங்கள்...'' என்று பழையகலகலப்பிற்கு வந்த சில நிமிடங்களில் வீடு வந்தது. காரை விட்டிறங்கி உள்ளே போன கிருத்திகா ''அப்பா எங்கே? ராம்சிங்...?'' என்பதைத் தான் முதலாவதாகக் கேட்டாள்.

''இப்போதுதான் ஜைப்பிற்குப் புறப்பட்டுப் போனார் மேம்சாப்.'' என்ற ராம்சிங் அவளைப் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தான். அவள் வந்து விட்டால் வீட்டில் ஒரு புது சந்தோஷமும், உற்சாகமும் நிறைவதைக் கவனித்தான். பிரிகேடியர் கூட மாறிப் போகிறார். சின்னக் குழந்தையாகச் சிரிப்பும், அரட்டையுமாக இருக்கிறார். கிருத்திகாவைத் தங்களுடன் வந்து தங்கச் சொல்லி அவர் கேட்டதும், அவள் மிக மென்மையாக, அவர் மனம் புண்படாத வகையில் மறுத்து விட்டதும் ராம்சிங்கிற்குத் தெரியும். ராம்சிங் கூட அவளிடம் ஒரு முறை அதைப்பற்றி பிரஸ்தாபித்து விட்டான். கெஞ்சுகிற குரலில் ''ஹாஸ்டலில் தங்குவதற்குப் பதிலாக இங்கேயே வந்து தங்கி விடுங்களேன் மேம்சாப். நீங்கள் இருந்தால் வீடு கலகலப்பாக இருக்கிறது மேம்சாப்...''

''அந்த வீட்டிலுள்ள அத்தனை பேரின் நிஜமான அன்பும் நெஞ்சைத் தொடச் சிரித்தாள் கிருத்திகா. ''ஆகட்டும் ராம்சிங். நல்ல நாளாகப் பார்த்து வருகிறேன்...'' என்றாள். ராம்சிங் விடவில்லை.

''நீங்கள் வருகிற நாளெல்லாம் நல்ல நாளாகத்தான் இருக்கும் மேம்சாப்...'' என்று சொல்லியிருந்தான்.

அப்போதும் அதையே நினைத்து ''சாப்பிட என்ன கொண்டு வரட்டும் மேம்சாப்...?'' என்று மட்டும் கேட்டான்.

''எது இருந்தாலும் கொண்டு வா ராம்சிங். நாங்கள் வாசல் புல் தரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்...''

''சரி சாஹேப்...''

புல்தரையின் கூடை நாற்காலியில் உட்கார்ந்த உடனே அர்ஜுன் மறுபடி கேட்

டான்: ''என்ன விஷயம் கிர்த்தி... ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?''

அவள் மௌனமாகப் பையைத் திறந்து அம்மாவின் கடிதத்தை எடுத்து நீட்டினாள். வாங்கிப் பார்த்த அவன் ''என்ன இது...?'' என்று அவளைப் பார்த்தான்.

''அம்மாவிடமிருந்து லெட்டர்.''

''அப்படியா என்ன எழுதியிருக்கிறார்கள்...?''

''திரும்பவும் அந்த விஷ்ணுபிரஸாத் என்பவரைப் போய்ப் பார்க்கச் சொல்லி எழுதியிருக்கிறாள். அதை எழுதாத கடிதமே இருக்காது அர்ஜுன். அதுவும் இந்த முறை கிட்டத்தட்ட அரை பக்கத்திற்கு அதே தான்...''

''எங்கே இருக்கிறார் அந்த விஷ்ணு பிரஸாத்...?''

''கிரேட்டர் கைலாஷில்...''

''பெரிய பணக்காரரா...?''

''எனக்கு எப்படித் தெரியும்...?''

''அவரைப் போய்ப் பார்ப்பதில் உனக்கென்ன இத்தனை தயக்கம்...?''

''எனக்கே காரணம் தெரியவில்லை அர்ஜுன். உன் மனசு அவரைப் போய்ப் பார்க்க வேண்டாமென்று சொல்கிறது...''

''உன் மனசு சொல்வதெல்லாம் எப்போதும் சரியாக இருப்பதில்லை கிருத்திகா. உதாரணத்திற்கு ஒன்று சொல்லட்டுமா? முதல் முதலாக ரயிலில் என்னைப் பார்த்ததும் உன் உள்மனசு என்ன சொல்லிற்று? இவன் வட இந்தியன், திமிர் பிடித்தவன், என்று சொல்லவில்லையா...? ஆனால் அது தவறாகத்தானே போயிற்று...?''

''இல்லை அர்ஜுன். உங்களைப் பற்றி என் உள்மனம் அப்படி நினைக்கவில்லை. பார்த்த முதல் பார்வையிலேயே உங்களைப் பற்றிக் கிட்டத்தட்ட அரை மணி நேரமாவது யோசித்திருக்கிறேன். மனத்துக்குப் பிடிக்காதவர்களைப் பற்றி நாம் அப்படி நினைப்பதில்லை. அதுவும் இந்த விஷ்ணு பிரஸாத்தைப் பற்றி அம்மா சொன்ன மறு விநாடியே மறந்து போய் விட்டேன். மீண்டும், மீண்டும் அம்மா கடிதத்தில் குறிப்பிடுகிறபோது தான் ஞாபகத்திற்கே வருகிறது. அதுவும் கூட ஒரு எச்சரிக்கை உணர்வுடன் கூடிய ஞாபகம். ஏதோ ஒரு விரும்ப இயலாத உணர்வு. ஆதாரமற்ற, காரணமற்ற உணர்வு என்று ஒதுக்கவும் இயலாத நிலை. அம்மா ஏன் அடிக்கடி இப்படி அழுத்தி அழுத்தி அவனைப் பற்றி-ஐயாம் ஸாரி அவரைப்பற்றி எழுதுகிறார் என்றும் தோன்றி, சொல்ல இயலாததாக ஏதோ ஒரு சந்தேகம்—''

''ரப்பிஷ்...'' என்று சற்றே முகம் வெக்கக் குறுக்கிட்டான் அவன். ''மனத்தைக் கண்டபடி அலையவிடக் கூடாது கிருத்திகா. இப்படியெல்லாம் நீ நினைப்பது தவறு என்று தோன்றுகிறது. உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, அம்மாவிற்காக ஒரு தரம் போய் அந்த விஷ்ணு பிரஸாத்தைப் பார்த்து விட்டு வந்து விடு. அப்புறம் போக வேண்டாம்...''

''சரி. அப்படியானால் நீங்களும் என்னுடன் வரணும். இரண்டு பேருமே போய்ப் பார்க்கலாம்...''

''நான் எதற்கு கிருத்திகா...? நான் எந்த வகையில் இதில் சம்பந்தப்பட்டவன்...?''

''இதில் சம்பந்தப்படாதவராக இருக்கலாம். ஆனால் என்னுடன் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்திற்காக வரக் கூடாதா...?''

''வரக் கூடாது என்று நான் சொல்லவில்லையே...? அவசியமா என்றுதான் கேட்டேன். நீ அவசியம் என்று நினைக்கிற பட்சத்தில் கூட வருகிறேன்...''

''எப்போது போகலாம்...?''

''நாளை சாயந்திரம்...?''

''ஓ. கே. வழக்கப்படி நான் ஹாஸ்டலில் காத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் வந்து பிக் — அப் பண்ணிக் கொள்ளுங்கள்...''

''முடிந்தால் அந்த விஷ்ணு பிரஸாத்துக்கு டெலிபோன் பண்ணி அப்பாயின்ட்மெண்ட் வாங்கிக் கொண்டு விடு...''

''சரி...''

அதோடு அந்தப் பேச்சு நின்றது. அவர்கள் வேறு ஏதோ பேச ஆரம்பித்த சிறிது நேரத்தில் பாஸ்கரப்பா வந்தார். ''ஹலோ மை டியர் சைல்ட்...'' என்ற அந்தக் கம்பீரமான குரலில் கிருத்திகாவின் நெஞ்சும், முகமும் மலர, ''ஹலோ அப்பா...'' என்ற அந்த நேரத்தில் விஷ்ணு பிரஸாத்தும் அம்மாவும் முற்றிலும் மறந்து போய், பழைய தெளிவுடன் பேசத் துவங்கினாள் அவள்...

(தொடரும்)



''உலகில் குற்றம் செய்யாதவர் யார் இருக்கிறார்கள்?''— என்றாள் சீதை

அனுமனுக்கு ஒரே வியப்பு.

''அம்மா! இராமனும், நீங்களும் என்ன குற்றம் செய்தீர்கள்?'' — இப்படி கேட்டான்.

''மெய்யான இராமன் கிடைத்தும், பொய்யான மானைக் கேட்டு அவரை வருத்தியது நான் செய்த குற்றம். பொய்யான மான் அது என்று நன்கு தெரிந்தும், என் பேச்சைக் கேட்டு, பிடித்து வரப் போனது அவர் செய்த குற்றம்'' என்றாள் அன்னை.

அனுமனுக்கு மீண்டும் சந்தேகம்.

''அம்மா! நான் என்ன குற்றம் செய்தேன்?'' என்றான் வியப்போடு.

''இரண்டு குற்றவாளிகளாகிய எங்கள் பேச்சைக் கேட்டு நடப்பது நீ செய்யும் குற்றம் அல்லவா?''

—இப்படிக் கேட்டாள் லோகநாயகி!

வேலூரில் உ. வே. திருமலாச்சாரியார் செய்த இலக்கியப் பேருரையிலிருந்து. ''சேலம் சக்தி.''

ஒலிம்பிக் அனுபவங்கள்!



✖ ஜம்ப்பால் பத்மநாபன்



✖ அடுத்த ஒலிம்பிக்ஸ் தென்கொரியா சியோலில்

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் 6 அடி ஏழரை அங்குலம் தாண்டி தங்கப் பதக்கம் சூடினார் 16 வயது மங்கை மேய்பார்த். என்றாலும் அவருக்கு ஒரு குறை! உலக ரிகார்ட் 6 அடி ஒன்பதரை அங்குலம் தாண்டிய பல்கேரிய ஜாயிடிமில்லா ஆண்டனேவாவின் ரிகார்டை முறியடிக்க முடியவில்லையே என்பதுதான். தங்கப் பதக்கம் பெற்றவருக்கும் ஒரு குறை என்றால் அதிசயமாக இல்லையா?

● ஓட்டப்பந்தய அமெரிக்க வீரர் கிராடி ஒரு கேமராவை எடுத்து செக்யூரிட்டி கார்டிடம் கொடுத்தார். தம்மைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபர்களையும் தம்மையும் சேர்த்துப் படமெடுக்கும்படி வேண்டினார். கிராடி அணிந்திருந்த சூட் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் சூடிய அன்டோனியோ மெக்கேயுடையது. இவரது அழகான சூட்டை யாரோ திருடிச் சென்று விட்டார். பத்திரிகையாளர் பேட்டி முடிந்ததும் மெக்கேயைத் தேடித் தாம் அணிந்திருந்த இரவல் சூட்டைக் கொடுத்தார்!

● அமெரிக்காவின் ஓட்ட வீராங்கனை மேரி டெக்கர் தங்கப் பதக்கம் நிச்சயம் கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டவர். மூவாயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் காலோசியத்தில் மேரி டெக்கரும் தென் ஆப்பிரிக்க ஜோலாபட்டும் ஓடிக் கொண்டிருக்கும் போது, அந்த அசம்பாவிதம் நடந்தது. இருவரது கால்களும் பின்னிக் கொண்டதால் தரையில் உருண்டு விழுந்தார் மேரி டெக்கர். கண்கள் கண்ணீரைப் பெருக்கின. அவளது தங்க ஆசை நொடித்துப் போயிற்று. வைத்திய சிகிச்சை முகாமுக்கு அழைத்துச் செல்லப் பட்டார். பிரிட்டிஷ் தட்டு வீச்சாளர் ரிச்சர்ட் ஸ்லேனேயின் கழுத்தைக் கட்டிக் கொண்டு துயரம் தாங்காமல் அமெரிக்க ஓட்ட ராணி புலம்பினாள். துயரத்தின் எவரெஸ்ட் சிகரம் இது. கால் இடறி விழுந்தது யதேச்சையாக நடந்ததா அல்லது சதியா என்பது பற்றிய விவாதம் இன்னும் நீண்ட காலம் நடக்கும்.

● மைக்கேல் ஜோர்டன் அமெரிக்காவிற்குக் கூடைப் பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் கிடைக்க வழி வகுத்தவர். மறதியில் மன்னன். இறுதிப் பந்தயத்திற்கு விளையாட வந்தவர் தாம் அணிய வேண்டிய நீல உடையை ஒலிம்பிக் கிராமத்திலேயே மறந்து வைத்துவிட்டு வந்து விட்டார். உதவிக் கோச், போலீஸ் ஸ்குவாட் காரில் ஒலிம்பிக் கிராமத்திற்குச் சென்று அவரது உடைகளை நேரத்திற்கு எடுத்து வந்தார்.


● கார்ல் லூயி எங்கு சென்றாலும் அவரைச் சுற்றிப் பாதுகாவலர்கள் இருந்தார்கள். இந்தப் பாதுகாவலர்கள் தங்களை flying eggs என்று கூறிக் கொண்டனர். காரணம் கேட்டதற்கு "கார்ல் லூயியை முட்டையின் உள்ள கருவைப் போல் பாதுகாக்கிறோமே, அதனால்தான்" என்றார்கள்.

● பிரிட்டனின் ஒலிம்பிக் டிக்காத்தலான் சாம்பியன் டாலே தாம்ஸன். இவர் இரண்டாவது தடவை ஒலிம்பிக்ஸில் தங்கம் சூடினார். தாம்ஸன் வெற்றி பெற்றதும் பிரிட்டிஷ் இளவரசி ஆன் பாராட்டி வாழ்த்தினார். ஆன் இளவரசி சொன்னாராம்: "You are a damn good looking guy!"

● ஹாக்கி விளையாட்டில் சார்ல்ஸ் வொர்த் என்ற ஆஸ்திரேலியர் ஆடுகிறார். இவர் ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் அங்கத்தினர். மூன்றாவது தடவையாக ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார். இவருக்கு ஆஸ்திரேலிய பிரதமர் ஆவதற்குரிய தகுதி உண்டென்று சிலர்கருதுகிறார்கள்.

● ஜிம்னாஸ்டிக்கில் உலகப் புகழ் பெற்றவர் நாடியா கோமனெசி. இவர் லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கிற்கு ரோமானிய ஜிம்னாஸ்டிக் கலைஞர்களுக்கு உதவ வந்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதி ரேகன் இவரிடம் "Are you nervous?" என்று கேட்டார். "No"

ஜம்ப்பால் பத்மநாபன்



✕ லாஸ் ஏஞ்ஜல்ஸ் ஸ்டேடியம்



✕ இருவருக்குமே தங்கம்! கலிபோர்னியாவைச் சேர்ந்த கேரியும் ஃப்ளாரிடாவைச் சேர்ந்த நான்஼ியும் ஒரே கணத்தில் சுவரைத் தொட்டதால் 100 மீட்டர் நீச்சல் போட்டியில் இருவருமே தங்கப் பதக்கம் பெற்றனர்.

என்றார் நாடியா. ''well I am!'' என்ற பதில் ஜனாதிபதியிடமிருந்து வந்தது!

● லாஸ் ஏஞ்செல்ஸ் ஸ்டேடியங்களில் Angel Gods சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். வழி தெரியாமல் தவிப்பவர், மருத்துவ உதவி தேவைப்படுகிறவர் போன்றவர்களுக்கு உதவும் தொண்டர்கள். ஒரு ஸ்டேடிய வாசலில் அதிசயக் காட்சி: ஓர் அமெரிக்கர் தம் கழுத்தில் வெட்கப்படாமல் Can I have two tickets? என்று எழுதித் தொங்க விட்டுக் கொண்டு வலம் வந்தபடி இருந்தார்!

● ''லாஸ் ஏஞ்செல்ஸ் ஒலிம்பிக்கின் மிகவும் சிறப்பான அம்சம், அதற்கான செலவை அதுவே சம்பாதித்துக் கொண்டது என்பதுதான்'' என்று பாராட்டுகிறது ஜெர்மன் டிரிப்யூன். ''மக்களின் வரிப்பணம் ஒரு பைசா கூட செலவாகவில்லை!''

★

ஒலிம்பிக்கை நேரில் சென்று பார்த்துத் திரும்பிய 'ஜம்பால்' பத்மநாபன், கூடைப்பந்தாட்ட நிர்வாகியாகப் பல ஆண்டுகள் அதன் அபிவிருத்திக்குப் பாடுபட்டு வருபவர். அவர் அனுபவங்களைத் தொகுத்து அளிப்பவர்:

—குண்டுமணி



கற்பனை சாம்ராஜ்யத்தில் அவள் ஒரு சக்கரவர்த்தினி

—எஸ். கனகவல்லி சாரங்கபாணி—

போட்டிக்கதை: 3

'பெண் பார்க்கும் படலம்' முடிந்து. பஜ்ஜி, சொஜ்ஜி, காப்பி சாப்பிட்ட கையோடு ஹாலில் ஏதோ பெரிய ராஜ பரம்பரையைச் சார்ந்தவர்கள் போல் பிள்ளை வீட்டுக்காரர்கள் சோபாக்களில் அமர்ந்திருந்தனர். அப்பா, வினயமாக ஒரு நாற்காலியில் அமர்ந்து — நீதிபதியின் தீர்ப்பை எதிர்நோக்கும் ஆவலுடன் அவர்களைப் பார்த்தார். அம்மா புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு நின்றாள். பெண் பார்க்கப்பட்ட நாயகி வித்யா — எந்த வித பாதிப்புமின்றி டிஃபன் தட்டுக்களையும், டம்ளர்களையும், தேய்த்து அலம்பிக் கொண்டிருந்தாள்.

வித்யாவிற்கு இப்போது திருமணம்செய்து கொள்ளச் சம்மதமில்லை. அக்கா, கல்யாணக் கடன் அடைந்து மூன்று மாதம் தான் ஆகிறது. தம்பிகள் இருவரின் கல்லூரிப்படிப்பும், தங்கையின் ப்ளஸ்டூவும் வேறு மாத பட்ஜெட்டில் அதிகப்படி செலவை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. வித்யாவும் பி. எஸ்ஸி. முடித்த இந்த ஆறு மாத காலமாக வேலைக்கு முயன்று கொண்டிருந்தாள். குடும்பத்திற்கு உதவியாக இரண்டு வருடமாவது வேலைக்குப் போய், பிறகு கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பது வித்யாவின் எண்ணம். 'பெரிய இடம், பையன் சின்ன வயதில் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான். 'நம்ம வித்யா ஜாதகத்துக்கு 'சிக்'குனு பொருந்தற ஜாதகம்' என்று புரோக்கரின் தேன் தடவிய பேச்சிலும், அவர் தந்த விலாசத்தைக் கொண்டு, பிள்ளை வீட்டுக்காரர்களைப் பார்த்து வந்து,



அவர்களின் அந்தஸ்திலும் மயங்கி, அப்பா கல்யாண ஏற்பாடுகளில் இறங்கி விட்டார். வித்யாவுக்கு அசாத்தியக் கோபம்...!

அப்பாவும், அம்மாவும் தீவிரமாகக் கைவிருப்பு, நகை, பாத்திரம், மேற்கொண்டு செலவு பற்றி விவாதித்துக்கொண்டிருந்தார்கள். அக்கா, அப்பா சொல்பவற்றைக் கணக்கில் குறித்துக் கொண்டிருந்தாள். பி. எஸ். ஸி. கடைசி வருடத்தில் இருக்கும் தம்பியும் 'ஆண்பிள்ளை... வீட்டிற்கு மூத்தவன் என்ற ஹோதாவில்' பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தான்.

''லட்ச ரூபாய்க்கு மேலே ஓடும் போல இருக்கே... பெரியவளுக்குத் தோடு மூக்குத்தி ரெண்டுமே ஒன்னேகால் காரட்டுக்குள்ள தான்... கையில இருக்கிற சாமான்களுக்கு மேலே நாப்பதாயிரமாவது வேணும். இன்னும் சாப்பாட்டுச் செலவு, அத்தை புடவை மாமா சீர், அப்படின்னு நம்ம பக்கத்துச் செலவு வேறு இருக்கு...'' என்றாள் அம்மா.

''கிராமத்து வீட்டையும், நிலத்தையும் விற்க வேண்டியதுதான்..'' என்றார் அப்பா...

''நல்ல இடம்... அழகான மாப்பிள்ளை நிறைய படிப்பு... நல்ல சம்பளம்...'' என்றாள் அக்கா. 'செலவு ஆனாலும் பரவாயில்லை... முடிச்சிடுவோம்... இந்த வருஷம் படிப்பு முடிஞ்ச கையோடு எனக்கு வேலை கிடைச்சுட்டா... கவலையில்லை...' என்றான் தம்பி.


கோபமும், ஆத்திரமுமாகக் கூடத்தில் நுழைந்த வித்யா சீறினாள். ''முக்கியமான என்னைக் கலக்காமல் என்ன பேச்சுவார்த்தை? நம்ம நிலைமைக்கு மீறி, செலவழிச்சு இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம்...வேலைக்குப் போறானும் பெரிய மனுஷன்... எம்.எஸ்ஸி. முடிச்சு. பி. ஹெச்டி. பண்ணணுமிங்கற 'ஆம்பிஷனை' அக்காவுக்காகத் தியாகம் பண்ணறயாக்கும்... ஏனக்கா! உனக்குச் செஞ்சதை விட, எனக்குக் கூடச் செய்தால் உங்க வீட்டிலே உன்னைப் பிடுங்க மாட்டானா? ஏம்ப்பா, கிராமத்து வீட்டையும் நிலத்தையும் வித்துட்டா ரிட்டையர் ஆனதும் எங்கே போய்த் தங்குவேனாம்? நான் வேலைக்குப் போறேன். ரெண்டு வருஷம் கழிச்சுத்தான் எனக்குக் கல்யாணம்...''

ஆனால் வித்யாவின் பேச்சை யாரும் லட்சியம் செய்யவில்லை பின்னே. வீட்டுக்காரர்களைப் போய்ப் பார்த்து வந்து, ஏதோ சிறிது குறைத்துக் கொண்டு வந்தார் அப்பா. புடவை, பாத்திரம், நகை வாங்க, சத்திரம், சாமான் என்று குடும்பத்தில் ஒவ்வொருவரும் அலைந்து, அந்த மாத இறுதியில் வித்யா, திருமதி வித்யா சந்திரசேகரானாள்.

• • • •

எல்லாமே கனவு போல் தான் இருக்கிறது வித்யாவிற்கு. கல்யாணமாகி ஒருவாரமாகி, வீட்டிற்கு வந்தவர்கள் கிளம்பிப் போய், புக்ககத்தில் அவளும், மாமனார், மாமியார், கணவன், மைத்துனன், நாத்தனார்தான் பாக்கி.

'மாலையில் சினிமா போகலாம்' என்று கணவன் கூறியிருந்ததால், முகம் கழுவி, அலங்கரித்துக் கொண்டிருந்த வித்யாவை



மாமியார், 'என்னத்துக்கு இப்படி புவுடர் அள்ளிப் பூசிண்டிருக்கே. சினிமாக்காரி யாட்டம்... புருவத்துக்கு நடுவுல என்ன ஸ்டிக்கர் பொட்டா...? லட்சணமா நடு நெத்தியிலே குங்குமப் பொட்டு வெச்சுக்கோ... கல்யாணமான சுமங்கலிங்கற அடையாளமா...புடவையைத் தெரு பெருக்கற மாதிரி தழையக் கட்டாதே... தலைப்பை இழுத்து, இடுப்பிலே சொருகு... ராத்திரிக்குச் சமையலைக் கவனி. இடைவிடாமல் மாமியார் பேச, தன் சுயவிஷயங்களிலும், தலையிடுவதில் லேசாக முகம் சிவக்க மறுதலிக்க முடியாமல் சமையல் கட்டில் நுழைந்தாள் வித்யா. கணவனுக வந்து கூப்பிட்டால் தான் சினிமா போகலாம் என்று நினைத்தபடி. அவன் வரவில்லை. அடுக்களையில் எது எங்கே இருக்கிறது என்று புரியாமல் பிரமித்துப் போய் நாத்தனுர் சாந்தியை உதவிக்கு அழைத்தாள். ஹெரால்ட் ராபின்ஸில் மூழ்கி இருந்த அவள், இருந்த இடத்தில் இருந்தே, 'எனக்கு ஒண்ணும் தெரியாது மன்னி...' என்றுள்.

மாமியாரிடம் கேட்ட போது...''கண்ணையும், காதையும் தொறந்து வச்சுண்டு கவனமாகப் பார்த்தால் அரிசி எங்கே, பால் எங்கே, பாத்திரம் எங்கே என்று தெரியும்...!'' என்று பொரிந்து தள்ளினுள்.

கண்களில் குபுக்கென்று நீர் பிரவகித்தது. ஒவ்வொன்றையும் தேடி எடுத்து, சமைத்து முடித்தாள். அப்பளம் பொரித்து வைத்தாள். பிறந்த வீட்டில் தானே முழுசமையலும் செய்திராத பயம் நெஞ்சில். எல்லாரும் சாப்பிட அமர்ந்ததும் பரிமாறினுள். ஒவ்வொருவரும், ஒவ்வொரு குற்றம் சொல்லியபடி சாப்பிட்டனர்.

மோர் ஊற்றுகையில், 'ஏன் விளாவித் தள்ளியிருக்கே... குளிக்கப் போற மாதிரி...' என்றுன் கணவன். ''சமையல் ரொம்ப மோசம்!''

''இந்த வீட்டு டேஸ்ட் எனக்கு இன்னும் புரிபடலை..: புரிஞ்சுண்டு சமைக்கறேன்...'' திக்கித் தடுமாறிப் பதில் சொன்னுள் வித்யா, லட்ச ரூபாய்க்கு மேல் செலவழித்து, பெரிய இடம், படித்த ஆபீஸர் மாப்பிள்ளை என்று தனக்குப் பொருத்தமில்லாத இடத்தில் தன்னை மாட்டிவிட்ட தந்தையை மனத்துக்குள் திட்டிக் கொண்டாள்.

''தலைதீபாவளி'ன்னு கூப்பிட வந்திருக்கிறுர் உன் மாமனுர். கல்யாணம்ஆகி, ஆபீஸ் கெடுபிடி வேலையில, மறுமகிழ்ச்சி, அது இதுன்னு ஒரு பண்டிகைக்கும் போகலே... எல்லாத்துக்கும் சேர்த்து சீர் செஞ்சுண்டு வந்து சேரு. வித்யா...! வைர மோதிரம், ஸ்கூட்டர், ஃபிரிஜ் வாங்கித் தரச் சொல்லு...'' என்று மாமியார் சொல்லிக் கொண்டே போகையில், காதுகள் அவன் பேச்சை வாங்கினவேயொழிய, மனமும், உடலும் பிறந்தகத்து நினைவில் மூழ்கி லயித்தன.

'கல்யாணம் வேண்டாம் என்றேனே... இப்போது எவ்வளவு கொடுஞ்சொற்களைத் தாங்க வேண்டியிருக்கிறது...?' என்று பிறந்தகம் வந்ததும், அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்து அரற்ற எண்ணினுள்.

தலைதீபாவளி முடிந்து கணவன் மட்டும் திரும்பிப் போகட்டும்... இனி அவள் இந்த நரகத்துக்கு வரப் போவதில்லை. ஏதாவது வேலைக்குப் போய்... பிறந்த வீட்டில் சந்தோஷமாய்த் தங்கி விட வேண்டியதுதான்!' என்று வித்யா சிறகடித்துச் சிந்தனைகளைப் பறக்க விட்டாள்.

மாப்பிள்ளைக்கும் வித்யாவிற்கும் ஏகஉபசாரம். தலைதீபாவளி விமரிசையாய் முடிந்து, வைரமோதிரம் மின்ன, சந்திரசேகர் ஆபீஸில் லீவு இடையாது என்று கிளம்பிப் போனுன்.

அம்மாவின் கழுத்தில்கைகளைக் கோத்து மடியில் தலை சாய்த்த வித்யா, தன் புகுந்த வீட்டு அனுபவங்களை விவரிக்க நினைத்தாள்.

பள்ளியில் படித்துக்கொண்டே டாக்டர் பட்டம் பெற்ற முதல் நபர்:

எட்டாவது படித்து விட்டு சென்னை பல்கலைக் கழக வரலாற்றிலேயே பள்ளியில் பணியாற்றிக் கொண்டே 'டாக்டர் பட்டம்' பெற்ற முதல் நபர் என்ற பெருமையைப் பெறுகிறு! புலவர் டாக்டர் ஆ. கந்தசாமி.

1963 முதல் இன்று வரை 22 ஆண்டுகளாகச் சென்னை முத்தியாலுப் பேட்டை மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறுர்.

ஆரம்பப் பள்ளி எட்டு வரையே படித்த இவர் தமது சொந்த முயற்சியில் தனியாகவே எஸ். எஸ். எல். சி., பி. யூ. சி., பி. ஏ.., எம். ஏ., பி. ஈ. டி. எம். ஃபில்., ஆகியவை படித்துப் பட்டம் பெற்றுர். இப்பொழுது பி. எச். டி., ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இவர் தமது எம். ஃபில் படிப்புக்காக மாணிக்கவாசகரின் 'திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி' என்ற ஆய்வு' தலைப்பில் ஆய்வு செய்தார்.

இவரது ஆர்வத்தையும், முயற்சியையும் கண்ட சென்னைப் பல்கலைக் கழகம் பள்ளியில் இருந்து கொண்டே டாக்டர் பட்டத்துக்கு ஆய்வு செய்ய இசைவளித்தது. குமரகுருபரரின் கற்பனை எனும் தலைப்பில் ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுர்.

—நாகை. ஜி. அஹ்மது.



ஆனால் அடுத்தகணம் 'ஏம்மா, கழுத்தோட ரெட்டைவடம் போட்டிருப்பாயே... எங்கே' என்று கேட்டாள் இடுக்கிட்டு.

''...அதுக்கென்ன... உனக்குச் சீருக்கு வளையலும், சங்கிலியும் பண்ணியாச்சு... பையன்கள் சம்பாதிக்க ஆரம்பிச்சால் போட்டுக்கறேன்...'' என்றாள் அம்மா.

அந்தஸ்துக்கு மீறிக் கல்யாணச் செலவு ஆனதால், வீட்டின் பொருளாதார நிலைமை மட்டமாகி இருந்தது. தம்பிகள் இருவரின் ஸ்கூட்டர்கள் விற்கப்பட்டிருந்தன. தங்கைக்கு கணக்கு டியூஷனும், வீணை கற்பித்தலும், பணத் தட்டுப்பாட்டால் நிறுத்தப்பட்டிருந்தன.

இவளுடைய கல்யாணச் செலவுகள் அவளின் பிறந்த வீட்டில் பல பள்ளங்களை அமைத்து விட்டன... 'இவ்வளவு செலவுகளும் எதற்காக? அவள் பெரிய இடத்தில், அதிகாரி கணவனுடன், சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தானே...?' இதை நினைக்கையில் துக்கம் நெஞ்சை அடைத்தாலும் விவேகத்துடன் அடக்கிக் கொண்டாள்.

''சொல்லு வித்யா... சந்தோஷமாய் இருக்கிறாயா...?'' என்று கேட்டாள் அம்மா.

''சந்தோஷமா... அதைத் தவிர வேறு என்ன... என் புக்ககத்து மனுஷாளை மாதிரி தங்கமானவர்கள் இருக்க முடியாது.. என்னைத் தங்கத் தட்டில் வைக்காத் தாங்கு கிறார்கள்... வித்யா, வித்யான்னு, மாமியார் மாமனார் சொந்தப் பெண்ணாட்டம் உசிரா இருக்கிறார்கள். 'சீர்வரிசை ஏதேஷ்டமா செய்திருக்கிறார்கள். இனிமேல் எதுவும் செலவு பண்ணக் கூடாது'ன்னு கண்டிப்பாய் சொல்லிட்டார் என் கணவர். உன் தம்பி படிப்பு முடிச்சதும், பெரிய வேலையில சேர்த்து விடுகிறேன்... போஸ்டல்ல மேலே படிக்கட்டும் என்கிறார் என் மாமனார். உன் தங்கைக்கு நல்ல இடம் என்கிட்ட இருக்கு... படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் நாமே பண்ணிடுவோம்னார் மாமியார். நாத்தனாரும், மைத்துனரும் எவ்வளவு பிரியமாய் இருக்கிறார்கள் தெரியுமா? கற்பனையாய் அடுக்கிக் கொண்டே போனாள் வித்யா. இதனால் அம்மாவின் முகத்தில் பிரவகிக்கும் சந்தோஷத்தை உணர்ந்தாள்...

பிறந்தகத்தில் பதினைந்து நாள் சீராடி விட்டு, பதினைந்து நாளும், புக்கக மனிதர்களின் பிரியத்தையும், பண்பையும், தன் புக்கக வாழ்வின் மலர்ச்சியையும் புனைந்துரைத்து அதே கற்பனைகளுடனேயே புக்ககம் திரும்பினாள் வித்யா.

பழையபடி வேலைகள்: குத்தல் பேச்சுக்கள், கிண்டல்கள்... எதுவுமே வித்யாவைப் பாதிக்கவில்லை. கணவனின் அலட்சியப் போக்கு, மாமியாரின் வசைகள், யாவற்றையும், தன்னைப் பாதிக்க விடாமல், கற்பனையாகத் தன்னை அவர்கள் அருமையும், பெருமையுமாக நடத்துவது போல் உருவகித்து வாழ்கிறாள் வித்யா...

கூடிய விரைவில் அவளின் சாம்ராஜ்ஜியத்தில் புதுப் பிரஜையாக ஒரு இளவரசன் தோன்றினால் இன்னும் இனிமையாகிவிடும் அவளுக்கு வாழ்க்கை...!



அருள் வாக்கு

நாம் உட்கார்ந்திருக்கும் இந்தக் கொட்டகையை யார் போட்டார்கள் என்றால் சொல்லத் தெரிகிறது. இந்த வாழை மரத்தை யார் செய்தார்கள்? கண்ணில் காட்டும்படியாக அதைச் செய்தவனைச் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் ஒருவன் அதைச் செய்திருக்கிறான். அதனால் தான் இப்படி அழகாகப் பட்டை பட்டையாகக் கணக்குப் பிசகாமல் உள்ளுக்குள்ளே அடுக்கிக் கொண்டே இந்த வாழை உண்டாயிருக்கிறது. எந்த ஆயுதத்தை வைத்துக் கொண்டு அந்த ஒருவன் இத்தனை அழகாகப் பட்டைகளை அடுக்கினான் என்றால் தெரியவில்லை. இப்படியே அந்த மலையை, இதோ மேலே உள்ள நட்சத்திரங்களை சந்திரனைச் செய்தவனை நம்மால் காட்ட முடியவில்லை. 'இவையெல்லாம் எத்தனையோ காலம் முன்னால் உண்டானவை. 'செய்தவனை எப்படிக் காட்டுவது?' என்று கேட்கலாம். சரி, இந்த ரோஜாப் புஷ்பம் இருக்கிறதே. இது அந்த வாழையைவிடச் சமீபத்தில் உண்டானதுதான். முந்தாநாள் சிறு மொட்டாக இருந்தது. இப்போது அழகிய பூவாகியிருக்கிறது. இதில் நூற்றுக்கணக்கான இதழ்கள். ஒவ்வொன்றிலும் நுண்ணிய நரம்புகள், வாசனை எல்லாம் வந்திருக்கின்றன. நம் கண் முன்னாலேயே இது மலர்ந்தது. ஆனாலும் மலர்த்தியவனை நமக்குத் தெரியவில்லை.

மனிதன் எல்லாம் தெரிந்த கெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு காட்டு மிருகம் சென்னைப் பட்டணத்தைச் சுற்றி வந்தால் எதுவுமே தனக்குத் தெரியவில்லை என்று எப்படி ஆச்சரியப்பட்டுப் பார்க்குமோ அப்படித் தான் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். மனிதனை விடக் கெட்டிக்காரனான ஒருவன் அவனை இப்படி வைத்திருக்கிறான். அந்த ஒருவனை வணங்குவோம்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

வேங்கை வனம்

அத்தியாயம் 21

மதுரைக்காஞ்சி மறைந்தது

மனிதர்களின் தலைமேல் சூரியன் அக்னித் தாண்டவமாடுகிறான்...

மனிதர்கள் தங்கள் தலைநிழலைத் தாங்களே மிதித்த வண்ணம் நடந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஆலயத்துக்கெல்லாம் ஆலயமாம் ஆலவாய்ப் பேரழகியின் ஆலயத்து உச்சிகால வழிபாட்டு மணியோசை 'மீனாட்சி, மீனாட்சி' என்று மீனாட்சியம்மையையும் அழைக்கிறது; மீன் ஆட்சி புரியும் பாண்டியராட்சியையும், வாழ்த்துகிறது.

ஆனால் அந்த ஓசைபோ...

அரண்மனைக் கூடத்தில் அவலமாக அமர்ந்திருந்த அனைவருடைய செவிகளிலும் 'திருமேனி, திருமேனி' என்று ஒலிப்பது போலத் தெரிகிறது.

நேற்றிரவு உச்சிகாலப் பூஜையின்போது ஒலித்த இதே மணியோசையின் போது தான் 'திருமேனி எங்கே?' என்கிற கேள்விக் குறி மீனாட்சி ஆலயத்துள் எழுந்து, மீனக்கொடியில் எதிரொலித்து, அதன்மூலம் அரண்மனையுள் இறங்கி, இதோ இதுவரை மறுமொழி கிடைக்காது கலங்கிய கண்கள் எத்தனை? புலம்பிய நெஞ்சங்கள் எத்தனை? அலைமோதித் தவிக்கும் புரவிகளின் கால்கள் தாம் எத்தனை, எத்தனை?

மாமன்னர் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியருடைய அகன்ற கண்கள் இதுவரை எதுகுறித்துக்கலங்கி இருக்கின்றன? ஓ... திருமேனி...

வளைந்த பெருத்த மீசையை நீவி விட்டுக் கொள்வதன் மூலம், எவரும் அறியாவண்ணம் சரக்கண்களை இலேசாகத் துடைத்துக்கொள்கிறார்.

பாண்டிமாதேவியோ, பெண்ணாகையால், அந்தப் பெருத்த துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது அடிக்கொரு முறை சத்தமிட்டுப் புலம்புகிறாள்.

அந்தச் சித்திரக் கூடத்தில் பலரும் சித்திரங்களாகவே அமர்ந்து காணப்பட்டனர்.

புலவர் பெருமான் மாங்குடி மருதனார் ஒரு சொட்டு நீரும் பருகேன் என்பதுபோல இருந்த நீர் சொட்டுக்களைக் கண்வழி இறக்கிக் கல்லாய்ச் சமைந்து காணப்படுகிறார்...

அமைச்சர்களான வேதவன பிரம்மராயர், தும்பூர் சாத்தனார், புலவர்களான ஐயூர் மூலங்கிழார், உருத்திரசன்மர், மகாசேனாதிபதி காவிதி அழகன் நம்பி...



கோவி.மணிசேகரன்



முறைப்படி அன்றைக்குத் தமிழ்ச்சங்கம் கூடியாக வேண்டும்! மூன்றும் முறையாகத் தோற்றுவித்த அந்தத் தமிழ்ச் சங்கம் முதல் முறையாகக் கூடாமல் நின்றது...

அதுவே ஓர் உற்பாதம் போல உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மன்னருக்குத் தெரிகிறது...

இந்நிலையில் சிலையைக் கடத்தி வரச் சென்ற ஆட்கள் குறித்து ஒரு தகவலும் தெரியவில்லை.

''மன்னா! காலையிலிருந்து எல்லாருமே உன்னாதிருப்பது உசிதமாகத் தெரியவில்லை. திருமேனி நிச்சயம் கிடைத்து விடுவான்! பாண்டிமாதேவியின் அலங்கோல நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்கள்...''

ஐயூர் மூலங்கிழார் தமிழ்நாவு இவ்வாறு அசைந்து கொண்டிருந்தது. திடுமென்று தடைப்பட்டு நிற்பானேன்?

அப்போது—

இரவலனிலும் இழிந்து பட்டவனாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் புரவிப் படைத் தளபதி இளங்கோ வேளான்.

அதிர்ச்சியின் வெடிப்பால் அனைத்துக் கண்களும் அகன்று விரிகின்றன.

என்ன நேர்ந்தது? ஏன் இந்த நிலை? ஒவ்வொருவர் நெற்றியிலும் வினாக்குறிகள் நரம்பைப் புடைக்கின்றன.



ஆ! பிணம் விழுந்த அரண்மனை போல...

பொதுவான கருத்து. கானப்பேரெயில் வேந்தன் வேங்கைமார்பனைவிட இக்காரியத்தை யார் செய்திருக்க முடியும் என்பது..

மாமன்னர் நம்ப மறுக்கிறார்.

சிலைசெய்து மணம் புரிந்து, *'மடலேறு' பிடிவாதம் போல் அடலேறு திருவிளையாடல் நடத்தியவனா கடத்திச் சென்றிருப்பான்.

அன்றைய மாலை பலருக்குக் கண்ணீர் மாலையணிவித்து மறைகிறது...

இரவு பூத்தும் இதுவரை ஒரு செய்தியும் காணோம்! எங்கே சென்று மறைந்திருப்பார்கள்? எவர் தூக்கிச் சென்று கடத்தியிருப்பார்கள்?

வருகை சொல்லி வராத சந்தேகம் கணத்துக்குக் கணம் பல கோணங்களில் வலிமை பெற்றுப் பேயாட்டமாடுகிறது...

---

* அக்காலத்தில் காதல் கைகூடவில்லையானால் நடுத்தெருவில் மடலேறி அடம் பிடிப்பர்.

''இளங்கோ? என்ன கோலமிது? சென்றவர்கள் என்ன ஆனீர்கள்?''

உக்கிரப் பெருவழுதிப் பாண்டியனுடைய உக்கிரமான கேள்வி இது.

ஏதோ வேங்கைமார்பன் நாவையே துண்டித்து அனுப்பி விட்டது போல மௌனமாகக் கண்ணீர் சிந்துகிறான் இளங்கோவேளான்.

''இளங்கோ...''

—உக்கிர கர்ஜனை....

இளங்கோ வேளானின் நாவு விரக்தியுடன் அசைகிறது: ''வேங்கைவனத்தில் புகுந்து உயிர் தப்பி வந்த கோலம்!''

விழிகள் பிதுங்கி மேலும் விளக்கம் அறியத் துடிக்கின்றன.

இளங்கோவேளானும் ஆரம்ப முதல், விரல்களை நறுக்கி வண்டிச்சாத்தில் ஏற்றியனுப்பிய அவமானப் படலம் வரை விவரித்துரைக்க...

அக்கினிக் குண்டங்களாய்த் திகுதிகுவென பற்றி எரிகின்றன உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மன்னரின் அவல விழிகள்.

பாண்டியமாதேவி 'கோ'வென்று கதறி, மயங்கிச் சாய்ந்தாள்; தாதியர்கள் ஓடி வந்து தாங்கிப் பிடித்துக் கொண்டு சாமரம் வீசுகிறார்கள்.

அனைவருடைய கண்களிலும் அகோரத் தாண்டவம்.

மகாசேனாதிபதி காவிதி அழகன் நம்பியோ எரிமலையெனக் குமுறி, எந்த நேரத்திலும் எரிக் குழம்பைக் கக்கத் துடிக்கிறான்.

வேங்கைவனம் திருமேனியின் அசோக வனமானதா?

யுத்தம், யுத்தம், யுத்தம்...

உக்கிரப் பெருவழுதிப் பாண்டியருடைய நெஞ்சம் யுத்த பேரிகை கொட்டுகிறது.

ஆனாலும்....

வேங்கைமார்பனுடைய காதல் வெறி, நூலாக அந்த நெஞ்சில் இழையோடி வலைகிறது.

இளங்கோவேளான் அந்தக் கானப் பேரெயில் கோட்டையைப் பற்றிக் கூறி வருகிறபோது, 'நமது முற்றுகை தாங்குமா?' என்று கேட்ட வினாவும் ஒரு நியாயமே போல் அரும்பி அச்சுறுத்துகிறது.

இல்லையென்றால் எலியனைய நகரை வைத்துக் கொண்டு புலியனைய புரட்சி செய்வானா?

என்னதான் காதல் என்றாலும்....

பொறுத்துப் பார்த்துப் பூரத்தைப் பரிபூரணமாக்காது, பூஜ்யமாக்கி விட்டானே!

மாங்குடி மருதனாரை நோக்குகிறார் மன்னர் பெருமான்.

''புலவர்பெருமானே! முடிவு சொல்ல வேண்டியவர் நீங்கள். நான் ஒருநடை வேங்கைவனம் நோக்கித் திரும்பட்டுமா? அல்லது, யுத்தப் பிரகடனம் செய்து பேரிகை கொட்டட்டுமா? தமிழ்ச்சங்கத் தலைவரைக் கேளாது உக்கிரப் பெருவழுதி தறுக்கிப் படை கொண்டான் என்று சரித்திரம் தூற்ற நான் விரும்பவில்லை.''

வயது முதிர்ந்த தமிழ்ப்பழமான மாங்குடி மருதனாரின் விழிகளில், நீர், திருமாலிருஞ் சோலையின் சிலம்பாறு போல மெல்லியதாய் ஊற்றெடுத்து வழிகிறது.

''சொல்லுங்கள் தமிழ்ச் செல்வமே!''

அதுவரையிலும் மூன்று நாடிகளுள் இரண்டு நாடிகள் ஓய்ந்து பட்ட, மாங்குடி மருதனார், மூன்றும் நாடியில் கடைமூச்சில் ஈனமாகச் சொல்கிறார்: ''என்ன செய்வீர்களோ! இன்று சங்கம் முதன்முறையாகத் தடைப்பட்டது. இனி என்றைக்குத் திருமேனி காலடி எடுத்து வைக்கிறானோ, அன்றைக்குத் தான் இந்த மூன்றாவதாகத் தொடங்கப் பெற்ற சங்கம் மீண்டும்...''

சொற்கள் தடைப்பட்டன.

திறந்த வாய் திறந்தபடி. திறந்த கண்கள் திறந்தபடி...

'இனி மீண்டும் நான் வாரேன்' என்பது போல அமர்ந்த நிலையிலேயே அமர நிலையடைந்து விட்டார், அறுசுவைக்கும்மேலான பெருசுவைக்குரிய தமிழ்வளம் கண்ட தங்கப் பெருமகனார் மாங்குடி மருதனார்.

'இடிமேல் இடி!'

'ஓ'... என்று கதறிக் கதறி அழுகிறார், வீரமாச் செல்வர் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியப்பாண்டிய மகாசக்கரவர்த்திகளின் அருமந்த புதல்வரான மாவீர திலகம் உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர்.

'மதுரைக் காஞ்சி' எனும் நூலை இயற்றிய மாவுருவம் சாய்ந்து பட்டதோ!

கதறாத உள்ளங்களில்லை; பதறாத உடல்களில்லை. பாண்டியப் பேரரசே சோகக்கடலில் கண்ணீர் முத்துக்களைச் சிந்தின.

மாங்குடி மருதனாரின் மறைவு கேட்டு மலைத்துப் போனான் வேங்கைமார்பன்!

ஆனால்...

திருமேனிக்கு இச்செய்தியைக் கூற அவன் மனம் ஒருப்படவில்லை. மாணவியாயிற்றே! ஏற்கெனவே அசோகவனம் என்று சோகம் காப்பவள்! இச்செய்தியறிந்தால் அதன் எதிரொலியால் எக்கதிக்கு ஆளாகி விடுவாளோ?

அவளது மறைவைக் கேட்டு மரணித்துப் போனவராயிற்றே மாங்குடி மருதனார்.

எனவே சந்தர்ப்பம் தேன் கூடு கட்டுகிற போது தெரிவிக்கலாம் என்று வாளாவிருந்து விட்டான் வேங்கைமார்பன்.

தனது சிலைக்குப் பக்கத்தே ஓங்கி வளர்ந்திருந்த வேங்கைமரத்து நிழலில் அமர்ந்திருந்தாள், திருமேனி. அவளது கவலைகள் அவளை அரித்துக் கொண்டிருந்ததால்மூன்றே நாட்களில் ஒரு சுற்று இளைத்துப்போயிருந்தாள்.

இத்தனை நாட்களும் அறைக்குள்ளே அடைபட்டிருந்த வேங்கைகளுக்குப் பைத்தியமே கண்டுவிடும் போலிருந்தது. திருமேனிதான் மாளிகையுள் நுழைய மறுக்கிறாளே! 'சீதைக்கு அசோகமரம்; எனக்கு வேங்கை மரம்' என்று அடம் பிடிக்கிறாளே!

வேங்கைகளின் பயங்கர உறுமல்களைக் கேட்டு வேங்கைமார்பன் அங்கு வந்து நின்று கவனிக்கிறான்.

''திருமேனி! நீ எப்படி என்னைத் தண்டிக்க ஆசைப்படுகிறாயோ அப்படியெல்லாம் தண்டிக்கலாம். நான் செய்தது ஒரு தவறு தான். அது உன்னை உளமாறக் காதலித்து

விட்டது. எனது ஜீவகாவியம் நீ என்று மனம் முடிவு செய்து விட்டது. எனவே தண்டனை விதிக்கவல்ல நான், உனது தண்டனையைத் தாங்க முடிவு செய்து விட்டேன்!''

''நீங்கள் என்னைத் தண்டித்ததை விடவா?''

''சத்தியமாக நான் உன்னைத் தண்டிக்க வில்லை. சகதர்மிணியாக்கிக் கொள்ள நினைத்தது தண்டனையாகுமா?''

''யாரைக் கேட்டு என்றுதான் மீண்டும் மீண்டும் கேட்கிறேனே!''

''மீண்டும் மீண்டும் கேட்பதால் யானை பூனையாகி விட முடியாது. நீ என்னைக் காதலித்தது உண்மை; கடிமணம் செய்து கொள்ளச் சம்மதித்தது பெருண்மை! வைகைக் கரைச் சம்பவத்தை வைத்து நீ ஜெனந்து சிறியதில் நியாயமிருந்தது. ஆனால் தியாகவல்லி நிரபராதி என்று தெரிந்தும் அடம் பிடிப்பது?''

''கௌரவப் பிரச்னை! சிலைக்கு மாலை விட்டது; என்னைத் தூக்கி வந்து வேங்கை வனத்தில் வைத்தது!''

''இப்போதும் ஒன்றும் நடந்து விடவில்லை. 'நான் சம்மதிக்கிறேன்' என்று சொல். நானே உன்னைக் கௌரவமாகப் பலர்வியக்க விழாக் கோலமுடன் மதுரை நோக்கி அழைத்துச் செல்கிறேன்.''

''மதுரை வந்தால் நீங்கள் மீள முடியுமா?''

''உன்னிடம் தான் வாக்குறுதி பெறுகிறேனே?''

''நான் தவறினால்?''

''தமிழ் மீது அல்லவா ஆணை செட்டேன். தவற முடியுமா?''

மலைத்துப் போனான் மான் விழி மாது. இவர் நம்மை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறார்...

நாம் தான் இவரைப் புரிந்து கொள்ள வில்லையோ?

இதில் புரிவதும், புரியாததும் என்ன இருக்கிறது?

சிறையெடுத்து வந்தவனை மணப்பதாவது? ஒரு சாம்ராஜ்யாதிபதியின் குமாரிக்கு இப்படி ஒரு கேடா?

''என்ன யோசிக்கிறாய் திருமேனி?''

''என்னை மீட்டுச் செல்ல எனது தந்தைக்குத் தெரியும்.''


''இன்னுமொன்றையும் சொல் திருமேனி!''

''என்ன?''

''உங்களைக் கொன்று கூறு போடவும் எனது தந்தைக்குத் தெரியும் என்று சொல்!''

வேங்கைமார்பனுடைய கண்கள் கலங்கி விட்டன.

''திருமேனி! எனது கலக்கம், என்னைக் கொன்று போடுவார்கள் என்பதற்கில்லை. பாண்டியரும், சோழரும், சேரரும் மூவருமே ஒன்று சேர்ந்து வந்தாலும் கானப்பேரெயி லின் ஒரு கல்லைக் கூட நிமிர்த்திப் பார்க்க முடியாது. எனது சபதம்... எனது மொழி தமிழல்ல என்றேன்; தாழ்வில்லை! நான்தமிழ் வீரனல்ல என்றேன்; உனக்காக வீரத்தை



அமெரிக்காவில் வெர்ஜீனியா மாநிலத்தைச் சேர்ந்த அல்டிஸர் என்னும் 11 வயதுப் பையன் தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததால் மூளையில் குண்டு பாய்ந்து இறக்கும் தருவாயில் இருந்தான். அவனுடைய பெற்றோர்கள் தங்கள் மனதைக் கல்லாக்கிக்கொண்டு அவனது உடல் உறுப்புக்களைத் தேவைப் படுபவர்களுக்குத் தானமாகத் தர முன்வந்தனர். அதன்படி அவனது இதயம் செயின்ட் லூயி என்னும் பையனுக்கும், ஒரு சிறுநீரகம் 49 வயதுப் பெண்ணுக்கும், கண்கள் 17 வயதுப் பெண்ணுக்கும் பொருத்தப் பட்டன. அவனது இன்னொரு சிறு நீரகம் பார்மிங்காம் மருத்துவமனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

'சன்' இதழிலிருந்து: 'சீதாபஞ்சு.'

யும் உனது செம்பாதங்களில் சமர்ப்பிப் பேன்! ஆனால்... ஆனால்... உன்னை அடைய வில்லையென்றால் நான் தமிழனுக்கே பிறந்தவனல்ல என்று சபதமிட்டேனே... திருமேனி! திருமேனி! திருமேனி!''

உணர்ச்சி வயப்பட்டுத் தன்னை மறந்து கதறிக் குழந்தை போலக் கெஞ்சுவதைக் கண்ட தியாகவல்லி விசும்பி விசும்பி அழத் தொடங்கி விட்டாள்.

திருமேனியோ, 'யார் இப்படிச் சபதம் செய்யச் சொன்னார்கள்? இப்போது அதை எண்ணி அலமர வேண்டும்' என்று முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக் கொண்டாள்.

ஆனால் வேங்கைமார்பன், 'திருமேனி, திருமேனி' என்று உணர்ச்சிவயப்பட்டு எழுப்பிய சத்தத்தைக் கேட்டு உணர்ச்சி இழந்து பட்ட ராஜபுலிகளான வேங்கைகள், எற்கெனவே இத்தனை நாட்கள் வரையில் அடைபட்டிருந்த வெறித்தனமும் ஏற் படவே, அறைந்த அறையில் அந்தக் கதவின் பிடிப்புக் கொக்கிக் கழன்றுவிட...

சற்றே கதவு ஒருக்களிக்க...

அதனை மேலும் முட்டி மோதித் திறந்து உடம்பை வளைத்து நெளித்து வெளியே சீறிப் பாய்ந்து வந்து விட்டன.

பாய்ந்து வரும் வேங்கைகளைக் கண்ட மூவரும்... (தொடரும்)

வாசகர் பங்கு

நாரதர் வேலை

திருடர்கள் வீட்டினுள் நுழைந்ததும், நுழையாததுமாய் ''உங்களில் யாருக்குத் தலைவராகும் தகுதி இருக்கு?'' என்பேன். அவ்வளவுதான். அவர்களே ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ள, எனக்குப் போலீசைக் கூப்பிடும் வேலை மிச்சம்.

ஏ. வாசுதேவன், சென்னை-17

காஸெட்டை இயக்குவேன்

காஸெட்டில் பல ஆட்கள் ஓடி வரும் ஓசையையும் விடாதே பிடி என்று கத்துவதையும், போலீஸ் விசிலையும் பதிவுசெய்து வைத்துள்ளேன். இதைக் காஸட் பிளேயரில் பொருத்தி, பிளக்கையும் பொருத்தித் தயாரான நிலையில் வைத்துள்ளேன். ஸ்விட்சைத் தட்டி விட்டால் போதும், தலை தெறிக்க ஓடுவார்கள் முகமூடிகள்.

ஆர். சுரேஷ், தூத்துக்குடி

''ஆவோ பாயி!''

முகமூடிகள் வடநாட்டவரோ என்ற சந்தேகம் நிலவி வருகிறது. ஆதலால் அவர்கள்





வருகை தரும் போது, தயாராய் வைத்துள்ள ரக்ஷா பந்தனைக் கட்டிவிட்டு ஒரு மிட்டாயையும் வாயில் போட்டு சகோதரர் ஆக்கிக் கொள்வேன். திருடுவதற்குப் பதில் எனக்கு அன்பளிப்பு கொடுத்துவிட்டுப் போவார்கள்.

ராஜி ஜெயராம், மதுரை-2

கணேஷ் கை கொடுப்பான்

கடைசி வாண்டு கணேஷை மெள்ளக் கிள்ளி விட்டால் போதும். அவன் அலறும் அலறலில் ஊரே கூடிவிடும்.

சரஸ்வதி, சேதுராமன், புதுதில்லி-1

தொல்லைகள் தீரும்

ஆண்டாண்டு காலமாய் மாமியார் – மருமகள் சண்டையை ஏற்படுத்தி வரும் நகைகள், மாதக் கணக்காய் பயமுறுத்தும் லைசென்ஸ் இல்லாத ரேடியோ; தங்கையிடம் பகை வளர்த்து வரும் மிக்ஸி, ஆபீஸில் திட்டு வாங்க வைக்கும் ஓட்டை கடிகாரம், அடிக்கடி ரிப்பேராகிக் கழுத்தறுக்கும் சைக்கிள் – எல்லாவற்றையும் தூக்கிக் கொடுத்துவிட்டு கடைசியில் மனைவி கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி வரும் உயிரையும் ஒரேயடியாகக் கொடுத்து மற்றவர்களைக் காப்பாற்றுவேன்!

எம். ராஜேந்திரன், மன்னார்குடி

அதிகப் பிரசங்கம்

கலைஞரின் மாநில சுயாட்சியை விளக்கி விட்டு, புரட்சியாரின் அண்ணாயிஸத்தைத் தெளிவாக்கி, அம்மையாரின் 20 அம்சத் திட்டம் பற்றி விரிவுரை ஆற்றி, 'அண்ணா நாமம் வாழ்க! ஜெய் ஹிந்த்' என்று கூறி நிமிர்ந்தால்... முகமூடிகள் தூரத்தில் ஓடிக் கொண்டிருப்பது தெரியும்...

ஏ. ஆர். சதிஷ்குமார், செங்கல்பட்டு

ஹெல்மட் தலைகாக்கும்

வீட்டில் ஸ்கூட்டர் இல்லாவிட்டாலும் ஆளுக்கொரு ஹெல்மட் வாங்கி வைத்துள்ளோம். இரவில் கதவைத் தட்டும் ஓசை கேட்டால் ஹெல்மட்டை மாட்டிக்கொண்டு தான் திறப்போம். எப்போதும் மண்டையையே முதலில் தாக்கும் முகமூடியின் பாச்சா எங்களிடம் பலிக்காது.

தங்க. குஞ்சிதபாதம், சிதம்பரம்

பான் தன்யனாவேன்!

சாஷ்டாங்கமாய் அவர்கள் காலில்விழுந்து 'தங்கை கல்யாணத்துக்கு உங்கள் கைவசமுள்ள நகையிலிருந்து பத்து பவுன் கொடுத்தால் ரொம்ப நன்றி உடையவன் ஆவேன். எப்படியும் மூன்று மாதங்களில் பணமாக (வட்டியும் சேர்த்து) தந்து விடுகிறேன்' என்று கெஞ்சுவேன்.

பி. செல்வராஜ், சவங்கபாளையம்

பிழைத்துக் கொள்வேன்

இருப்பதை எல்லாம் கொடுத்து விட்டு அவர்களுடைய முகமூடியை மட்டும் கேட்டு வாங்கிக் கொள்வேன். பிழைப்பு நடத்த சவுகரியமாய் இருக்கும் பாருங்கள்!

ஆர். ராம்சங்கர், ஈரோடு

வெட்கித் தலைகுனிவர்

முகமூடி இல்லாமலே என்னைக் கொள்ளையடிக்கும் உறவினர்களைப் பற்றிக் கதை கதையாய்ச் சொல்வேன். தங்களை விட மேதாவிகள் இருப்பதை அறிந்து, வெட்கித் தலைகுனிந்து கொள்ளையடிக்க மறந்து விடுவார்கள்.

கே. வி. வி. சலம், பூனே-11

போட்டோ பிடிப்பேன்!

வீட்டில் உள்ளவர்களைக் கதவைத் திறக்கச் சொல்லி விட்டு நான் பரண் மேல் காமராவுடன் ஏறி உட்கார்ந்து கொள்வேன். முகமூடிகளைப் படம் பிடித்துப் போலீஸிடம் புகைப்படங்களைத் தருவேன். போலீஸார் முகமூடிகளைப் பிடித்து விடுவார்கள்(!?)

ஜி. தங்கமுத்து, மயிலம்பட்டி

கொடை கொடுப்பர் கொள்ளையர்

என்னிடம் என்ன இருக்கு கொள்ளையடிக்க? முகமூடிகளுக்கு ஐந்து, பத்து எல்லாம் அலட்சியம்தானே? என்னிடமுள்ள பள்ளிக்கூடக் கட்டிட நிதி வசூல் நன்கொடை டிக்கெட்டுகளை நீட்டிப் பணம் கறந்து விடுவேன்.

ஆர். சரண்யா, ராஜபாளையம்

ஓட்டமாய் ஓட ஒரு வழியுண்டு

தற்போது ரேஷனில் வழங்கும் சோயா பீன்ஸ் எண்ணெயை அடுப்பில் காய்ச்சத் தொடங்குவேன். கூவத்துடன் அது போட்டி யிடத் தொடங்கியதும் முகமூடிகள் எடுப்பார்கள் ஓட்டம்.

எ. நூஹிதா அஜீஸ், தஞ்சாவூர்-7

கராத்தே குடும்பம்

புறநகர்ப் பகுதியில் நிலம் வாங்கிய அன்றே குடும்பத்தார் அனைவரும் கராத்தே கற்பது என்று முடிவு செய்து விட்டோம். இப்போது எங்கள் குடும்பத்தில் ஐந்து கராத்தே சூரர்களும் சூரிகளும் உண்டு. எங்களால் ஐந்து பேர் வரை சமாளித்து வீழ்த்த முடியும்.

எஸ். விஜயலக்ஷ்மி, சென்னை-1

''சார், ஐந்து ரூபாய் இருக்குமோ?''

முதல் தேதி வாக்கில் வந்தால் பால், வாடகை, மளிகை போக மீதமுள்ள சொத்தை மரியாதையாய் நீட்டி விடுவேன். மாதக் கடைசியாக இருந்தால் ஐந்தோ, பத்தோ கைமாற்று முகமூடியாரிடமே கேட்பேன்.

கே. பி. கிருஷ்ணமூர்த்தி, சேலம்-5

கடவுளே காப்பாற்று!

முகமூடிக் கொள்ளைக்காரர்களைக் கண்டவுடன் பயந்து நடுங்குவேன் என்பது நான் சரி. அதே சமயத்தில் இறைவனை மனதுக்குள் வழிபட்டு ஆபத்திலிருந்து விடுபடுவதற்கான ஸ்லோகத்தைச் சொல்லுவேன்.

இரா. செல்லா, சென்னை-33

''கம்னு ஒதுங்கிடு''

தயாராய் வைத்துள்ள முகமூடிகளை அணிந்து கொண்டு கையில் 'சவுக்குக்கட்டை' ஏந்தி முகமூடிகளை வரவேற்பேன். ''அண்ணே இது எங்க பேட்டை.. கம்னு ஒதுங்கிடு... இல்லே...'' என்று மிரட்டினால் என் அங்கு நிற்கிறான்.

ஸ்ரீதேவி, சென்னை-18





கதாநாயகர்களைக் கவனிப்பேன்

முகமூடிகளின் ஒவ்வொரு அங்க அசைவையும் செய்கையையும் உன்னிப்பாய்க் கவனித்து வைத்துக் கொண்டு 'த்ரில்லிங்'கான உண்மைக் கதையைத் தத்ரூபமாக எழுதுவேன்.

எஸ். டி. வாசுதேவன், புதுதில்லி-64

ராகமாலிகா வழங்கும் பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:

ஆர். சுரேஷ்
44, C.G.E. காலனி,
தூத்துக்குடி- 628003

இவள் செய்வது நியாயமா?

ஜி. நாராயணன்

கோட்டை அடுப்புக்குச் சாணம் மெழுகியிருந்தது... இரண்டு இழைகோலம் போட்ட கவடு தெரிந்தது...

ஒரு பார்வையில் கணேசன் சுற்றுப் புறத்தை அலசினான்... மாட்டுக் கொட்டிலுக்குள் இந்தக் கோட்டை அடுப்பு இருந்தது. இப்பொழுது கவனையெல்லாம் எடுத்துவிட்டு ஆழப்படுத்தியிருந்தார்கள்... ஆழம், ரொம்ப அதிகமாகப் போய் விட்ட மாதிரி தெரிந்தது... சட்டென்று கீழே உட்கார்ந்து அடுப்பினுள் கையை விட்டுப் பார்த்தான்... முழங்கைக்கு மேல் தரை தட்டுப்படாமல் இறங்கியது...

''...சீனு...!... எங்கேயாவது மணல் கிடைக்குமா பாரு... உள்ளே நிறைய அள்ளிப் போட்டு நிரவு... இத்தனை ஆழத்துக்குத் நீ எட்டாது... அப்புறம் 'விறகு ஆறதே — விறகு ஆறதே'ன்னு விட்டுக்காரன்...''

பேச்சை நிறுத்தி விட்டான்... கிணற்றடியைத் தாண்டி, நாலைந்து பேர் இந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள்...

''...எல்லாம் சரியா இருக்கா...?'' கொஞ்சம் உயரமாக இருந்தவர் விசாரித்தார்.

''...இருக்கு...''

''...பட்சணம் போடறது — சமையல், எல்லாம் பஸ்ட் கிளாஸா இருக்கணும்... ஒரு மிஸ்டேக் வரக் கூடாது...''

''...கவலையே வேண்டாம்... ஜமாய்ச்சுடலாம்...''

''...பேச்சோட நிறுத்திடக் கூடாது... செஞ்சு காட்டணும்... மாப்பிள்ளை டெல்லியில் பெரிய வேலையில் இருக்கார்... 'காட்டரிங் டெக்னாலஜி' படிச்சுட்டு நட்சத்திர ஹோட்டலிலே வேலை...! நம்ப 'பந்தா'வைப் பார்த்துட்டு அப்படியே அசந்து போயிடணும்... தெரியறதா...?''

கணேசன் தலையை ஆட்டினான்.

''...ஏதாவது வேணும்னு இவனைக் கேளுங்கோ... இவனைத்தான் சமையலுக்கு 'இன்சார்ஜா' போட்டிருக்கு...''

''...மொதல்லே, கொஞ்சம் மஞ்சள் பொடி, தேங்காய், கற்பூரம் எல்லாம் வேணும்... பூஜை பண்ண... அப்புறம் எங்களுக்கு வெத்திலே, சீவல், புகையிலே... இதுவும் அவசியம்...சாதத்தவலைக்குச் சுட்டச் சாக்கு இல்லே... இட்லி பானைக்கு வைக்க ஏழெட்டு வெள்ளைத்துணி...''

மஞ்சள்பொடி வந்தது... கொஞ்சம் தண்ணீர் விட்டுக் குழைத்துப் பிள்ளையார் பிடித்தான்... தேங்காயை உடைத்து... சற்பூரத்தைக் கொளுத்தி, அடுப்புக்குக் காட்டி.. ஒரு நிமிடம் கண்களை மூடி அதன் முன் நின்றான்... ஆரம்பித்தான்...

''...எவ்வளவு பெரிய இடம்...! கடைசியில் உன் கிட்ட வேலை செய்யறவன் தான் இவாளுக்கும் கிடைச்சிருக்கான்... கோட்டை அடுப்பா இருந்தா என்ன...? காஸ் அடுப்பா இருந்தா என்ன?... அடுப்படியில் தானே உத்தியோகம்...! ஆனால், என்னை மாதிரி உடம்பைத் திறந்து போட்டுண்டு அழுக்குப் பூணூலும் துண்டுமா இருக்க மாட்டான்... நல்ல வெள்ளை டிரஸ்ஸில் உன்கிட்டே நின்னுண்டு இருப்பான்...''

அடுப்பு இவனுக்கு எந்த பதிலும் சொல்லவில்லை... சொல்லாது... இவனுக்கும் தெரியும்... இருந்தும் பழக்கமாகி விட்டது... ஒரு கோபம் வந்தால், துக்கம் வந்தால், சந்தோஷம் வந்தால், எதையும் இங்கே வந்து கொட்டுவதில் ஒரு நிம்மதி இருந்தது. ஓடி வந்து தாய்ச்சியைத் தொடுகிற மாதிரி ஒரு பாதுகாப்பு இருந்தது... சுகம் இருந்தது. அடுப்பு, அம்மா மாதிரி என்று நினைத்தான்... இதனிடம் எதையும் சொல்லலாம்... அடுப்பு கோபப்படாது... முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளாது... குழந்தையைப் போட்டு அடிக்காது.... '...என்னத்தைக் கண்டேன் என்னத்தைக் கண்டேன்...' என்று முகத்தில் இடிக்காது.'

...என்னத்தைக் கண்டேன்... என்று கேட்கிறாளே. அதே கேள்வியை நானும் திருப்பிக் கேட்கிறேன்... இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நான் மாத்திரம் என்ன சுகத்தைக் கண்டேன்...

...பட்... அடுப்பு சின்னதாக ஒரு சத்தம் போட்டது... தொடர்ச்சியாக இந்த 'பட் பட்' ஓசை கேட்ட போது, 'படிடா, படிடா' என்று சொல்லுகிற மாதிரி இருந்தது... இது அடுப்பு இல்லே... அப்பாவின் குரல்...! அப்பாதான்...! வியர்வை ஒழுக அடுப்படியில் நிற்கும் அப்பா... 'ரெண்டு ரோஸ்ட்' என்று வெளியிலிருந்து குரல் வந்ததும், இலைக் கிழிசலைத் தோசைக்கல்லில் தேய்க்கிற அப்பா... அப்பாவுக்கு உடம்பெல்லாம் பலம்... ஒரே ஆளாகச் சாதத் தவலையை இறக்கி, சாக்கடைக்கு அருகில்

உருட்டி விட்டு விடுவார்... ஆனால், அத்தனை பெரிய உடம்புக்குக் கோபமே வராது... அதுவும் இவனிடம் பேசும் போது இன்னும் குழைவு வந்து விடும்... '...படிடா கண்ணு.. படிடா கண்ணு...' என்று குரல் — உடல் எல்லாம் கெஞ்சும்... '...படிச்சால் தான் நமக்குக் காலம்...' என்று விரல்கள் தலையைத் தடவும்... அப்பா, தன் அனுபவத்திலிருந்து சொல்லியிருக்கிறார் என்பது இப்பொழுது புரிகிறது... அப்பொழுது தெரியவில்லை... உணரவில்லை... சீட்டாட்டத்திலும், புகையிலையிலும், அக்கப்போரிலும் பொழுதைக் கழித்தாயிற்று...விழித்துக் கொண்ட போது அப்பா இல்லை... அவர் வைத்து விட்டுப் போன கரண்டி இருந்தது... அதைக் கையில் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது...

"...கொஞ்சம் சூடா பால் இருக்குமா...?"

வாப்ரா ஒரு பெண் நின்றிருந்தாள்... நடு வயது... இடுப்பில் ஒரு குழந்தை நிற்காமல் நழுவிக் கொண்டிருந்தது...

"...இப்ப ஒண்ணும் முடியாது... அடுப்பில் எண்ணெய்க் கொப்பரை இருக்கு... இறக்கிப்பிட்டு வைக்கணும்... டயம் ஆகும்"

"...குழந்தை பசிக்கிறதுன்னு அழுது..."

"நம்ப அவசரத்துக்கெல்லாம் அடுப்பு கேட்காது..."

"...இட்ஸ் ஓ. கே... நான் வெயிட் பண்றேன்..."

அந்த நிதானம், இவனை அடுப்பிலிருந்து எண்ணெயை இறக்க வைத்தது... பால் அடுக்கை ஏற்ற வைத்தது... கொஞ்சமாக எடுத்து, சர்க்கரையைப் போட்டு ஆற்ற வைத்தது...

"...ரமீ... தாங்க்யூ சொல்லு..."

"...தாங்க்யூ அங்கிள்..."

திரும்பவும் வந்து உட்கார்ந்த போது அடுப்பு சிரிக்கிற மாதிரி இருந்தது... '...சிரி



ரி...' என்று முனகினான்... அப்பா சொன்னபடி, படித்திருந்தால் இப்படி, நீ சிரிப்பதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம்... உன் அருகில் உட்கார்ந்து கொத்தவரங்காய் காம்பு ஆய்ந்து கொண்டிருக்க வேண்டாம்... உன்னோடு பேசிக் கொண்டிருக்க வேண்டாம்... எங்கேயாவது ஒரு ஆபீஸில் வேலையில் இருக்கலாம்... எல்லோரையும் போல் நானும் பந்தியில் உட்கார்ந்து கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டு விட்டுப் போகலாம்...

கொஞ்சம் இங்கிதமாக — இனிமையாகப் பேசத் தெரிந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு இருந்திருக்கலாம்...

இரண்டு நாள்...


அதற்குள் இடுப்பு விட்டுப் போயிற்று... காலையில் மூன்று மணிக்கு எழுந்தால், மாற்றி மாற்றி, அடுப்பில் அண்டாவும், தவலையும், இட்லிப்பானையும், ஏற்றி, இறக்கி... இலைஇலையாகக் குனிந்து நிமிர்ந்து பரிமாறி... நினைந்து நினைத்துக் காப்பி கலந்து... '...சம்பந்தி பேர் கேட்கிறா.'. உடனே வேணும்...' ராத்திரி பன்னிரண்டு மணி வரையாவது வந்து கொண்டேயிருப்பார்கள்... 'எனக்கு இலை கூட வேண்டாம்... ஒரு கிழிசல் போறும்... இந்த அடுப்பு ஓரமா உட்கார்ந்துண்டே சாப்பிடறேன்...'

அத்தனை பட்சணமும், பாயசமும் இருந்தும் இவனுக்கு எதுவும் வேண்டியிருக்கவில்லை... வழக்கம் போல் ரசம் சாதம்தான்.. புகையிலேதான்...

கட்டுசாத மூட்டையுடன் கோட்டை அடுப்பு அணைந்தது... பழையபடி சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கல்யாண வீட்டை விட்டுக் கிளம்பியபோது

கிரிக்கெட் வீரர் சந்தீப் பாட்டீல் தான் நடித்த படமான 'கபி அஜ்நபி தே' என்ற படத்தினை இந்தியக் கிரிக்கெட் குழுவிற்குத் திரையிட்டுக் காண்பித்தார். படத்தில் ஒரு காட்சியில் நடிகை பூனம் தில்லானை ஓடிப் பிடித்துக் கொண்டிருந்தார் பாட்டீல். அக்காட்சியின் ஒரு பகுதி ஸ்லோமோஷனில் அமைந்திருந்தது. அதனைக் கண்ட கபில் தேவ், ''இக்காட்சியை ஸ்லோமோஷனில் காண்பிக்க வேண்டியதில்லை, சந்தீப்! நீ சாதாரணமாக ஓடினாலே இப்படித்தான் இருக்கும்'' என்று ஒரு போடு போட்டார்!

நன்றி: 'இ சன் இதழ்'.
தகவல்: கோ. சு. சுரேஷ்.



'அப்பாடா' என்றிருந்தது... இவ்வளவு நாள் இருந்த அமளி இல்லை... அவசரம் இல்லை... எங்கேயாவது சற்று நேரம் விழுந்து கிடக்கலாம் போல் உடலில் அத்தனை அசதி...

வீட்டுக்குள் நுழைந்த போது காமாட்சி எங்கேயோ வெளியில் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

''...எங்கே கிளம்பிட்டே...?''

''...சினிமாவுக்கு... உங்களைக் காணுமே— குழந்தையை என்ன பண்ணறதுன்னு பார்த்தேன்... நல்லவேளை...''

''...ரெண்டு நாள் முன்னாடிதான் சினிமா போன மாதிரி இருக்கு... இப்ப என்ன சினிமா...?''

''...அப்படிக் கேளுங்கோ... உங்களை மாதிரி நான் வெளியில போறேனா... வாசல்லே போறேனா... காலம்பற எழுந்திருந்தா... சமைக்கிறது... சாப்பிடறது... பாத்திரம் தேய்க்கிறது... துணி தோய்க்கிறது... வேலை... வேலை... வேலை... வேற என்னத்தைக் கண்டேன்... ஒவ்வொருத்தர் எப்படியெல்லாம் அனுபவிக்கிறா தெரியுமா...?''

''...நீ கிளம்பு... சினிமாவுக்கு டயம் ஆயிடுத்து...''

''...மத்தியான சாதம் இருக்கு... அதை கூட வைச்சு... கொஞ்சம் ரசம் வைச்சுடுங்கோ... அப்பளம் இருக்கு... சுட்டு, மூடி வைக்கணும்... இல்லே நமுத்துப் போயிடும்...''

''...நானா...! நான் அலுத்துப் போய் வரேன்... என்கிட்டே...''

''...யாருக்குத்தான் அலுப்பு இல்லை... எனக்கு மாத்திரம் உடம்பு இரும்பினியாப் பண்ணியிருக்கு... தினம் ஆயிரம் பேருக்கு சமையல் செய்யறேள்... ரெண்டு பேருக்கு சான்ற மாதிரி ஒரு ரசம் — சாதம் வைக்க முடியாதா...?... இது ஒரு கஷ்டமா...''

அதுதான் சிரமம் என்பதை இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது...?

அப்படியே தரையில் உட்கார்ந்தான்... இயலாமை கோபமாக மாறியது... சட்டென்று ஒரு வேகம் வந்தது... மனுஷன் அலுத்துப் போய் வரான்... சினிமாவாக் கேட்கறது இவளுக்கு... அப்பளம் நமுத்துப் போகாம மூடி வைக்கணுமா... வா... என்ன ஆனாலும் சரி... இன்னைக்குச் சமைக்கப் போறது இல்லை... பார்த்துடலாம்...

இத்தனை நேரம் எட்டவே இருந்த குழந்தை இவன் அருகில் வந்தது... மெல்ல தொட்டுப் பார்த்தது. அப்படியே கழுத்தைக் கட்டிக் கொண்டது... சிணுங்கியது....

''...அப்பா... தொப்பை பசிக்கிறது...''

சட்டென்று கணேசன் குழந்தையைப் பார்த்தான்... வயிறு உள்ளடங்கி இருந்தது. ஒரு நிமிடம் யோசனை... குழந்தையின் பசியை நினைத்ததும், யோசனை போயிற்று...

...எழுந்தான்... குமுட்டியைப் பற்ற வைத்தான்...

''...இவ செய்யறது நியாயமாய் இருக்கா...?''

அதைப் பார்த்துக் கேட்டான்.

சிறுவை முருகன்

சுதந்திர தினத்தை இறைவனை வணங்கி வழிபாடு செய்யும் தினமாகத் திருவல்லிக்கேணி முருகன் திருவருட் சங்க அங்கத்தினர்கள் (35, முருகப்ப முதலி தெரு, சென்னை–5.) கொண்டாடுகிறார்கள் என்று தெரிந்த போது இந்த நல்ல காரியத்தில் பங்கு பெற வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. சிறுவாபுரி என்ற ஊருக்குச் சென்று தமிழ்தந்த கந்தப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து கொண்டாடுகிறார்கள் என்று தெரிந்த போது உற்சாகமே உண்டாகி விட்டது. திருப்புகழில் மிகுந்த ஈடுபாடுடைய திரு ஜி. வெங்கடசுப்ரமணியம் தம்பதியினருடன் சிறுவாபுரிக்குக் கிளம்பினேன்.

சாலையின் இருபுறமும் வாழைத் தோப்புக்கள். வளம் கொழிக்கும் பிரதேசம். நீர் நிலைகள், தாமரைக் குளம். அமைதியும், வளமும் அழகும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? ஈசன் எந்தை இணையடி நிழல் போலக் குளிர்ந்திருக்கும்.

தன் சிறுவை என்றும், திருவாழ் சிறுவாபுரி என்றும் அருணகிரி நாதரால் புகழப்பட்ட அழகான ஊர் ஆரணி பெரியபாளையம் பாதையில் சென்னையிலிருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. பேசின் பிரிட்ஜ் பஸ் நிலையத்திலிருந்து 133 என்னுள்ள பேருந்து இந்த ஊர் வழியே செல்கிறது. சிறுவரம்பேடு என்றும் சின்னம்பேடு என்றும் வழங்கி வரும் ஊர்.

இறைவன் அருள் பெற்ற அருணகிரிநாதருடைய நான்கு திருப்புகழ்களைச் சூடிப் பெருமை பெற்றிருக்கிறது இந்தத் தலம். அவர் குறிப்பிடுவது போலவே நாமும் இந்த ஊரைச் சிறுவை என்றே அழைக்கலாம். தலத்தை நெருங்கும் போதே,

சீதள வாரிஜ பாதா நமோ நம
நாரத கீதவி நோதா நமோ நம
சேவல மாமயில் ப்ரீதா நமோ நம

என்ற அர்ச்சனைத் திருப்புகழைப் பாடத் தொடங்குகிறோம்.

சின்னக் கோவிலாக இருக்கும் என்று நினைத்ததற்கு மாறாக உயர்ந்து விளங்கும் புதிய கோபுரம்.

அபிஷேகக் குழுவினர் இன்னும் வரவில்லை. ஆகையால் சிறுவையிலுள்ள இதர கோயில்களான பெருமாள் கோயிலையும், சிவன் கோயிலையும் தரிசித்துக் கொண்டு வந்து விடலாம் என்று கிளம்பினோம்.

பெருமாள் கோவிலைப் பார்த்ததுமே ஓரளவு நன்றாகப் பரிபாலிக்கப்பட்டு வருகிற கோவில் என்று தெரிந்தது. இந்தக் கோவிலிலேயே பிரமோஷனையோ, சம்பள உயர்வையோ எதிர்பார்க்காமல் முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொண்டு செய்து வருகிறார் திரு. கிருஷ்ணஸ்வாமி பட்டர்.


ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மேற்கு நோக்கிய சந்நிதி. மேற்கு வாசல் கதவைத் திறந்ததும் குளுகுளுவென்று மென் காற்று வீசுகிறது. நெடியோனை நீண்டாத் திருமேனியானைக் கண்கள் நிரம்பும்படி தரிசனம் செய்து கொண்டே பட்டர் கூறும் கதையைக் கேட்கிறோம்.

''ஒரு காலத்தில் இந்தப் பிரதேசம் முழுவதுமே வால்மீகி மகரிஷியின் ஆசிரமத்தோடு தொடர்புடையதாக இருந்தது. குசலவர்கள் மகரிஷியுடன் காட்டைச்சுற்றி வரும் போது இந்தக் கோவிலைக் கண்டுவழிபட்டார்கள். இதே இடத்தில் தான் அந்த இரண்டு சிறுவர்களும் தங்கள் தோப்பனார் என்று அறியாமல் ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியோடு யுத்தம் செய்து ஜெயித்தார்கள்.

✕ ஸ்ரீ உண்ணாமலை அம்மன் சிறுவை முருகனுக்கு வேல் அளிக்குமுன் நவரத்ன வேலுடன் காட்சியளிக்கும் நிலை.



✕ ''மரகத மயில்''



''சிறுவர் அம்பு எடு''த்த ஊரானபடியால் சிறுவரம்பேடு என்று பெயர் வந்தது. குசலவர்கள் மங்களா சாஸனம் செய்த பெருமாள் இவர்'' என்று கூறினார் பெரியவர்.

குசஸ்தல நதி தீரத்தில் குசநாபர் என்ற முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவர் வரதராஜப் பெருமாள். இவருக்குத் திருமஞ்சனம் கிடையாது. சாம்பிராணித் தைலம் தான் சாத்துவார்கள்.

உற்சவரான பெருமாளுடைய திருநாமம் பிரணதார்த்தி ஹரர்.

முக மண்டபத்திலேயே தெற்கு நோக்கி ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் வீற்றிருக்கிறார். கலை சொட்டும் வதனம். பெருமாள் மடியில் களங்கமற்ற புன்னகையோடு அருள் புரியக் காத்திருக்கும் திருமகள்.

''இருபத்திரண்டு ஏக்கர் நிலம் இருக்கு பெருமாளுக்கு. ஆனால் வருமானம் இல்லை. உற்சவமெல்லாம் இருபது வருடத்துக்கு முன்னால் நடத்தினோம். இப்போதும் ஏகாதசியில் கருட சேவை விடாமல் நடத்தி வருகிறேன்'' என்றார் பட்டர். வழக்கமாகக் கேள்விப்படுகிற கதைதான்.

''குறைந்தபட்சம் ஒரு கோவிலுக்கு மேளக்காரர், மடைப்பள்ளியில் அமுது செய்பவர், தீர்த்தக்காரர், பட்டர் இந்த நான்கு பேராவது நியாயமாகத் தொண்டு செய்ய வேணும். நான் ஒருத்தன் செய்கிறேன்'' என்று கூறினார் பட்டர். அவருடைய குரலில் பெருமிதம் தான் தொனித்தது!

சமீப காலத்தில் கிழக்கு நோக்கி ஸ்ரீநிவாஸப் பெருமாளைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார் ஒரு பக்தர். இவருக்குத் திருமஞ்சனம் உண்டு.


கிழக்கு நோக்கிய தாயார் சந்நிதி. பெருந்தேவித் தாயார் மிகுந்த வரப்ரஸாதியாம். நினைத்த காரியம் கைகூடுமாம். ஸ்ரீ ஆஞ்சநேயரையும் கோதை நாச்சியாரையும் தரிசனம் செய்து கொண்டு எளியமுறையில் அழகாக நித்ய பூஜைகள் நடக்கும் ஒரு நல்ல கோவிலைக் கண்ட திருப்தியோடு பெருமாள் கோயிலுக்கு நேர் எதிரே உள்ள சிவன் கோவிலை அடைகிறோம்.

இடிந்து போன மதில் சுவர். வேலிக்காத்தான் முட்செடிகள் வளர்ந்திருக்கும் பிராகாரம். நெருஞ்சிமுள் வேறு. பரிதாபமாகக் காட்சியளிக்கிறது ஸ்ரீ அகஸ்தீச்வர ஸ்வாமி கோவில்.

அகஸ்தீச்வரருக்குத் தீபாராதனை செய்யும்போது லிங்கத் திருமேனி சற்று திரும்பியிருப்பது போலக் காண்கிறது. ஆனந்த வல்லி அம்பிகையின் கண்கள் தீர்க்கமாக நீண்டு விளங்குகிறது. கருணை பொழியும் திருவிழிகள். விசாலாக்ஷிதான். அடியார்கள் கவனம் இந்தக் கோவிலின் மீது எப்போது திரும்புமோ?

ஆடகம் பயில் கோபுர மாமதில்
ஆலயம்பல வீதியு மேநிறை
வான தென் சிறுவாபுரிமேவிய பெருமாளே

ஆனந்தி



✕ ஸ்ரீ பாலசுப்ரமணிய ஸ்வாமி கோவில் சிறுவாபுரி



✕ சிறுவாபுரி பாலசுப்பிரமணியன்

என்பது அருணகிரிநாதர் திருவாக்கு. 'தங்கக் கலசங்களோடும் உயர்ந்த மதில்களோடும் கூடிய பல கோவில்கள் நிறைந்த ஊர்' என்று வாழ்த்தியிருக்கிறாரே! அது வீண் போகாது என்றே தோன்றுகிறது.

அபிஷேகம் தொடங்கி விடப்போகிறதே என்று அவசரமாகச் செல்கிறோம். பார்வதியாள் தரு பாலனை பால குமாரஸ்வாமி கோவில் இப்போது புதுப்பொலிவுடன் திகழ்கிறது. விளக்குகள் ஏற்றப்பட்டு ஒளிதிகழக் காட்சி தருகிறார் பாலகுமாரன். ஒரு பெரிய பஸ்ஸில் வந்து இறங்கிய பக்தர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

கைதேய, தோள் நோகச் சந்தனம் அரைக்கிறார் ஒரு அடியவர். பழங்களைப் பிழிந்து கொண்டிருக்கிறார் ஒருவர். பஞ்சாமிர்தம் செய்கிறார் ஒருவர். விளக்குகளுக்கு எண்ணெய் வார்க்கிறார் ஒருவர். புஷ்ப மாலைகள் எடுத்து வைக்கிறார் ஒருவர். கைநிறையத் தாமரை மலர்களை எடுத்து வருகிறார் ஒருவர்.

இந்தக் கோவிலின் தல விருக்ஷம் மகிழ மரமென்று கூறினார்கள். ஏன் தெரியுமா? 'அண்டர் பதி குடியேற' என்று தொடங்கும் மிக அழகிய திருப்புகழில் பல தடவை மகிழ் என்ற சொல் வருகிறது. இந்த ஊருக்கு அருணகிரி நாதர் வந்த போது அவருக்கு ஏதோ ஒரு மகத்தான இன்ப அனுபவம் ஏற்பட்டிருக்க வேண்டும். வழக்கமாகக் காணப்படும் ஆத்ம நிந்தனையை இதில் காண முடியவில்லை. மனம் மகிழ்ந்து ஆனந்தமாகப் பாடிய திருப்புகழ். இதைத் தினமும் பாடி வந்தால் இல்லறத்தில் இன்பம் மிகுந்து எல்லா மகிழ்ச்சிகளும் நிலவும் என்பது சிறுவாபுரி முருகனுடைய தொண்டர்களின் அனுபவம்.

அதனால் மகிழ மரத்தையே தல விருட்சமாக வளர்த்து வருகிறார்கள். மகிழ வேண்டிய செயல். எந்த மரத்தை வளர்த்தாலும் மகிழலாமே.

''ஏன் இரண்டு மயில்கள் இருக்கின்றன?'' என்று கேட்கிறோம். முதலில் இருந்த மயூரத்தை யாரோ பெயர்த்தெடுக்க முயன்று பின்னப்படுத்தி விட்டார்களாம். மிகவும்சிலை வழுகு வாய்ந்த மரகத மயில். அதாவது பசுமை நிறம் பாய்ந்த கல்லில் செய்த மயில். தோகையின் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பின்னமான சிரத்தை ஒட்டவைத்திருக்கிறார்கள். பிறகு பூஜைக்காகப் புதிய மயில் செய்திருக்கிறார்கள்.

முருகப் பெருமானுக்கு வலது பக்கத்தில் தாயும் தந்தையும் குடிகொண்டிருக்கின்றனர். அருணாசலேச்வரர், உண்ணாமுலையம்மன் இருவரும் அவனுடைய தொழிலைத் தானே செய்யத் தொடங்கி விட்ட மகனைப் பார்த்துப் பூரித்துப் போயிருக்கிறார்கள்.

உற்சவ மூர்த்திகளும் அற்புத அழகுடன் விளங்குகின்றனர். சிவன் கோவில் நடராஜரும், சிவகாமியும் பாதுகாப்புக்காக மைந்தனோடு குடியேறி விட்டார்கள்.

அக்ஷமாலையும், கமண்டலமும் ஏந்திய கரங்களுடன் மாமதி போல் முகத்தில் இன்னல்கள் தீர்க்கும் புன்னகையோடு ஆகம சார சொரூபமாகக் காட்சிதரும் ஞானக் குமரன்.

அபிஷேகம் தொடங்கி விட்டது. குழந்தையின் பட்டுப் போன்ற மேனியில் ஒரு தாய் எண்ணெய் தடவுவது போல் குருக்கள் எண்ணெயைத் தடவுகிறார். நீராட்டுதல் தொடர்கிறது. கேள்விப்படாத அபிஷேகங்கள். சாத்துக்குடிச் சாறு, திராட்சை ரசம், வாழைப்பழம் இவற்றால் அபிஷேகம். பன்னீர், இளநீர், பால், தயிர், சந்தனம், விபூதி, கடைசியாகப் பஞ்சாமிர்த அபிஷேகங்கள். உற்சவரான ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானையோடு வீற்றிருக்கிறார். அவருக்கும் கூடவே அபிஷேகமாகிறது. ஒரு மணி நேரம் நிதானமாக நடக்கிறது. திருப்புகழ் இசையில் நாம் நனைந்து விடுகிறோம். ஆண்களும், பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு இசை மழை பொழிகிறார்கள்.

திரை போட்டதும் வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன் அவர்கள் சிறுவாபுரியின் பெருமையையும், திருப்புகழின் அருமையையும் கூறி விளக்குகிறார்.

குசலவர்கள் இங்கு ராமபிரானை எதிர்த்து வெற்றி பெற்றதை அருணகிரிநாதர் பாடியிருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

செயம தான நகர்அ மர்ந்த
அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே.

என்று இந்தத் தலத்தை குபேரனின் அளகாபுரிக்கு ஒப்பிட்டிருப்பதை எடுத்துக் கூறுகிறார்.

திரை விலகித் தீபாராதனை ஆகிறது. அடாடா! நவரத்தின வேல் பிடித்து, பட்டுப் பீதாம்பரம் அணிந்து, வண்ணமும், வனப்பும் மிகுந்த மாலைகள் துலங்க, சர விளக்குகளின் ஒளியில்ஒளிரும் பாலசுப்பிரமணியரைப் பார்க்கும்போது, ''தீபமங்கள ஜோதி நமோ நமோ'' என்று பிரார்த்தித்துக் கொண்டே கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். ஆயிரம் பெயர்களால் அழைத்துப் பூக்களைச் சொரிகிறார் குருக்கள். அடியார்களின் ஜெய கோஷம் இடையிடையே கோபுரத்தில் மோதி எதிரொலிக்கிறது. மலர்ந்த பங்கஜ மலர்கள் பெருமானை அலங்கரிக்கின்றன.

எல்லாவிதமான அலங்கார தீபவரிசைகளும், ஷோடச உபசாரங்களும் செய்து நிறைவாகப் பூஜையைச் சிறக்கச் செய்கிறார் குருக்கள். நிருத்யம் ஒன்றுதான் குறை.

சிக்கலில் நடப்பது போலவே சூரசம்ஹார உற்சவம் நடத்த வேண்டும் என்று நவரத்தின வேல் செய்து கொடுத்திருக்கிறார் ஒரு அன்பர். சிக்கல் தலத்தில் நடப்பதுபோலவே தேவியின் கையிலிருந்து சக்திவேல் வாங்குவதைச் சிறப்பான உற்சவமாக நடத்திவருகிறார்கள்.

பிற்பகல் மணி இரண்டாகி விட்டது. இது வரை பசி, தாகம் எதுவுமே நினைவில்லாமல் அப்படியே முருகப் பெருமானின் பேரருளில் திளைத்துக் கொண்டிருந்தோம். ''இங்கு வாங்கோ'' என்று கூப்பிடுகிறார்கள். என்னவென்று போய்ப் பார்த்தால் இலை போட்டுச் சுட்டு சாதம் பரிமாறுகிறார்கள். கந்த பெருமானின் திருவருளில் திளைத்து, திருப்புகழ் இசையில் நீந்திக் கரைசேர்ந்த நமக்குப் புளியஞ்சாதமும் தயிர் சாதமும் தேவாமிர்தமாக இருக்கிறது. வாழை, பேரிச்சை, திராட்சை முதலிய பழங்கள் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட பஞ்சாமிர்தம் எப்படி இருந்தது என்று வார்த்தைகளால் எடுத்துக் கூற முடியுமா?

புகைப்படங்கள்: ரா. கிருஷ்ணன்

சைலே...ன்ஸ்

கிசு கிசுவுக்கு ஆளாகாதவர்



✖ சிவகுமார்

போரடிக்கவில்லையா?

திரைப்படக் கல்லூரியில் 'உன்னை நான் சந்தித்தேன்' படப்பிடிப்பு. மாடியில் இருந்த மேக்கப் ரூமில் சிவகுமார். கரும் பச்சை பேண்ட்டுக்கு மேட்சாக லைட் கிரீனில் சட்டை. எதிரே இருந்த பெரிய கண்ணாடியில் தன் பிம்பத்தை அப்படியும் இப்படியுமாய்த் திருப்பிக் கொண்டிருந்தார்.

'சிவகுமார், தன் குழந்தைகளின் புகைப் படங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதையோ, அவர்களைப் பற்றி எழுதுவதையோ அனுமதிப்பதில்லை' என்று ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை ஆமோதித்தார்.

''என் மகன்களுக்கு, தாங்கள் ஒரு நடிகரின் பிள்ளைகள் என்ற பந்தாவான எண்ணம் வந்துவிடக்கூடாது. அது அவர்கள் எதிர்காலத்தைப் பாதிக்கும். படிப்பை விட்டுவிட்டு சினிமா ஆசையில் இறங்கி விடுவார்கள்'' என்றார். அப்படி இருந்தும், இவர் பிள்ளைகள் ஒரு பள்ளிக்கூட விழாவில் நடித்ததை, ஒரு பத்திரிகை படம் பிடித்துப் பிரசுரித்து விட்டதாம்.

''இத்தனை வருஷமாய் எந்தக் கிசுகிசுவிற்கும் ஆளாகாமல் இருக்கிறீர்களே... இது உங்களுக்குப் போரடிக்கவில்லையா?'' — இது நான்.

''இத்தனை வருஷமாய் ஒரே மனைவியோடு வாழ்கிறீர்களே... போரடிக்கவில்லையா என்கிற மாதிரி இருக்கிறது, நீங்கள் கேட்பது!'' — இது அவர்.



✖ ரேகா

வாரிசுகளின் வாரிசுகள்

இந்தியை அடுத்து இப்போது தமிழிலும் ஒரு ரேகா. மறைந்த நடிகை கண்ணாம்பாவின் பேத்தி.

ஒரு வகையில் ரேகா அவர் பாட்டிக்கு நேர் எதிர். கண்ணாம்பா பதினெட்டு முழம் புடவையில் நடித்தார். இவரோ பதினெட்டு அங்குல டிரஸ்ஸே போதும் என்று, தாராளமாகக் கவர்ச்சி காட்டி நடிக்கிறாராம்.

நடிகர்களின் வாரிசுகள் மட்டுமல்ல; வாரிசுகளின் வாரிசுகளும் சினிமா உலகை விடுவதாக இல்லை!

ராதாவின் தன்னம்பிக்கை!

வாகினி ஸ்டுடியோ. தெலுங்கு படப் பிடிப்பு. வெளிர்நீல நிற பேண்ட்டும், குங்குமச் சிவப்பில் கை இல்லாத சட்டையுமாய் உட்கார்ந்திருந்தார், ராதா.

ராதாவின் முதல் இந்திப் படம் சமீபத்தில் ரிலீஸாகி, தோல்வியும் அடைந்து விட்டது. ஸ்ரீதேவியை இந்திக்குக் கொண்டு போன அதே ராகவேந்திர ராவ் டைரக்ஷனில் தான் ராதாவும் அறிமுகமாகி இருக்கிறார்.

''இந்திப் படம் தோல்வி அடைந்தது பற்றி எனக்கொன்றும் வருத்தமில்லை. இந்தியில் நடித்துப் புகழ் பெற வேண்டும் என்பதும் என் லட்சியமல்ல. என் திறமை மீது நம்பிக்கை இருக்கிறது'' என்று ஒரு நீண்ட லெக்சரே அடித்தார்.

''நான் தமிழ்ப்படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டு விட்டேன் என்றும்

சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இல்லை. இப்போது நீதியின் நிழல், வயசு அப்படி, அம்பிகை நேரில் வந்தாள் ஆகிய படங்களில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன்'' என்றார்!

பாடல் ஹிட்டானால் போதுமா?

பி. எஸ். வி. பிக்சர்ஸின் அடுத்த படத்திற்கான ரிகார்டிங். மனோரமாவுடன் சேர்ந்து தன் இசையில் தானே ஒரு பாடலைப் பாடி விட்டு வெளியே வந்தார், இசை அமைப்பாளர் சந்திரபோஸ். தஞ்சை மாவட்டம் சீர்காழிக்காரர்.

''ஒரு நடிகனாகத்தான் சினிமாவிற்கு அறிமுகமானேன். 15 வயதில் தேவர் பிலிம்ஸின் தாயும் மகளும் படத்தில் நடித்தேன். அப்புறம் நடிப்பை விட்டுவிட்டு இசையைப் பிடித்துக் கொண்டேன். ஆர். எஸ். மனோகர் நாடகக் குழுவில் கொஞ்ச நாள் இசைக்குழுவில் இருந்தேன். பிறகு பிரமிளா நாடகக் குழுவிற்கு இசை அமைப்பாளனாகவும் சில ஆண்டுகள் இருந்தேன்!'' என்றார்.

''தமிழ்ப்பட ஆடியன்ஸைப் பொறுத்த வரை எந்தப் பாட்டு ஹிட் ஆகும் என்றே சொல்ல முடியாது. அவ்வப்போது அவர்கள் டேஸ்ட் மாறிக் கொண்டே இருக்கிறது. நாம் என்னதான் கஷ்டப்பட்டு கம்போஸ் பண்ணிப் பாடல்களை ஹிட் ஆகுமாறு பண்ணினாலும் படம் தோல்வி அடைந்து விட்டால் இசை அமைப்பாளனும் எடுபடாமல் போய் விடுகிறான்'' என்றார், வருத்தம் தொனிக்க.



✕ சந்திரபோஸ்

—சம்பத்ஜி

நரசுஸ் காபி...



நல்ல நட்பு போன்றது.
இதய பூர்வமானது.
மனமார மகிழ்விப்பது.

ஜீவனுள்ள
ஒரே காபி!

நரசுஸ் காபி

தெர்மலோ முறை காபி!



நரசுஸ் காபி கம்பெனி சேலம் 636 007. கிளைகள்: தமிழ்நாடெங்கும்.


புரியாத அன்பு
மாயவன்

இன்று காலையில் தான் எனக்கு அந்தச் சந்தேகம் வந்தது. கவிதா என்னை மனசாரக் காதலிக்கிறளோ? என்ற சந்தேகம். இந்தப் பத்து வருஷப் பழக்கத்தில் இன்று தான் இந்தக் கோணத்தில் அவளைப் பார்க்கிறேன். திருச்சியிலிருந்து அவள் அப்பாவிற்கு டிரான்ஸ்பராகி எங்கள் பக்கத்து வீட்டில் குடிவந்த கொஞ்ச நாளில் எங்கள் பழக்கம் ஆரம்பமாகியது.

கவிதாவுடன் கேரம் ஆடுவது, கோயிலுக்குப் போவது, சினிமாவிற்குப் போய் விட்டு வந்து அரட்டையடிப்பது... எல்லாம் கவிதாவுடன்தான். நெருங்கிய சிலபேர்களே கேட்டுப் பார்த்து விட்டார்கள், கவிதா உனக்கு உறவா என்று?

முதல் கதை பிரசுரமானதும் கவிதா ஸ்வீட்டோடு வந்தாள். 'கங்ராஜுலேஷன்ஸ்.'

அன்று எனக்குப் பிடித்த நீல நிறத் தாவணி. ''என்ன கவிதா! என் கதை பிரசுரம் ஆயிருக்கு! நீ ஸ்வீட் தர்றியே...''

''தரக் கூடாதா! உங்க முயற்சி வெற்றி பெற்றதற்கு சந்தோஷமா நான் தர்ற பரிசு...''

''உண்மையிலேயே நீ வித்தியாசமானவ தான்'' பதிலுக்கு ஒரு புன்முறுவல்.

''தியாகு நான் சைக்கிள் கத்துக்கணும்'' என்றாள்.

''சைக்கிள் எதுக்கு கவிதா! அதுதவிர லேடீஸ் சைக்கிள் ஓட்டறது இந்த ஊருக்குப் புதுசு'' என்று கூறிச் சமாளிக்க முயன்றேன்.

''நான் காலேஜ் போகச் சௌகரியமாக இருக்கும். இந்த ஊருக்குப் புதுப் பழக்கம்னு தான் அதை ஆரம்பிச்சு வைக்கறேன். ஸோ... அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீங்க என்ன செய்யறீங்கன்னு... ஒரு வாடகை சைக்கிள் எடுக்கறீங்க...''

''கவிதா நானா?'' திணறினேன்.

''உஸ். பேசப் படாது. சொன்னு செய்யறீங்க. எடுத்து எனக்குச் சைக்கிள் சொல்லித் தர்றீங்க...'' அவள் போய் விட்டாள்.

முதலில் அவளின் நெருக்கம் பயமாகத் தான் இருந்தது. என் பிடிக்குள் அவள் அடங்கிய மாதிரி, அவளின் ஸ்பரிசமும் கொஞ்சம் பரவசப்படுத்தியது. பிறகு அவளின் ஆர்வமும் குழந்தைத்தனமான சிரிப்பும் என் கவனத்தை, சலனத்தைத் திசை மாற்றின.

ஒரு பெண்மணி திராட்சைக் கொத்தை நபி அவர்களிடம் கொடுத்து அது தமது தோட்டத்தில் விளைந்ததாயும், முதல் முதலில் நபி அவர்கள் புசிக்கக் கொடுப்பதாகவும் கூறினாள்.

நபி அத்திராட்சைக் கொத்தில் சிறிது சாப்பிட்டார். பின் முழுவதையும் சாப்பிட்டு விட்டு நன்றாக இருப்பதாகக் கூறினார். அப்பெண்மணி மகிழ்ச்சியுடன் விடைபெற்றாள்.

அருகிலிருந்த நபியின் நண்பர்கள், ''எந்தப் பொருள் வந்தாலும் மற்றவர்களுக்குக் கொடுத்து உண்பதுதானே உங்கள் வழக்கம்?'' என வினவினார்கள்.

அதற்கு நபி, ''அப்பெண்மணி கொண்டு வந்த திராட்சை மிகவும் புளிப்பாக இருந்தது. அதை உங்களுக்குக் கொடுத்தால் பழம் புளிக்கிறது என்று நீங்கள் சொல்லிவிடலாம். இதனால் அப்பெண்மணி மிகவும் வருத்தமடைவாள். அதனால் தான் உங்களுக்குக் கொடுக்கவில்லை'' என்றார்.

—எஸ். முகம்மது யூசுப்.

அந்த நேரத்தில் கூட அவள் என்னைக் காதலிப்பதாய் நான் நினைத்துப் பார்க்கவில்லை.

ஜஸ்ட் ஒரு சான்ஸ். அவ்வளவே!

அம்மா என் கல்யாண விஷயத்தை, பெண் பார்க்கப் போனதை, நிச்சயமானதை எதையுமே கவிதாவிடம் சொல்லவில்லை போலும்!

அம்மா கட்டாயம் சொல்லியிருப்பாள் என்று நானும் விட்டுவிட்டேன்!

அவள் வீட்டிலும் அதே மாதிரி விஷயத்தை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

நான் என் முதல் கதை பிரசுரமானதிலிருந்து ஒவ்வொரு கதையையும் முதன் முதலாக அவளிடம் தான் படிக்கக் கொடுப்பேன்.

இந்தத் தடவை பிரசுரமான ஒரு கதையுடன் என் கல்யாணப் பத்திரிகையையும் உள்ளே வைத்துக் கொண்டு போனேன்.

அவள் சுவாரஸ்யமாக எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

''கவி...''

சட்டென்று கவனம் கலைந்து என் பக்கம் திரும்பினாள்.

''நீங்களா...?''

''எஸ்...''

அவளுக்கு ஆச்சரியம்.

''என்ன விஷயம். சும்மா வரமாட்டீங்களே! ஏதாவது பத்திரிகைல உங்க பேர் வந்திருக்கா...'' ஆவலுடன் கேட்டாள். கண்கள் துருதுருவென்று என் கைகளையே ஆராய்ந்தன.

''எஸ்... ரெண்டு பத்திரிகைல என் பேர் வந்திருக்கு...''

''ரெண்டுலேயோ! ஒரு நேரத்திலேயேவா! ஏ அப்பா! பெரிய ரைட்டரா ஆயிட்டு வர்றீங்கன்னு சொல்லுங்க...''

''அதைத்தான் நீயே சொல்லிட்டியே... இனிமே குடும்பக் கதையும் எழுதப் போறேன்...''

''இனிமேன்ன...

''இந்தப் பத்திரிகையைப் பார் தெரியும்'' என்று சொல்லிவிட்டுப் புத்தகத்தை நீட்டினேன்.

முதலில் வார இதழில் பிரசுரமான என் கதையை, தலைப்பைப் பார்த்துவிட்டு, அதே நிலையில் கவிழ்த்திக் கீழே வைத்தாள். பிறகு, கல்யாணப் பத்திரிகையைப் பிரித்துப் படித்தாள்.

அதைப் படித்து முடித்ததும் ஜாலியாக ஏதாவது பேசுவாள் என்றும் என்னைப்பற்றி ஏதாவது கிண்டலாகச் சொல்லுவாள் என்றும் எதிர்பார்த்தேன்.

ஒன்றுமே பேசாமல் 'தேங்க் யூ' என்று மட்டும் சொன்னது கஷ்டமாக இருந்தது.

'என்ன ஆச்சு உனக்கு கவிதா! எங்கே போச்சு உன் குறும்புத்தனம்...'

பிறகு கல்யாண வேலைகளில், பத்திரிகை விநியோகிப்பது, நண்பர்களுக்குப் பார்ட்டி கொடுப்பது, டிரஸ் தைத்து வாங்குவது போன்ற பல வேலைகளில் கவிதாவின் நினைவுகள் கரைந்து போயின.

நேற்று ஜானவாசத்திற்கு அவள் வராதது கூடப் பெரிய குறையாகப் படவில்லை.

இன்று பெண்ணின் பக்கத்தில் போய் உட்காரும் பொழுதில் யதேச்சையாகக் கவிதாவைப் பார்த்தேன். அவள் என்னையே கவனித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது தான் என் மனத்தில் அந்தச் சந்தேகம் வந்தது.

''கவித்! நிஜமாகவே நீ என்னை ஆழமாக நேசிக்கிறாயா! உன் அன்பை அடையாளம் கண்டுக்க முடியாத அளவுக்கு அந்நியனா ஆயிட்டேனா நான். அதனால் தான் என் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்ததும் பிரமிச்சு நின்னுட்டியா? இந்தச் சந்தேகம் என் மனசுல எட்டிப் பார்த்த நிமிஷத்துலே இருந்து நானும் தவிச்சுத்தான் போயிட்டேன். உன்னுடைய ஏமாற்றம் இப்போ என்னுடைய ஏமாற்றம். மை டியர் கவி! இனிமேல் என்ன செய்ய முடியும்? அல்லது நீ இப்போ பார்க்கிற பார்வையும் சாதாரணமானதுதானா? என் பிரிவுக்கு வருந்தித் தானா? என் மனத்தில் மட்டும்தான் அப்படியொரு எண்ணமா...?''

யார் யாரோ வாழ்த்திப் பேசினார்கள். பரிசு கொடுத்தார்கள். போட்டோ எடுத்துக் கொண்டார்கள், கைகுலுக்கினார்கள். முண்டியடித்துப் பந்தியில் இடம் பிடித்தார்கள்.

முறையாக எல்லாம் நடந்து முடிந்தது. அவை எதுவும் என் மனதில் நிற்கவில்லை.

என் கைப்பிடித்து கூட நிற்கும் ரேவதி கூட என் முக மாறுதலைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறாள்.

ரிஸப்ஷனுக்குச் சோபாவை நகர்த்திப் போட்டது, டைனிங் டேபிளில் வரிசையாக ஸர்வ் பண்ணியது, பிரசன்டேஷன்களை வாங்கி அடுக்கி வைத்தது எல்லாமே கவிதா தான்.

எனக்கு அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. என் மனைவிக்குத் துரோகம் செய்கிறேனோ என்று உள்பக்கம் ஓர் உறுத்தல் இருந்தாலும் அவ்வப்போது அவள் பக்கம் திரும்பிச் சிரித்துக் கொண்டேன்.

இரவு சத்திரத்திலேயே சாந்தி முகூர்த்தத்திற்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

கவிதா மாடிக்கு ஏறி, இறங்கி, பூ, பழம் சந்தனம், குங்குமம் என்று ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு வந்து வைத்தாள்.

கட்டிலை அலங்கரிக்கும் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டாள்.

இந்தச் சின்னச் சின்னப் பணிவிடைகளிலெல்லாம் அவள் ஆசையைத் தணித்துக் கொள்கிறாளா?

அவள் நன்றியைக் காட்டுகிறாளா?

அவளின் காதலையும், உறுதியையும் எனக்குப் புரிய வைக்கிறாளா?

பத்து மணி சுமாருக்கு ரேவதியைக் கதவைத் திறந்து உள்ளே தள்ளினார்கள். அதுவரை கட்டிலில் உட்கார்ந்தபடி கவிதாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். இதில் யார் பக்கம் தப்பு — புரியவில்லை.

ரேவதியின் வருகை அந்த விஷயத்திற்கு ஒரு விதத்தில் ஆறுதலாக இருந்தது. பாலைக் கீழே வைத்துவிட்டு என்னை நமஸ்கரித்தாள்.

அவளைத் தோளைத் தொட்டு வலது கையால் முகத்தை நிமிர்த்தினேன்.

''என்ன இது?'' அவள் கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன. இமையோரம் வழிந்து விடுவேன் என்று கண்ணீர் தேங்கியிருந்தது.

''ரேவதி என்ன இது? இந்த நேரத்துல இந்த இடத்துல அழுகையா? என்ன ஆச்சு உனக்கு...'' கேட்கவில்லை. கேட்க முடியவில்லை.

அவளாகவே சொல்லட்டும்.

அவளைத் தூக்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டேன்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது. பூக்களின் வாசனை ஊதுபத்தியின் வாசனை. நெருக்கமாய் உட்கார்ந்து இருக்கும் ரேவதியும் ஒரு புது வாசனை.

''ஏன் உன் கண்ணெல்லாம் கலங்கி இருக்கு. உங்க அப்பாவோட வார்த்தையை முதல் நாளே மாத்திக் காட்டணுமா...?''

''அப்பா வார்த்தையா?'' குழம்பினாள்.

''எஸ். என் பொண்ணைக் கண்கலங்காம வைக்கக் காப்பாத்தணும்னார். நீ என்னடான்னா வரும் போதே கண்ணைக் கசக்கறே...'' அவள் தயக்கம் விலகியது. வாய் விட்டுச் சிரித்தாள்.

''இல்லே... நான் ஒண்ணு கேள்விப்பட்டேன்...''


''என்னது?'' என்னுள் ஒரு பரபரப்பு.

''நீங்களும், கவிதாவும் நல்ல நண்பர்கள். முதல்ல அந்தப் பொண்ணை உங்களுக்குப் பார்க்கலாம்னு பார்த்திருக்காங்க. அவ ஜாதகம் சரியில்லே. அதனால அந்த ஆசையை மாத்திக்கிட்டாங்க. இன்னிக்கு ஒரு நாள் தான் எனக்கு அவளோட பழக்கம். என்ன சுறுசுறுப்பு, என்ன புத்திசாலித்தனம், என்ன ஒரு அடக்கமான அழகு...''

அவள் பேசிக் கொண்டிருந்தாள். பிறகு வார்த்தைகள் எதுவும் என் காதில் விழ

கமலிடம் ஒரு கேள்வி

போட்டி: 20



வாசகர்களின் கேள்விகளுக்கு நேரம் நல்ல நேரம் நிகழ்ச்சியில் பதிலளிக்கச் சம்மதித்திருக்கிறார் திரு. கமலஹாசன். கீழே உள்ள வெற்றிடத்தில் ஒரே ஒரு கேள்வி மட்டும் எழுதி இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். கல்கியில் பிரசுரமாகும் கேள்விகளுக்குப் பரிசு உண்டு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப்புடவை. உறையின் மீது ''கமலிடம் ஒரு கேள்வி'' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: **27-9-84**

33 பட்டுப் புடவைகளுள் ஒன்றைப் பெற வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்: ....

விலாசம் : ....

....

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

வில்லை. எனக்குத் தெரியாமல் இவ்வளவு காரியங்கள் நடந்து முடிந்திருக்கின்றனவா? எங்கள் இத்தனை நாள் பழக்கத்தையும், பேச்சையும் ஆரம்பம் முதலே மற்றவர்கள் இந்தக் கண்ணோட்டத்தில் தான் பார்த்திருக்கிறார்களா? அப்படித்தான் இருக்க முடியும். இவர்களுக்கு இப்படி நினைத்துத்தான் பழக்கம்.

இதெல்லாம் கவிதாவிற்குத் தெரிந்தாலும் தெரிந்திருக்கும்! தெரிந்தாலும், அவள் மனம் எவ்வளவு தூரம் வருத்தப்பட்டிருக்கும். ஒரு நல்ல காதலுக்கு ஜாதகம் இடைஞ்சலாகவா இருந்திருக்கும்?

'ரேவதி உனக்கு என்ன பதில் சொல்லப் போகிறேன். இதெல்லாம் சத்தியமாக எனக்குத் தெரியாது. என் பதிலை எவ்வளவு தூரம் நீ நம்புவாய். ஏற்றுக் கொள்வாய்?

நான் பழகியது எல்லாம் அன்பிற்காக மட்டும் தான் என்றால் ஒத்துக் கொள்வாயா?

கல்யாணமானபின் இப்படித்தான் சமாதானம் சொல்வேன் என்று உனக்குள் நீ நகைத்துக் கொள்வாயா?'

ரேவதி என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். ''ரேவதி! கவிதா எனக்கு ஒரு நல்ல ஃப்ரெண்ட். முதல்ல அவ பழக்கம் என்னுள்ளும் சில சலனங்களை, எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான். ஆனால் அதுக்கப்புறம் அவ என்னோடவெளிப்படையாப் பழக ஆரம்பிச்சதுலேர்ந்து நான் என் கருத்தை மாத்திக்கிட்டேன்.''

''சரி'' என்றாள் ரேவதி.

''இதுதான் நிஜம். நீ சொன்ன மாதிரி அவள் ஜாதகம் வாங்கிப் பார்த்த விஷயம் எனக்குத் தெரியாது. கவிதாவுக்குத் தெரியுமான்னும் தெரியாது. அவள் என் சிநேகிதி! இனிமே நமக்கும் அவள் ஒரு நல்ல தோழியா இருப்பான்னு நான் நம்பறேன்.'' —என்றேன் உறுதியாக.

''ஓ. கே.'' என்று கழுத்தைச் சாய்த்துக் கொண்டு சொன்ன ரேவதியை நான் ரசித்துப் பார்த்தேன்.

மனசு லேசாகிப் போனது. அவளும் திறந்த மனத்துடன் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டு வீண் கேள்விகள் இல்லாமல் அந்த விஷயத்தை முடித்தது சந்தோஷமாக இருந்தது.

'பெண்ணே நீ புத்திசாலிதான். இன்று இரவே இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு கண்டு விட்டாய். வீணாக இந்த விஷயத்தை நீட்டிக் கொண்டிராமல் சந்தேகத்தை வளர்க்காமல் உடனே கேட்டு விட்டாய்! கவிதாவும் இப்படித்தான்!'

'சட்' — எதை நினைத்தாலும் மனதில் உடனே கவிதாவின் ஞாபகம் தான் வருகிறது.

''என்ன யோசனை...?'' என்றாள்.

''ஒன்னுமில்லே...'' என்று சொல்லி விட்டு லேசாகச் சிரித்துக் கொண்டே அவளை அணைத்துக் கொண்டேன்.

அமரர் கல்கி நினைவுச்
சிறுகதைப் போட்டி

அன்று பரிசு...



○ சுரேஷ்



○ பாலா

எதிர்பாராத சம்பவங்கள் நம் வாழ்க்கையில் அடிக்கடி நடந்து கொண்டேயிருக்கின்றன. அவைகளை லட்சியம் செய்யாமல் அப்படியே நாம் மறந்து விடுகிறோம். மறந்து போகாதபடி ஒரு டைரியில் குறித்து வைப்போமானால் விசித்திரமாக இருக்கும். முடிவில் நண்பர் யாரிடமாவது டைரியைக் கொடுப்போமானால் 'இப்படியெல்லாமா நடந்திருக்கும்?' என்று ஆச்சரியப்படுவார்!
—பேராசிரியர் கல்கி அவர்களின் மகுடபதியைப் படித்து விட்டு ரசிகமணி எழுதிய மணித் துளிகள் இவை!

ரசிகமணியின் வாக்கு எவ்வளவு உண்மை என்று எடுத்துக் காட்டுவதே போல இந்த ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ராதா வசுமித்ரனின் விசித்திர அனுபவமே அமைகிறது. பிரளயம் கதையைப் படித்தபோது; 'யார் இந்த ராதாவசுமித்திரன்? மிக நன்றாக எழுதியிருக்கிறாரே? ஆனால் அறிமுக எழுத்தாளர் என்று கூடக் குறிப்பிடவில்லையே?' என்று யோசித்தோம். பின்னால் தான் தெரிய வந்தது — சுரேஷ் — பாலகிருஷ்ணன் அல்லது "சுபா" என்ற இரட்டையர்கள் தாம் இந்தப் புதிய புனை பெயருக்குள் ஒளிந்திருக்கிறார்கள் என்பது. கதைக்குள் கதை நுழைந்த கதை பற்றி சுபா எழுதிய கடிதம் ஏற்கெனவே கல்கியில் பிரசுரமாகியுள்ளது.

சுரேஷ் - பாலா பற்றி 'சுபா'

முதல் சந்திப்பு சரியாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்!

சென்னை மாநிலக் கல்லூரியில் சகமாணவர்களாய். கெமிஸ்ட்ரி வகுப்பென்றால் தனி குஷி. யோசிக்காமல் கட் அடிக்கலாம்.

சுஜாதா, ஜானகிராமன் என்று இலக்கிய சர்ச்சை.

அடித்துக் கொள்ளாதது ஒன்றுதான் குறை.

எழுபத்தைந்தில் கையில் டிகிரி. அடுத்த வாரமே வேலை கிடைக்கும் என்று கலர் கலராய்க் கனவுகள். நனவில் நிறைய சிக்ரெட் கார்டுகள். இடையில் கல்கியில் ஒரு அறிவிப்பு. மர்மச் சிறுகதைப்போட்டி என்று. கலந்து கொள்வது என்று முடிவெடுத்தவுடன்; 'நமக்குள் போட்டியா?'
—'வேண்டாமே. சேர்ந்து எழுதினால் என்ன?' — 'எந்தப் பெயரில் எழுதுவது?'— 'ஒய் நாட் சுபா'? — 'ஒய்நாட்?' என்று தீர்மானித்தார்கள். அனுப்பிய கதைக்கு மூன்றாவது பரிசு. நூறு ரூபாய்க்கு செக். அப்பாவுக்கு வேஷ்டி. அம்மாவுக்கு ரவிக்கை ஃபினிஷ். வீட்டுப் பெரியவர்கள் முதுகில் தட்டிக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பு. முட்டியில் தட்டினார்கள்.

'வேலை தேடறதை விட்டுட்டு வெட்டியாய்க் கதையா எழுதறீங்க கதை? பேப்பரும், பேனாவுமாய் உட்கார்ந்தால் பேப்பர் கிழிபடும். உடன் ஒரு சபதம். 'வேலை கிடைக்கும் வரை அப்ளிகேஷன் தவிர வேறெதுவும் எழுதுவதில்லை'

அப்புறம் இரண்டரை வருடம் அஞ்ஞாத வாசம்.

இருவருக்கும் பாங்கில் வேலை கிடைத்தது. வேறு வேறு ஊர்களில். கதை தாகம்



○ ஜெயராமன் (ஜெரா)



○ ஸ்ரீவத்ஸன்

...இன்று பாராட்டு



○ வைஷ்ணவி

மெதுவாய் எடுக்க ஆரம்பித்து, எழுத ஆரம்பித்து, இவன் கதையை அவன் திருத்தி, அவன் கதையை இவன் திருத்தி, அதை போஸ்டில் அனுப்பி, அதைப் பத்திரிகை காரியாலயம் படித்துத் திருப்பி — (அஞ்சல் துறைக்கு அதீத வருமானம்!)

'விடாதே பிடி' 'விடாதே பிடி' என்று மூச்சு விட முயன்றதில் எழுபத்தொன்பதில், தீபாவளியன்று நரகாசுரனுக்கு மோட்சம் கிட்டிய போது, இவர்களுக்குப் பத்திரிகையில் பக்கம் கிடைத்தது. புனர் ஜன்மம்!

அப்புறம் இருவருமாய் முயன்று சென்னையிலேயே கால் ஊன்றினார்கள். ஆரம்பகாலத்தில் ஏணிப் படியில் கைகொடுத்து மேலே இழுக்க சாவி—கீழே இருந்து உந்தித் தள்ள கல்கி.

எப்படி எழுதுகிறார்கள்? முதலில் இருவரில் யார் எழுதுவது என்று தீர்மானம். ஒருவன் எழுத்தாளன் ஆனால் இன்னொருவன் எடிட்டர். எடிட்டர் கால் மேல் கால் போட்டு, 'இது சரியில்லை', 'இங்கே வெட்டலாம்', 'இங்க மாத்தலாம்' என்பார் சர்வ அதிகாரத்துடன். மற்றொருவன் 'ஓடம் ஒரு நாள் வண்டியில் ஏறத்தானே வேண்டும்' என்று காத்திருப்பான்.

பரிசு பெற்ற 'பிரளயம்' எங்கே கிடைத்தது?

ஒரு மழைநாளில் சந்தித்த அந்த 'நாராயணியை' இவர்களால் மூச்சு உள்ள வரை மறக்க முடியாது. நிஜமாகவே அத்தனைசம்பவங்களையும் (கொடூரங்கள்?) தன் வாழ்வில் எதிர் கொண்டவள் இந்த 'நாராயணி.' அவளால் செய்ய முடியாத க்ளைமாக்ஸை மட்டும் காகிதத்தில் செய்து இவர்களால் திருப்தி அடைய முடிந்தது.

பிரபல ஆங்கில எழுத்தாளர் 'எர்னஸ்ட் ஹெமிங்வே'க்கு ஒரு பத்திரிகை ஆசிரியர் கடிதம் எழுதினார்: ''மேற்கத்திய இலக்கியம்'' என்பது பற்றி 6000 வார்த்தைகளில் ஒரு கட்டுரை அனுப்பி வையுங்கள்; 1500 டாலர் சன்மானம் தருகிறேன்.''

இதற்கு ஹெமிங்வே எழுதிய பதில்: ''மேற்கத்திய இலக்கியம பற்றி எனக்கு கொஞ்சம் தான் தெரியும். வேண்டுமானால் 12000 வார்த்தைகளில் ஒரு சிறுகதை அனுப்புகிறேன். அதற்கு நீங்கள் 3000 டாலர் கொடுக்க வேண்டும்; தயாரா?''

எழுத்தாளரின் நிபந்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டது!

—அனிதா ராமச்சந்திரன்.



தாய் வீடான ''கல்கி''

இரண்டாம் பரிசு ரூபாய் ஐந்நூறு பெற்ற ''நிமிஷத்துக்கொரு நிறம்'' கதை பஸ்ஸில் ஏற்படும் ஒரு ரசமான நிகழ்ச்சியைத் தருகின்றது! நிஜ வாழ்க்கையில் நடக்கும் சம்பவத்தை உயிரோட்டத்துடன் தந்திருக்கும் ஜி. ஜெயராமன் 'என் தாய் வீடான' 'கல்கி'யின் மூலம் மீண்டும் எனக்கொரு கௌரவம் கிடைத்திருக்கிறது' என்று கடிதம் எழுதி மகிழ்ந்திருக்கிறார். அதோடு தம்மைப் பற்றிய குறிப்பை ரத்தினச் சுருக்கமாகத் தருகிறார்:

''ஒரு மெகானிகல் என்ஜினியராகப்பணி புரிந்து கொண்டு, நாடக உலகத்துக்குள் அடிக்கடி பயணம் போய்க் கொண்டிருந்தவனை, 1980 —ஆம் வருட அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி ''கொஞ்சம் இந்தப் பக்கமும் தான் வந்து விட்டுப் போயேன்'' என்று இழுக்க அந்தக் கணத்தில் 'ஜெரா'வின் ஜனனம் நிகழ்ந்துபோனது.

தாம் எழுதிய நாடகங்களுக்காகவும், மேடை நடிப்பிற்காகவும் பல போட்டிகளில் பரிசுகளை அள்ளிக் கொண்ட அனுபவங்கள் நிறைய... நிறைய...

அப்புறம் கவிதைகளை மலர வைப்பதும் அவற்றோடு ஒரு மென்மையான ஸ்நேகம் இருப்பதும் நீங்கள் அவசியம் அறியவேண்டியது.

1983—ம் வருட அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில், 'யாரோ பார்க்கிறார்கள்' என்றதற்காக முதல் பரிசு பெற்றதும், அக்டோபர் 1983, மணியன் மாத இதழில்' 'என் பிரிய சகியே' என்று அழைத்து நாவலாசிரியராகப் பதவி உயர்வு அடைந்ததும், இந்த இடைக்காலத்தில் ஸ்தாபித்த நினைவுத் தூண்கள்!

எழுத்துலகின் உச்சியை எட்டிப் பார்த்து, ஒவ்வொரு படியாக விழுங்கும் போதெல்லாம் கண்கள் நனைய நினைத்துக் கொள்வது 'கல்கி'யை — 'ஜெரா' வின் ஆரம்பத்திற்கு அடிக்கல் நாட்டிய பெருந்தன்மைக்காக.

கதை, கவிதை, நாடகம்

மூன்றும் பரிசு பெற்ற கதைகளுள் ஒன்றான ''மனம் நிறைந்தது'' மெய்யாலுமே மன நிறைவு தந்த கதை!

ஷைலஜா என்ற புனை பெயரில் எழுதும் மைதிலி; ஸ்ரீரங்கத்து மண்ணிலே பிறந்தவர்! முப்பத்திரண்டு வயதாகிறது. இவரது தந்தை பிரபல எழுத்தாளர்ஏ.எஸ். ராகவன். கல்லூரியில் காலெடுத்து வைக்கும்போதே இவருக்கு நாராயணனுடன் திருமணம் ஆகிவிட்டது! கணவர் மைக்கோவில் என்ஜினியர்.

ஷைலஜாவுக்கு எழுத்துலகில் நான்கு வருட அனுபவம். முதல் கதை ஆனந்த விகடனில் பிரசுரமாயிற்று. படைத்த கதைகளின் எண்ணிக்கை அரைசதம். பலமுறை கவியரங்க மேடைகளில் கவிதை மழை பொழிந்த அனுபவம் இவருக்கு உண்டு. கதை, கவிதை தவிர பெங்களூர் பி. ஈ. எல். தமிழ் மன்றம் நடத்திய நாடகப் போட்டியிலும் மைக்கோ பைன் ஆர்ட்ஸ் கிளப்நடத்திய நாடகப் போட்டியிலும் சிறந்த நடிகைக்கான கேடயங்களையும் பெற்றவர் இவர்!

500 சிறுகதைகள்!

மூன்றும் பரிசு பெற்ற மற்றொரு கதை 'தாயம்மா கிழவி'. பேராசைகள் நிறைந்த உலகில் தன்னலமற்ற ஒரு ஏழைக் கிழவியைப் படம் பிடித்துக் காட்டுகிறார் ஸ்ரீவத்ஸன். ஏழையாக இருப்பதால் தான் பரோபகார சிந்தனையும் இருக்கிறது என்பதைக் கிழவியின் கடைசிப் பிரார்த்தனை வரிகளில் மனமுருகுமாறு சித்திரிக்கிறார் கதாசிரியர்.

மணிவிழாக்கண்ட ஸ்ரீவத்ஸனின் இயற்பெயர் நா. சுப்பிரமணியம். இவரது முதல் கதை 1949—ஆம் வருஷம் டிசம்பர் 4—ந் தேதி ஆனந்த விகடனில் பிரசுரமாகியிருக்கிறது! இவர் பிறந்த ஊர் தஞ்சைமாவட்டத்தில் சோலியூர். சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து ஸ்ரீவத்ஸன் 1979—ம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

இவர் ஐந்து சென்குரிகளைச் சிறுகதைகளில் கண்டிருக்கிறார்! இவரது 'சிதம்பர ரகசியம்' என்னும் சிறுகதை இலக்கிய சிந்தனை'யின் பாராட்டு இதழைப் பெற்றிருக்கிறது. இவரது 'பிரார்த்தனை' என்னும் சிறுகதைத் தொகுப்பை மதுரை மீனாக்ஷி புத்தக நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

மூன்றும் பரிசு கிடைத்த ஸ்ரீவத்ஸன் ''தாங்கள் அளித்த பரிசு உத்தியோகத்திலிருந்து மட்டுமில்றி எழுத்துலகிலிருந்தும் ஓய்வு பெற எண்ணிய எனக்கு மனத்தெம்பு அளித்துத் தொடர்ந்து எழுத வேண்டும் என்ற ஊக்கத்தை ஊட்டியிருக்கிறது'' என்று குறிப்பிடுகிறார்!

''சிறுகதைகள் வெறும் பொழுது போக்கு கதைகள் அல்ல, ஆண், பெண் இருபாலாருக்கும், நற்குணம், நல்லொழுக்கம், நல் வாழ்க்கைக்கு மாறுபாடான பழைய வழக்கங்களிலிருந்து விடுதலையடையும் மனோ வன்மை இவைகளைக் கற்பிக்க வேண்டிய பொருள் புகட்டி, பயன்தருமாறு அழகுடன் கலந்து ஆக்கிய கற்பனைகள்'' என்று அமரர் கல்கியின் 'சாரதையின் தந்திரம்' சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை வழங்கியுள்ளார் ராஜாஜி. அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் தேர்வு பெற்ற சிறுகதைகள் ராஜாஜி அவர்களின் இந்த ஆசையை நிறைவேற்றியுள்ளன என்றே கருதுகிறோம். பரிசு பெற்ற இவருக்கும் நல்வாழ்த்துக்கள்!


-பி. எஸ். எம்.

ஒருமுறை சபரிமலையில் ஸ்ரீ ஐயப்பன் கோவில் உண்டியல் திறக்கப்பட்ட போது அதில் சில பக்தர்கள் போட்ட கடிதங்கள் காணப்பட்டன:

- கடவுளே, தயவு செய்து மந்திரிகள் போகும்கார்களின்வேகத்தைக்குறை; அப்போதாவது சாலை விபத்துக்கள் குறையட்டும். (மந்திரிகளின் கார்களால் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தது.)
- ''இறைவா, முக்கியஸ்தர்களின் வருகைக்காக சபரிமலை சன்னிதானத்துக்கு அருகில் ஹெலிகாப்டர்கள் இறங்குவதற்கான தளம் கட்ட அனுமதிக்காதே!''
- ''இன்னொரு தரம் குடிபோதையில் உன் சந்நிதிக்கு வரமாட்டேன்!''

—அனிதா ராமச்சந்திரன்.





இரவு 1 மணிக்கு மேல் ஸ்கூட்டர், பைக்கில் வரும் போது மக்கள் வட சென்னையில் புது மாதிரியான பிக்பாக்கெட்டுக்கு ஆளாகிறார்கள். மறைந்திருக்கும் சிலர் எருமை மாட்டை வாகனத்தின் முன்னே விரட்டி விடுவார்கள். வாகன ஓட்டி நிலைகுலைந்து கீழே சாயும் போது உதவுவது போல் ஓடிவந்து ''ஆஸ்பத்திரிக்குப் போன் செய்யவா?'' ''வீட்டுக்குத் தகவல் தெரிவிக்கவா?'' என்றெல்லாம் கேட்பார்கள். இதற்குள் பர்ஸ் பறிபோய்க் கைமாறி வெகுதூரம் சென்றுவிடும்! இதைப் போலீஸ் கவனிக்குமா?

—எஸ். சண்முக சுந்தரம்.

தந்தி



மங்களா

"அம்மா, அம்மா இங்கே வந்து பாட்டியைப் பாரு" என் சின்னப் பையனின் குரல். "என்னடா? என்ன?" அவசரமாகக் கூடத்துக்கு விரைந்தேன். இருபது நாட்களாகப் படுக்க முடியாமல் ஆஸ்த்துமாவினால் உட்கார்ந்தபடியே அவதிப்பட்டுக் கொண்டிருந்த என் மாமியார் படுக்கையில் குப்புறப் படுத்திருந்தார்.

இரவு பகலாக அவருடன் கண்விழித்து, வீட்டு வேலையும் செய்த அலுப்பு அவர் படுத்திருந்ததைப் பார்த்துத் திகிலாக மாறியது. தொட்டு அசைத்துப் பார்த்தேன். சாதாரணமாகத்தான் தோன்றியது. அதற்குள் அங்கு வந்த பக்கத்து வீட்டு அம்மாள், "இனி இது தாங்காது. எல்லோருக்கும் தந்தி கொடுத்து விடு" என்றார்.

என் கணவர் அப்போது தான் வெளியே போயிருந்தார். என்ன செய்வது என்று தோன்றாமல் அம்மாவின் அருகிலேயே உட்கார்ந்தேன். மூன்று மாதம் முன் என் இரண்டாவது பையன் ரவி ஒரு லாரி விபத்தில் இறந்து போனான். அப்போது படுத்தவர்தான் இவர். குழந்தை ரவி போன துக்கம் மலை போல் அழுத்த, கைக்குழந்தையைப் போல் அம்மாவையும் கவனித்துக் கொண்டேன். மற்ற ஆறு நாட்டுப் பெண்களும், நான்கு பெண்களும் இருந்தும் அம்மா என்னைவிட்டுப் போனதே இல்லை.

எனக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. உள்ளே நுழைந்த என் கணவர் உடனே சாஸ்திரிகளுக்குச் சொல்லியனுப்பிப் பிராயச்சித்தம் செய்தார். அதற்காகவே காத்திருந்தது போல் அவர் மடியிலேயே அம்மாவின் உயிர் பிரிந்தது.

என் கணவர் பதினைந்து வயது மூத்த மகனைக் கூப்பிட்டார். ஒரு காகிதத்தில் தன் சகோதர, சகோதரிகளின் விலாசத்தை எழுதி "அம்மா இறந்து விட்டாள்" என்று எல்லோருக்கும் தந்தி கொடுக்கச் சொன்னார். அவனும் கொடுத்து விட்டு வந்தான். மொத்தம் 10 தந்திகள்.

மாலையில் கோவையிலிருந்து மைத்துனர் வந்தார். வாசலிலேயே இருந்த என் கணவரைப் பார்த்து "என்டா, வயதான நம் அம்மா இருக்க, உன் மனைவிக்கு என்ன உடம்பு? எப்படிப் போனாள்? ரவி போன அதிர்ச்சியில் ஏதாவது ஆகி விட்டதா?" என்றார்.

கூடியிருந்த எல்லோருக்கும் ஒரே திகைப்பு. என் கணவர், "என்ன உளறுகிறாய்? இறந்தது நம் அம்மாதான். என் மனைவி என்று யார் சொன்னது?" என்றார்.

என் மைத்துனர் பையிலிருந்து தந்தியை எடுத்து நீட்டினார். அதில் "அம்மா இறந்து விட்டாள்" என்ற வாசகத்தின் கீழ் என் பையனின் பெயர். தந்தி கொடுக்கும் அவசரத்தில் அப்பா பெயருக்குப் பதில் தன் பெயரையே போட்டு விட்டான்!

மற்ற 9 தந்திகளிலும் இதே மாதிரிதானே இருக்கும்! அவர்கள் என்ன எண்ணத்துடன் வருவார்களோ?

உயிரோடுதான் இருக்கிறேனா என்று என்னையே தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.



○ புதிய செய்தி...



○ சாதனைகள் பல...



○ ஓசைப்படாத நர்மணி



○ டைரக்ஷன் துறையில்..



○ 'சின்ன பீனா.'

○ எஸ். சந்திரசேகர், பம்பாய்.
? ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி செய்தபோது என்னதான் குறையிருந்த போதிலும் ஜன நாயகக் காற்றைச் சுவாசிக்க முடிந்தது உண்மைதானே?
! இப்போது மூச்சுத் திணறுவதும் உண்மை தான்.

○ சத்தியபாலன், திருச்சி.
? காய்கறி வாங்கும்போது பேரம் பேசுவ துண்டா?
! அது வாங்குகிற இடத்தைப் பொறுத்தது. வீட்டு வாசலில் வரும் கூடைக்காரியிடம் பேரம் பேசி, நாமே காயைப் பொறுக்கி தராசுத் தட்டில் போடா விட்டால் அவளுக்கே ஏமாற்றமாகி விடும்! ரங்க நாதன் தெரு அல்லது பனகல் பார்க்கில் பேரம் பேச ஆரம்பித்தால்... 'காய்கறி வாங்க வந்த முகரையைப் பாரு...!' 'காயைத் தொடாதே...' 'வேணும்னு சொல்லு. இல்லே போய்க்கின்னே இரு...' இப்படி ஏதாவது வாங்கிக் கட்டிக் கொள்ள நேரும்.

○ எம். அசோக்ராஜ், அரவக்குறிச்சிப்பட்டி.
? விரோதி; துரோகி — உதாரணம் தர முடியுமா?
! ராம்லால் — ஜனநாயக விரோதி; பாஸ்கர ராவ் — நம்பிக்கைத் துரோகி. நம் நாட்டில் இது போன்ற முன் உதாரணங்களுக்குப் பஞ்சமேயில்லை.

○ மு. மதிவாணன், அரூர்.
? டைரக்டராகப் போவதாகக் கூறியிருக்கிறாரே, ஸ்ரீவித்யா?
! டைரக்ஷன் துறையில் புதிதாகப் பெண்கள் நுழைந்து சாதனை புரிவது ரொம்பக் கடினம். நடிகையாகச் சிறந்து செல்வாக்குப் பெற்று டைரக்டராகிற பெண்களின் பணி ஒப்பு நோக்குகையில் எளிது. ஸ்ரீவித்யா சிறந்த நடிகை என்றாலும் தமிழகம் ஏனோ இவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளாமல் போய் விட்டது. டைரக்டர் என்ற முறையிலாவது இங்கேயும் வெற்றிக்கொடி நாட்ட வாழ்த்துவோம்.

○ பொ. பொன்ராஜ்குமார், கரூர்.
? உங்களைக் கவர்ந்த நாடக ட்ரூப் எது?
! டி. கே. எஸ். பிரதர்ஸ் தங்கள் நாடக ட்ரூப்பைக் கலைத்த பிறகு நாடகக் கம்பெனி என்று சொல்லும்படியே எதுமில்லை — மனோகர் குழு தவிர. அவர் ஒருவர்தான் ட்ரூப் என்று வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதே சாதனைதான் என்றாலும், அதனால் மட்டும் அவர் என்னைக் கவரவில்லை. வேறு பல சாதனைகளாலும்தான்.

○ த. சத்தியநாராயணன், அயன்புரம்.
? கலைஞர் பேட்டிக்கும், எம். ஜி. ஆர். பேட்டிக்கும் என்ன வித்தியாசம்?
! கலைஞர் பத்திரிகையாளரை மதித்து விரைவில் பேட்டி தருவார். எம். ஜி. ஆர். இழுத்தடிப்பார்.

○ கமா, பட்டிவீரன்பட்டி.
? பாவிகளின் புத்தகம் படித்ததுண்டா?
! முதலில் அவரைப் பற்றி கேள்விப்பட்ட போது அவர் எழுதிய நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. "நமது கடவுளர் வேறு கிரகங்களிலிருந்து வந்தவர்கள்" என்று அவர் கூறியதை நாளிதழில் படித்த பின் அந்த ஆர்வம் போய் விட்டது.

○ எஸ். எஸ். ஜலாலுதீன், தாராபுரம்.
? நடிகர் திலகம் பற்றி புதிய செய்தி ஏதாவது...?
! புதிய இளம் டைரக்டர்கள் இயக்கும் படங்களில் நடிக்க அவர் இப்போதெல்லாம் சம்மதம் தெரிவித்து வருகிறார். ஆனால் டைரக்டர்களை டைரக்ட் பண்ணும் போக்கைக் கைவிட்டதாகத் தெரியவில்லை.

○ வி. கோபிநாத், வெட்சமாங்குடி.
? நிம்மதியுடன் வாழ என்ன வழி?

இந்த ஆண்டின் மகத்தான அரசியல் ஜோக்?

! தேவைகளை அதிகரித்துக் கொண்டு போகாதீர்கள். ஆசைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்ற குறளை உணர்ந்து செயல்படுங்கள். — இப்படி உபதேசிப்பது எளிது; செயல்படுத்துவது கடினமே.

○ பி. ஆர். அய்யாக்கண்ணு, பாதூர் ★

? மோசமான பாதை எது?

! சென்னையில் ஒரு மழை அடித்தால் சாலைகள் பாழாவதையும் போதாக் குறைக்கு ஃபோன் இலாகா, எம்.இ.எஸ்., குடிநீர் வடிகால் வாரியம் போன்றவர்கள் அடிக்கடி குழி தோண்டுவதையும் பார்க்கும் போது ராஜாஜி பாதை, பட்டேல் பாதை, அண்ணா பாதை, ராதாகிருஷ்ணன் பாதை, காமராஜ் பாதை போன்ற எல்லாமே மோசம் தான் என்று தோன்றுகிறது. இதற்காகவாவது பெருந்தலைவர்கள் பெயர்களை வீதிகளுக்குச் சூட்டாமல் இருக்கலாம்!

○ ஆர். சிவராஜ், லால்குடி.

? இந்த ஆண்டின் மகத்தான அரசியல் ஜோக் என்னவாக இருக்கும்?

! எனக்கு ஒன்றுமே தெரியாது!

○ எம். நவபாலன், கரூர்.

? சமீபத்தில் பார்த்த டைரக்டர் மிருணாள்சென் படம் பற்றி...?

! கரிஜ்! ஒரு இளம் தம்பதியினரின் வீட்டில் வேலைக்காரச் சிறுவன் ஒருநாள் இரவு யாருக்கும் தெரியாமல் சினிமா போய் விட்டு வந்து சமையல் அறையில் படுக்கிறான். உள்ளேயே இறந்து போய் விடுகிறான். அந்த இளம் தம்பதியினரின் பதற்றத்தையும், வேலைக்காரச்சிறுவனின் தந்தையையும் வைத்துப் பின்னப்பட்ட அழகான திரைக்கதை. யதார்த்தமான படம். ஒரு சின்ன 'பிளாட்' டைரக்டரின் ஆற்றலால் எப்படி விசுவரூபமெடுத்து உயர முடியும் என்பதை உணர்கிறோம்.

○ ரம்யா, கோவைமுத்தூர்.

? ஒரு பெண்ணைக் காதலிக்க என்ன தேவை?

! காதலி தேவை.

○ பாரதி ரங்கன், கும்பகோணம்.

? போற்றப்பட வேண்டிய காவியங்களைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு விட்டுவிட்டு வெளியேறுபவள் தான் புதுமைப்பெண்ணா?

! காவியங்களை சரியாகப் புரிந்து கொள்கிற புத்திசாலிகள் அவற்றைக் குழிதோண்டிப் புதைக்க அவசியமில்லை. தப்பர்த்தம் செய்து கொண்டு அவதிப்படுகிறவர்கள் துன்பத்திலிருந்து விடுதலை பெற அவற்றைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டியதுதான். புதைக்கப்படுவது காவியங்கள் அல்ல; நமது அறியாமை என்றே கொள்ளலாம்.

○ கதிர்வேல், காஞ்சிபுரம்.

? அரசியல் துராசைகள், லஞ்ச ஊழல், தேசப் பொருளாதாரத்தின் பரிதாப நிலை என்றெல்லாம் படித்து அலுத்து விட்டது. ஓசைப் படாமல் நடக்கும் ஒரு பொதுநலத் தொண்டு பற்றிச் சொல்லுங்களேன்...?

! கிரிண்ட்லேஸ் பாங்க் கலாசங்கம் 1981 முதல் ஒவ்வொரு ஆண்டும் இசை விழாக்கள் நடத்தி தொகை முழுவதையும் சமூகப் பணிக்கு வழங்கி வருவது உங்களுக்குப் புதிய செய்தியாக இருக்கிறதா? அப்படியானால் ஓசைப்படாமல் நற்பணி செய்து வருகிறார்கள் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்? இந்த ஆண்டு சென்னை செஷயர் ஹோமுக்கு வசூல் தொகை முழுவதையும் அளிக்கிறார்கள். ஆதரவற்றவருக்கு உதவும் நிறுவனம் செஷயர் ஹோம். செப்டம்பர் 13, 14 15 தேதிகளில் மியூசிக் அகாடமி அரங்கில் நடக்கிறது இசை விழா.

○ ஜி. பாரதி, காங்கேயம்.

? நீங்கள் மயங்குவது எந்தப்பூவின் மணத்தில்?

! மாலை வீடு திரும்பியதும் மனைவி இன்முகத்துடன் வரவேற்க இயல்பாக அணைக்கும்போது கூந்தலிலிருந்து எழும் மல்லிகை வாசனையே கவர்ச்சி சிலருக்கு. சுவாமி படத்துக்கு என்று வாங்கிவரும் கதம்பத்தில் மணம் அமைதியும் ஆனந்தமும் அளிக்கும் வேறு சிலருக்கு. நேருஜியின் மனம் கவர்ந்த ரோஜாவுக்கு ஈடாகுமோ என்று கேட்பர் பலர். பாம்புக்கு அஞ்சாமல் செண்பக வாசனைக்காகவே மரம் வளர்ப்பவரும் உண்டு. எனக்கென்னவோ மாலை மயங்கும் நேரத்தில் வீட்டுவாசலில் கம்மென்று எழும் பவழமல்லியின் மணம்தான் ஒரு கிறக்கத்தையும் நிறைவையும் அளிக்கிறது. அந்த மணத்தைப் போர்த்திக் கொண்டு மணிக்கணக்காக நிற்க நான் தயார்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்

பி. ஆர். அய்யாக்கண்ணு,
மேட்டுத் தெரு,
பாதூர்—606 115.

நமது உடலிலுள்ள ஒரு சதுர அங்குலத் தோலில் என்னென்ன இருக்கின்றன தெரியுமா...? 19 மில்லியன் சுரப்பிகள், 19 அடி நீள இரத்தக் குழாய்கள்.

ஒரு சிறுநீரகத்தில் ஒரு மில்லியன் குழாய்கள் உள்ளன. இரண்டு சிறுநீரகங்களிலும் உள்ள குழாய்கள் நீளம் 50 மைல்.

இல்லஸ்டிரைடட் வீக்லி' யிலிருந்து

—கோ. சு. சுரேஷ்.

வெள்ளித்திரை

புலிக்குப் புலி



தெலுங்கைப் பதத்திற்குப் பதம் தமிழாக்கம் செய்திருப்பதாலோ என்னவோ, நகைச்சுவைக் காட்சிகளில் சிரிப்பும் வரவில்லை. அழுகைக் காட்சிகளில் அழுகையும் வரவில்லை.

ஒரு பணக்காரர் வீட்டுக்குத் தத்துப் புத்திரனாகக் குடியேறி, அந்தப் பணக்கார வீட்டில் வலைய வலைய வந்து குழிதோண்ட சந்தர்ப்பம் தேடும் வில்லனை மடக்கி, வில்லன் மகளையே காதலித்து, கொஞ்சம் காதல், கொஞ்சம், வீரம், கொஞ்சம் சோகம் என்று நவரசங்களை அங்கங்கே தூவிக் கொண்டு ஓடும் சிரஞ்ஜீவிதான் கதாநாயகன். அலட்டல் இல்லை.

ஹீரோயின் ராதா. கிளுகிளுப்பாக இருக்கிறார்.

அனுராதா ஆடுகிறார். ஜெயமாலினி ஆடாமல் சாகசங்கள் செய்கிறார்.

ராணி பத்மினி அத்தானைத் தவறவிட்ட அல்லக்கிளி. படவுலகின் நியதி மாறாமல் கடைசியில் உயிரையும் தவறவிடுகிறார்.

குதிரைகளும், மலைப்பாங்கான இடமும் முடியப் போகிற நேரத்தில் கறுகறுப்பைச் சேர்த்துக் கொண்டுள்ளன.

தமிழ்ப் படவுலகம் தான் சண்டை, டான்ஸ், காதல், சோகம் என்று மசாலா ஃபார்முலாவைக் கையாள்கிறது எனப் பார்த்தால் ஆந்திராவும்—!

''ஹூம் — வீட்டுக்கு வீடு வாசற்படி!

நியாயம் கேட்கிறேன்

நங்கையைக் கற்பழித்துக் கொன்ற கயவர்களை வேட்டையாடும் கடமை உணர்வு மிக்க காவல் அதிகாரியைப் பற்றிய கதை.

ரிஷிமூலம் — மேரி அதாலத் - ஹிந்தி!

ஹிந்தியிலும் ஒன்றும் புதிது பதிதாய்க் கதை சொல்லி விடவில்லை என்பதைத் தமிழாக்கம் நமக்குப் பட்டவர்த்தனமாகக் காட்டுகிறது.

ஆனந்த் பாபு டிஸ்கோ ஆடுகிறார்.

காலைப் பின்னிக் கொள்வது, அகட்டிக் கொண்டே உட்கார்வது, சுழல்வது எல்லாமே ஸூபர்ப்!



ஆட்டம் ஒன்று போதுமா என்ன?

கண்களை எப்போதுமே தூங்குகிற மாதிரி வைத்துக் கொண்டு, வசனத்தை உயிரில்லாமல் ஒப்பித்து விட்டு, ஈடுபாடே இல்லாமல் நடித்துக் கொண்டு...

கதாநாயகி தேவிபாலா!

காதல் காட்சிகளில் நிறைய நெருங்குகிறார். லஜ்ஜையில்லாமல் நடிக்கிறார். பெண்மையின் மென்மை மைனஸாகி இருக்கிறதே என்ன செய்வது?

அப்புறம் அந்த இன்ஸ்பெக்டர் அண்ணன் ஜீவா. ஏதோ ஒரு ஆங்கிளில் ஹிந்தி மஹ்மூத் மாதிரி இருக்கிறார். கண்கள் சிவக்க சிவக்க வசனம் பேசுகிறார். மூச்சிரைத்துக் கொண்டே சண்டை போடுகிறார். நடிப்பு?

மொத்தத்தில் படம் அரை வேக்காடு உணவுப் பண்டம் மாதிரி இருப்பதால் நியாயம் கேட்கவேண்டியவர்கள் ரசிகர்களே!

— ஜெயமன்மதன்


"இந்த வருடம் மெடல், கப், எல்லாம் இல்லாம ஜெயிச்ச வங்களுக்கு ராகமாலிகா சேலைகள்தான் பரி கொடுக்கணும்னு எல்லோரும் விரும்பி கேட்டாங்களாம். அதனாலதான் இந்த ஏற்பாடு".

மனிதர்கள் எந்த ஜாதி?

லட்சுமி மகன்

இன்னும் சிறிது நேரத்தில் தன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் நடக்க இருப்பதையும், அதனால் அவள் தன் வேலையையே விட்டுப் போவதையும் அறியாதவளாய், உமா தன் தோழி விமலா வீட்டை அடைந்தாள். வாசலில் இருந்த காலிங் பெல்லை அமுக்கினாள். உள்ளேயிருந்து ''யெஸ், கம்மின்'' என்ற குரல் கேட்டது.

''என்னடி, எட்டு மணிக்கு வரச் சொன்னா, ஒன்பது மணிக்கு வர்றே'', என்று விமலா, வாசற் கதவைச் சாத்திக் கொண்டே கேட்டாள்.

''அத ஏன் கேக்கறே. ஆயா வர்றதுக்கு லேட்டாயிடுச்சு. அவளைச் சங்கரைப் பார்த்துக்கச் சொல்லிட்டு வந்தேன்' என்று உமா அந்த அறையில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்துக் கொண்டே பதிலளித்தாள். உமா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியையாக வேலை பார்க்கிறாள். அவளுக்கும் ரமணனுக்கும் திருமணமாகி, மூன்று வருடம் கழித்து சங்கர் பிறந்தான். இருவரும் வேலைக்குச் செல்வதால், ஒரு ஆயாவை வேலைக்கு அமர்த்தி, சங்கரைக் கவனிக்க ஏற்பாடு செய்தனர்.

''சரி, ஏண்டி, எதுக்கு என்னை அவசரமா வரச் சொன்னே?'' — உமா.

''பொழுது போகலே. சரி, சும்மா பேசிக்கிட்டிருக்கலாம்னுதான். உனக்கும் இன்னிக்கு லீவுதானே?'' என்று விமலா பதிலளித்தாள். ஆனால் அவளுக்கு உமாவின் வாழ்க்கையில் திருப்பம் இதனால் ஏற்படும் என்பது தெரிந்திருந்த விஷயம்; அதற்காகத்தான் உமாவை அவள் அழைத்தாள்.

''உமா, பாலகுமாரனோட, ''பச்சை வயல் மனது'' படிச்சுட்டியா, எப்படியிருக்கு!'' விமலா கேஸ்ஸை எரியவிட்டுக் கொண்டே கேட்டாள்.


''எனக்கென்னமோ, அந்தக் கதை பிடிக்கலே. என்னடி, இன்னும் சமையல் ஆகலேயா?'' என்றாள் உமா.

''ம். இன்னும் சாம்பார் மட்டும்தான்டி பாக்கி. ஏண்டி, அந்தக் கதை உனக்குப் பிடிக்கலே?'' என்று அடுப்பில் கடுகைத் தாளித்துக் கொண்டே விமலா கேட்டாள்.

''அதென்னடி, பத்மநாபன் கேரக்டர் ரொம்ப மோசம்டி. ஒரு இடத்திலே பொய் சொல்றதுக்கு சூழ்நிலைதான் காரணம்'ம்கிறான். ஆனால், கல்பனா, இடத்திலே யாராயிருந்தாலும் அப்படித்தானே செஞ்சிருப்பாங்க. அப்புறம் அவனோட கவிதை எவ்வளவு நல்ல கவிதை. அதைக் கவிதை இல்லேன்னுட்டான். விளம்பரத்தைப் பார்த்த போது, பாலகுமாரன் ஏதோ சமுதாயப் பிரச்சினையை எழுதப் போறார்ன்னு நினைச்சிண்டிருந்த எனக்கு சரியான நோஸ் கட். யேய் ரொம்ப வதக்காதே. கமறப் போவுது'' என்று உமா ஒரு லெக்சர் கொடுத்து முடித்தாள்.

''சரி, அதுல வர்ற கவிதைகளைப்பத்தி என்ன நினைக்கிறே?'' என்று விமலா கரைத்து வைத்திருந்த புளித் தண்ணீரைப் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டே கேட்-

மாணவர் பக்கம்



டாள். அவளுக்கு இலக்கியத்தில் மிகுந்த விருப்பம். ஷேக்ஸ்பியரை நன்றாகப் படித்தவள். பாலகுமாரன் அவளுக்குப் பிடித்த தமிழ் எழுத்தாளர். 'இரும்புக் குதிரை'களை இதுவரை ஐந்து முறையாவது படித்திருப்பாள். கடந்த இரண்டு வாரங்களாக அவள் கண்ட ஒரு காட்சி அவளை அதிரச் செய்தது. அதை உமாவிற்குக் காட்ட வேண்டும் என்றுதான் அவளை இங்கு வரவழைத்தாள். அந்த நேரம் வரை இதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கலாமே என்று ''பச்சை வயல் மனதை'' எடுத்தாள். உமாவிற்கும் பாலகுமார் நாவல் என்றால் உயிர்.

''எல்லாம் பரவாயில்லே, ஆனா ''மனிதர்கள் காக்கை ஜாதி''ங்கிற கவிதை சுத்தமாப் பிடிக்கலே. கிடைக்கிற உணவைப் பகுத்துண்டு வாழுற அந்தக் காக்கை யினத்தை மட்டமான மனித ஜாதிக்கு, கம்பேர் பண்ணினது நல்லாவேயில்லேடி. காக்கை உணவைப் பார்த்தவுடனே, தான் மட்டும் சாப்பிடாமே, உறவுக்காக்கையும் அழைத்து சாப்பிடறதைப் போய் ''பயத்திலே பதறும் காக்கை''ன்னு டிஸ்கரைப் பண்றாரு. உனக்குப் பிடிச்...'' என்று அவள் கேட்கும் போதே வாசலில், ''அம்மா, தாயே'' என்று குரல் கேட்கவே, விமலா, ''இருடி, வர்றேன்'' என்று சொல்லி விட்டு வாசலுக்குச் சென்றாள்.

''ஏம்மா, நேத்திக்குத்தானே வந்தே. எப்பொழுதும் இதே வேலையாப் போச்சு உங்களுக்கு'' என்றாள்.


''இல்லேங்கம்மா, நேத்து இங்க வரலேயே. ஒவ்வொரு சனிக்கிழமையும் தான் இந்த ஏரியாவுக்கு வர்றேன்'' என்று பிச்சைக்காரி பதில் சொன்னாள்.

''ம், உங்களுக்குக் கூட ஒரு நாளைக்கு ஒவ்வோர் இடத்திலே கேம்பா! என்கிட்ட சில்லறை இல்லே. ஒரு பத்து பைசா இருந்தாப் போடுடி'' என்று உமாவை நோக்கினாள்.

''இந்தாம்மா'' என்று பிச்சை போட வந்த உமா, அங்கே தன் மகன் சங்கரை ஆயாவுடன் பிச்சைக்காரன் கோலத்தில் பார்த்தவள் அதிர்ந்தாள்.

''பயத்தில்பதறும் காக்கைகள்'',
யாரிடம் இந்தப் பொய்கள்?
அழைப்பைக் கூச்சல் என்பீர்,
அழைத்திட்ட காக்கை எல்லாம்,
உறவோடு பகுத்துண்டு வாழும்.
தன் வீட்டை உடன் கூட்டிச் செல்லும்
காக்கைகள் நத்தை ஜாதி
மனிதர்கள் பண ஜாதி.'' என்று விமலா புதுக்கவிதை உருவாக்கினாள்.

—லட்சுமி மகன் (இரா. சங்கரன்),
மூன்றாமாண்டு ஆங்கிலம்,
சரஸ்வதி நாராயண் கல்லூரி,
மதுரை—22.



பெருமை!

ஓ! முன்னேறிய நாட்டவரே!
வானுயர் கோபுரமும் உயர்பல கட்டிடமும்
உள்ளதென விண்பெருமை கொள்ளாதீர்—
எங்கள்
தேர்தல் வேட்பாளரின்
ஆகாயக் கோட்டை முன்பு
உம்பெருமை எம்மாத்திரம்!

ரவிச்சந்திரன்,
பி. காம் மூன்றாமாண்டு பிரிவு—1,
ஏ. எம். ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம்,
சென்னை—61.


எங்கள் பள்ளியில் அண்மையில் சிலம்பில் விஞ்சி நிற்பது வாழ்வியல் அறமா? இலக்கியச் சுவையா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. அறம் சார்பாகப் பேசிய திரு. புலவர். கா. சுப்பிரமணியனார், இளங்கோவடிகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது சேரநாட்டு 'இளையராஜா' என்றார். செங்குட்டுவன் தம்பியல்லவா? உடனே மாணவர்கள் மத்தியில் கரவொலி அதிகம் கேட்டது. அடுத்துப் பேசிய நடுவர் பேராசிரியர் அரங்க. இராமானுஜம் இளங்கோவடிகளைப் பாரதிராஜா என்று குறிப்பிட்டார். நாங்கள் ஒன்றும் புரியாது விழித்தோம். இளங்கோ, சிலம்பை எழுதா விட்டால் சேர நாட்டுக்குத்தான் இளைய ராஜாவாக இருந்திருப்பார். ஆனால் சிலம்பை எழுதியதால் இலக்கிய உலகுக்கே மிகப் பெரிய ராஜாவாக - பார் அதி ராஜா — பாட்டரசனாகத் திகழ்கிறார் என்றார். 'கரவொலி' முன்பைவிட பல மடங்கு அதிகமாகக் கேட்டது.

ஆர். செந்தில்குமார்,
எட்டாம் வகுப்பு, 'எஃப்' பிரிவு,
தூயவளனார் மேல்நிலைப் பள்ளி,
கடலூர்—1.



குளோஸ் அப்

இந்திராவை விட புத்திசாலி!



இந்தியாவில் இன்றைக்கு ஆட்சியில் உள்ளவர்களில் மிகவும் சுறுசுறுப்பான, புத்தி கூர்மையான அரசியல்வாதி ராமகிருஷ்ண ஹெக்டே. பொதுவாக புத்திசாலியான அரசியல் தலைவரென இந்திராவையே குறிப்பிடுவார்கள். ஆனால், இந்திராவைவிட புத்திசாலி ஹெக்டே என்றால் அது மிகை இல்லை.

பூரண மெஜாரிட்டி இருந்த என்.டி.ஆர்., ஃபரூக் அப்துல்லா இவர்களையெல்லாம் பதவியிலிருந்து இறக்கிய இந்திராவால் கர்நாடகத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. இன்று வரை அவர் எடுத்த முயற்சிகள் பயன் தரவில்லை. காரணம் என்ன? இன்று, இந்திரா மனத்தில் என்ன இருக்கிறது என்பதை மிகத் துல்லியமாய்க் கணித்து, அதற்கேற்பத் திட்டமிடும் ஒரே ஒருவர் ஹெக்டேதான். ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றையும், மிகச் சாமர்த்தியமாய்த் திருப்பி காங்கிரஸின் முகத் திரையைக் கிழிக்கிற இவரது திறமை அபாரம். இதைப் பார்க்கும் போது பள்ளிக் கூடத்தில் படித்த ஆஸ்திரேலிய பூமராங்தான் எனக்கு நினைவு வருகிறது.

இதற்கு அனுசரணையாகக் கர்நாடக எம்.எல்.ஏக்கள் ஹெக்டேக்கு மனப்பூர்வமான ஆதரவு தருகிறார்கள்.

கனகபுரா தேர்தல் முடிவு வெளியானதும் ஹெக்டேயைப் பிரத்தியேகப் பேட்டி காண விரும்பினேன். பெங்களூரில், நேரே அவரது வீட்டுக்குப் போய் விட்டேன். நான் அன்றே சென்னை திரும்பியாகவேண்டும் என்ற நிலை. அவரோ மந்திரிசபைக்கூட்டத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். ''அப்புறம் வாருங்கள்'' என்று அவர் சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படிச்சொல்லாமல், ''எனக்குக் காபினெட் மீட்டிங் இருக்கிறதே! செக்ரடேரியட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்... ஒன்று செய்யலாம். என்னுடன் காரில் வாருங்கள். பேசிக் கொண்டே போகலாம்'' என்றார். நானும், அவரும் காரின் பின் சீட்டில் அமர்ந்து கொள்ள, முன்னால் கர்நாடக செய்தித் துறை அமைச்சர் ரகுபதி உட்காரக் கார் புறப்பட்டது. டிரைவரிடம், எவ்வளவு மெதுவாகப் போக முடியுமோ, அத்தனை மெதுவாய்ப் போகும்படி சொல்லிவிட்டு, பேட்டி தந்தார்.

ஹெக்டே என்கிற மனிதரைப் பற்றி ஒரே வார்த்தை: 'மணி'யானவர். மனிதர் பக்கா ஜெண்டில்மேன். ரொம்ப ரொம்ப ஸிம்பிள். மிகவும் நிதானமாய் நம்மிடம் பேசிக் கொண்டிருந்தாலும், அவரது மூளை படு வேகமாக வேலை செய்து கொண்டிருக்கும். வீணான பந்தாவெல்லாம் துளிக்கூட இல்லை. யார் வேண்டுமானாலும் அவருடைய வீட்டுக்குப் போய் ரொம்ப எளிதாய் அவரைச் சந்தித்துப் பேசலாம். பிரச்னையே கிடையாது.

இன்னொரு சமயம், மெட்ராஸிலிருந்து, பெங்களூருக்குப் போன் பண்ணி, ஹெக்டே இருப்பாரா என்று தெரிந்து கொண்டு, பெங்களூர் கிளம்ப விரும்பினேன். அவர் வீட்டில் இல்லை. விஷயத்தைச் சொன்னேன். என் டெலிபோன் நம்பரையும் கொடுத்தேன். அன்றைக்கே பெங்களூரிலிருந்து போன் கால்! பேசினவர் ஹெக்டே!

எனக்கு இனிய அதிர்ச்சி! ''பெங்களூரில் நான் இருப்பேன்; தாராளமாய் வரலாம்'' என்றார். ஹெக்டே அத்தனை பண்பாளர்.

மறுபடி, எதிர்க் கட்சிகள் இந்திராவை வீழ்த்தி, மத்திய அரசைப் பிடிக்கும் வாய்ப்புப் பெற்றால், பிரதமர் பதவிக்கு வரத் தகுதியான; திறமையான ஒருவர் — என் கணிப்பில் — பிரச்னைகளைச் சமாளிப்பதில் சமர்த்தரான ராமகிருஷ்ண ஹெக்டேதான்!

அனிதா பிரதாப் கூறக் கேட்டு எழுதியவர்

எஸ். சந்திரமௌலி.

அடுத்த வாரம்: சிவாஜி.



ராஜராஜன்

அரியணை ஏறி ஆயிரம் ஆண்டுகள்

செப்டம்பர் 16-ம் தேதி தமிழக அரசு இந்த விழாவை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் கலந்து கொண்டு இந்தத் தமிழ் விழாவைச் சிறப்பிக்கலாம்...

● தஞ்சை பெரிய கோவில் என்பது ஆதியில் மிகவும் சிறியதாக இருந்த தளிக் குளத்து இறைவனின் கோவிலை விரிவு படுத்தி அமைத்ததுதான்.

''தம்பி! இந்தத் தஞ்சைப் பெருநகரில், உனது ஆட்சிக்காலத்தில் தளிக் குளத்து இறைவனுக்கு இவ்வளவு சிறிய கோவில் இருப்பது உன்னுடைய புகழுக்கு ஏற்ற தாகுமா?'' என்று கேட்டவர் இராஜராஜனுடைய அன்புத் தமக்கையார் குந்தவைப் பிராட்டியார்.

ஏழாண்டுக் காலம் நடந்த கோவில் இருப் பணிக்குத் தங்கள் உடைமைகளையெல்லாம் வாரி வழங்கியவர்களில் ராஜராஜனின் தேவியரும், தமக்கை குந்தவைப் பிராட்டியாரும் முக்கியமானவர்கள்.

✕ தஞ்சை பெரியகோவில்



● பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் மதிப்பீட்டின் படி, தஞ்சைப் பெரிய கோவிலுக்கு இராஜராஜன் வழங்கியிருந்த பொன் வெள்ளிப் பாத்திரங்களின் விவரம்.

தங்க நகைகள் 22.375 கிலோ
தங்கப் பாத்திரங்கள் — 1823.22 கிலோ
வெள்ளிப் பாத்திரங்கள் — 222 கிலோ.

இவைதவிர இராஜராஜனுடைய தமக்கையான குந்தவைப் பிராட்டியார் வழங்கியது மட்டும்—

பொன் 446.806 கிலோ.

இந்தக் காணிக்கையில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு கூட இப்போது அந்தக் கோவிலில் இல்லை என்பது, தெய்வங்களையும், பண்பாட்டையும் எவ்வளவு தூரம் நாம் மதித்துப் போற்றுகிறோம் என்பதற்கு ஓர் உதாரணம்.

● தேவாரம் ஓதி இறைவனை வழிபடுவதில் இராஜராஜனுக்குப் பேரார்வம் இருந்தது. இவனுடைய இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டில்தான் தேவாரம் பாடிய மூவரின் சிலைகளையும், சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவி நங்கை பரவையாரின் சிலையையும் தஞ்சைப் பெரிய கோவிலில் எழுந்தருளச் செய்தார்கள். தெய்வத்தோடு ஒப்பவைத்துத் தேவாரம் பாடிய மூவரையும் வழிபடும் நிலை உண்டானது இந்தக் காலத்தில் தான்.

● நில வரியை ஒழுங்குப்படுத்தி வசூலிப்பதற்காக, சோழ சாம்ராஜ்யம் முழுவதையும் முதன் முதலாக அளந்து பார்க்கப்பட்டது இராஜராஜனுடைய ஆட்சிக் காலத்தில் தான். அந்தக் காலத்திய அளவை அதிகாரிக்கு 'உலகளந்தான் இராசராசமாராயன்' என்னும் சிறப்புப் பெயர் தரப்பட்டது.

நிலம் அளக்கப் பயன்படுத்தப்பட்ட கோலின் நீளம் பதினாறு சாண்கள். இந்தக் கோலும் 'உலகளந்த கோல்' என்றே வழங்கப்பட்டது.

● 'ஸ்ரீராஜ ராஜ விஜயம்' என்ற பெயரில் ஒரு சமஸ்கிருத நூலும் 'இராச ராசேசுவர நாடகம்' என்னும் பெயரில் தமிழ் நாடக நூல் ஒன்றும் இருந்து. இப்போது காணாமல்

போய் விட்டன. கல்வெட்டுச் செய்திகளின் படி, 'இராச ராசேசுவரம்' திருக்கோவில் எடுப்பிக்கப்பட்ட வரலாற்றை இவை விளக்கும் என்றும், ஆண்டுதோறும் நாடகத்தை நடித்துக் காட்டுவதற்காக நூற்று இருபது கலம் நெல் நிவந்தமாக அளிக்கப்பட்டிருந்தது என்றும் தெரிய வருகிறது.

● இராஜ ராஜனுடைய போர்க்கள வெற்றிகளில் சடைசியாகக் கூறப்படுவது 'முந்நீர்ப் பழந் தீவுகள் பன்னீராயிரத்தை' வெற்றி கொண்டது. இப்போது மால்தீவ் — மாலைத் தீவு என்று வழங்கப்படுகிற தீவுக் கூட்டமே அது. தேர்ச்சி பெற்ற கடற்படையொன்று இராஜராஜனிடம் இருந்தது.

● தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் உள்ள ஆடவல்லார் – சிவகாமசுந்தரி திருமேனிகள் படிமக்கலையின் சிறப்புக்குச் சான்றாக விளங்குபவை. ஆடவல்லார் என்னும் நடராஜரின் திருமேனியை இராஜராஜனும், சிவகாமசுந்தரியின் திருமேனியைக் குந்தவைப் பிராட்டியாரும் எழுந்தருளச் செய்தனர்.

● திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்...' என்று தொடங்குவது இராஜராஜனுடைய மெய்க் கீர்த்தி. ஓர் அரசனுடைய வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை வகையாகத் தெரிவிப்பது இந்த மெய்க் கீர்த்திகளே. தமிழகத்தில் இப்படி மெய்க் கீர்த்தி என்னும் அதிகார பூர்வமான வரலாற்றுக் குறிப்புகளைத் தமிழில் கல்வெட்டுக்களில் முதன் முதலாகத் தந்த பெருமை இராஜராஜனுடையது.

● இராஜராஜனுக்குப் பதினொரு மனைவியர் இருந்தனர். எனினும் பெயர் சொல்லப் பிறந்த குழந்தைகள் மூன்றுதான்.

தந்தையின் புகழை மேலும் பரப்பிய இராசேந்திரன், மாதேவடிகள் எனப்பட்ட சந்திரமல்லி, விமலாதித்தனுக்கு மணம் முடிக்கப்பட்ட குந்தவை. மூவருமே வானவன் மாதேவியின் வயிற்றில் பிறந்தவர்களாக இருக்கக் கூடும் என்கிறார்கள்.

● ஊராட்சி முறையில் பல்வேறு வாரியங்கள் — தோட்ட வாரியம், ஏரி வாரியம், சம்வத்சர வாரியம் என்று இருந்தன. இவற்றுக்கு உறுப்பினர்கள் குடவோலை மூலம் (குலுக்குச் சீட்டு) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



⌘ இராஜராஜன் காலத்துக் காசு

வாரியக் குழுக்களில் உறுப்பினராக ...லலோரும் ஆகி விட முடியாது. லஞ்சம் பெற்றவரும், ஊர்த் துரோகி என்று கருதப்பட்டவரும், பொது மகளிரோடுகூடியவரும், – எவ்வளவுதான் பரிகாரங்களைச்செய் திருந்த போதிலும் உயிர் உள்ளவரை உறுப்பினராக முடியாது.

● ஆழ்ந்த சிவபக்தனாக விளங்கிய இந்த ஆடவல்லான்தாசன், முகத்தல் அளவை, நிறுத்தல் அளவைகளுக்குக் கூட ஆடவல்லான் பெயரைச் சூட்டியிருந்தான். ஆடல்வல்லான் மரக்கால், ஆடவல்லான் எடைக்கல் என்றெல்லாம் கல்வெட்டுக்களில் குறிப்புக்கள் உள்ளன. சிவபாத சேகரன் என்றும் இவனுக்கு ஒரு சிறப்புப் பெயர்.

பல தகவல்களுக்கு ஆதாரம்: திரு கு. த. திருநாவுக்கரசு எழுதிய முதலாம் இராசராசன். தொகுப்பு: சுப்ரபாலன்

படங்கள்: தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை

⌘ ஆனைமங்கலச் செப்பேடு – இப்போது ஹாலந்திலுள்ள லெய்டன் மியூசியத்தில் உள்ளது.



இந்தியாவின் ஒரே பிரச்னை



இந்தியாவின் ஒரே பிரச்னை இந்திரா தான் என்று திரு எம். வி. காமத் ஒரு கூட்டத்தில் பேசியதை ஒட்டியும் வெட்டியும் எழுதுமாறு நேயர்களைக் கேட்டிருந்தோம். விவாத அரங்கு தொடர்கிறது...

ஆமாம் என்கிறார் திரு. எஸ். பத்மநாபன், சென்னை-59

திருமதி இந்திராகாந்தி அவர்களின் செயல்கள் 1969—லிருந்தே ஜனநாயக மரபுக்குப் புறம்பாகவே இருந்து வந்துள்ளன.

1. 1969—ல் ஜனாதிபதி தேர்தலில்—தமது கட்சியின் வேட்பாளருக்கே எதிராக மனசாட்சியின் பெயரில் வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கச் செய்தது.

2. இடரென்று வங்கிகளைத் தேசிய மயமாக்கி வங்கியில் தொகை போட்டவர்களின் நலனுக்கு எதிராகச் செயல்பட்டு இன்று மனம் போனபடி எளிய மக்களுக்கு உதவுகிறேன் என்று கூறி யார், யாரோ செலுத்திய தொகையைப் பொறுப்பில்லாமல் யார், யாருக்கோ வழங்கி, எல்லாத் தொழிலதிபர்களும் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்தார்களா என்று சமாதானம் கூறி, நாட்டு மக்கள், நாணயத்திலும் தர்மம் நியாயம் ஆகியவைகளிலும் மதிப்பு வைக்காமல் நெறி தவறச் செய்து கொண்டிருப்பது.

3. குறுகிய வழியில் பெயரும், புகழும் சம்பாதிக்க, அன்றைய முதலமைச்சர்கள், திருவாளர்கள் பன்ஸிலால், கமலபதி திரிபாதி, மோகன்லால் சுகாடியாவிலிருந்து இன்றைய முதலமைச்சர்கள் வரை கூலிப் பட்டாளங்களை வைத்து நாடகமாடி வருவது.

4. நமது அரசியல் சாஸனம், நீதிமன்றங்கள், விசாரணைக் கமிஷன்கள் இவைகளை மதிக்காமல் பாராளுமன்றத்தில் இவைகளுக்கு எதிராகத் திருத்தங்கள் கொண்டு வந்து நிறைவேற்றியது; திருமதி. இந்திராகாந்திக்கு எதிராக அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்து நடந்து கொண்டது; ஜனதா ஆட்சியில், தமது புதல்வர் சஞ்சய்காந்தியுடன் சேர்ந்து கொண்டு கோர்ட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது. இவையெல்லாம் நீதி மன்றங்களிடம் மக்களின் மதிப்புக் குறைய வகை செய்துள்ளன.

5. இன்று நமது நாட்டில், அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்துள்ள, லஞ்ச, ஊழல்களுக்குச் சற்றும் பொறுப்பில்லாமல், வெட்கமுமில்லாமல் 'இந்த லஞ்ச ஊழல்கள் அகில உலகிலுமே இருக்கின்றன' என்று சமாதானம் கூறி அதன் மூலம் அதற்கு அங்கீகாரமளித்துச் சமூக விரோதிகளை, நமது பிரதமர் ஊக்குவிக்கிறார்.

6. ஆளும் கட்சியில் சட்டமன்ற, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும், சகமந்திரிகளும் நாட்டின் பல்துறை நிபுணர்கள், நீதிபதிகள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோரைக் கண்ணியமற்ற முறையில் விமர்சித்தும், அவமதித்தும், நடந்து கொள்வதை ஊக்குவித்து வருகிறார்.

7. இத்தகைய யதேச்சாதிகாரச் செயல்களினால் படித்தவர்களையும், நல்லவர்களையும் அரசியலில் கலந்து கொள்ளத் தயங்கும் ஜடங்களாக ஆக்கி இருக்கிறார்.

8. முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற கட்சி ஆட்சிகளைக் கவிழ்க்க வழிவகுக்கிறார். மேலும் எவ்வளவோ எழுதிக் கொண்டே போகலாம். சுருக்கமாக — நமது நாட்டில் ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக ஆக்கிக் கொண்டு வருகிறார் நமது பிரதமர் எனலாம்.

ஆகவே இன்று பாரத நாட்டின் ஒரே பிரச்னை திருமதி. இந்திராகாந்திதான்.

சென்னை—59. எஸ். பத்மநாபன்.

இல்லை என மறுக்கிறார் திரு என். மணி, ஹூப்ளி

"அறிவு ஜீவிகள் பங்கெடுத்துக் கொண்டால் தான் ஜனநாயகம் வெற்றியடைய முடியும்" என்று லார்ட் ஹெயல்ஷாம் கூறினார். நமது நாட்டில் அறிவு ஜீவிகள் அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்கிறார்கள். இவர்கள் செய்வதெல்லாம் பிரச்னைகளைப் பற்றி ஆங்கில நாளிதழ்களில் கட்டுரை எழுதுவது ஒன்றுதான். ஆனால் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வழிமுறைகளைக் கூற மாட்டார்கள்.

இந்திராவா?



''பஞ்சாப் பிரச்சினை எப்போதோ தீர்க்கப்பட்டிருக்கும், இந்திராகாந்தி மட்டும் பிரதமராக இல்லாதிருந்தால்!'' என்கிறார் எம். வி. காமத். ஜனதா அரசு பதவியில் இருந்த போது காவிரி நதி நீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கலாமே? கர்நாடகாவுக்கும் மகாராஷ்டிராவுக்கும் இடையே உள்ள எல்லைத் தகராறைத் (பெல்காம் பற்றியது) தீர்த்து வைத்திருக்கலாமே? வேலை வாய்ப்பு பற்றி இன்று கூக்குரலிடும் ஜனதா கட்சி அன்று எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தது?

டாக்டர் தத்தா சாமந்த் போன்றவர்கள் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்திய போது அதைக் கண்டித்துப் பத்திரிகைகளில் எழுத எம். வி. காமத் அவர்களுக்குத் துணிவு இருந்ததா? மகாராஷ்டிரத்தில் ஷரத்ஜோஷி விவசாயிகளைப் போராட்டத்தில் ஈடுபடுத்திய போது கண்டித்தாரா?

இன்று பஞ்சாபிலிருந்து ராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கும் எதிர்க்கட்சியினர் அன்று பிரச்சினையைச் சமாளிக்க அரசுக்கு யோசனைகளைப் பரிந்துரை செய்தார்களா?

''படித்தவர்கள் தயங்கும் போது யாராவது தேவையை நிரப்ப வருகிறார்கள். பொறுப்பை நிர்வகிக்க வருகிறார்கள். படித்தவர்கள் குறைப்படுவதில் பெருமையில்லை'' என்று கூறுகிறார் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி.

ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கு எதிராக வலுவான எதிர்க்கட்சி தேவை. நமது நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பதவிக்காகத் தங்களுக்குள்ளே குடுமிப்பிடிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஜனதா கட்சியிலிருந்து சுப்பிரமணிய சுவாமி வெளியேற்றப்பட்டிருக்கிறார். தலைவர்களுக்கிடையே ஒற்றுமையில்லை. இவர்கள் ஆட்சியைப் பிடித்தாலும் நாட்டின் ஒற்றுமையைக் காப்பது சாத்தியமா? In the land of the blind one eyed man is the king என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. வலுவான மாற்றுக் கட்சியில்லாத போது இந்திரா காந்தி பிரதமராக இருக்கிறார். இதில் என்ன தவறு?

பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தான் உலக அரங்கில் நமது நாட்டின் பெருமை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இந்தியனும் இது குறித்துப் பெருமைப்பட வேண்டும்.

என். மணி.
ஹூப்ளி.

சென்னையில்

என். டி. ஆர்.

கடைசி மூச்சுவரை ஜனநாயகத்துக்காக...



நமது ஆட்சி அநியாயமாக நீக்கப்பட்ட பின் முதல் முறையாக சென்னைக்கு வந்திருந்தார் என். டி. ஆர். மாலை நான்கு மணியிலிருந்தே ராணி அரங்கத்தில் கூட்டம் அலை மோதத் துவங்கியது. எட்டு மணி அளவில் மேடையிலிருந்து பார்த்தால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள். 8.45–க்கு என். டி. ஆர். வந்தார். சாலையிலிருந்து அரங்கத்துக்கு வரும் வரை காரின் உள்ளிருந்தே கைகளைக் கூப்பி வணங்கிக் கொண்டே வந்தார். ''என். டி. ஆர். வாழ்க'' என்று கூட்டம் உணர்ச்சிப்பிழம்பாக மாறி கோஷம் செய்தது. காரிலிருந்து மேடைக்குப் படிகளில் ஏறிச் செல்வதற்கு மிகச் சிரமப்பட்டார். மக்களைப் பார்த்து வணங்கிய கைகளிடையே கைத்தடி இருந்தது. மேடைக்கு வந்தவர் மூன்று பக்கங்களுக்கும் சென்று மக்களைப் பார்த்துக் கைகூப்பினார். இதய அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவரது உடம்பு மிகவும் இளைத்துத் தளர்ந்து விட்டது. கண்களில் சோகம். வேகமாய் நடக்க முடியாத நிலை. நான்கு வார்த்தைகள் சேர்ந்தாற் போல் பேசினால் மூச்சு வாங்கி நெஞ்சைப் பிடித்துக் கொள்கிறார். உண்மையிலேயே அன்று அவரைப் பார்த்த எனக்குச் சோகம் பொங்கியெழுந்தது. 1982–ல் கல்கிக்குப் பேட்டியளிக்கும் போது ''ஆட்சிக்கு வந்தால் அக்கிரமங்கள் செய்யும் குண்டர்களையொழித்துக் கட்டுவேன்'' என்று மேஜையை ஆவேசத்துடன் ஓங்கிக் குத்திய என். டி. ஆரா இவர்! மூன்று தடவை மாத்திரைகளைச் சாப்பிட்டார். பேசும் போது மிகவும் உணர்ச்சிவசப்பட்ட அவரை கருணாநிதியும், செழியனும், உபேந்திராவும் கட்டுப்படுத்தினார்கள்.

● எந்த நிமிடத்திலும் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற நிலையிலும் கூட ஜனநாயகத்திற்காக ''நான் கடைசி மூச்சு வரை குரல் கொடுப்பேன்' என்று கூறி வருகிறார் என். டி. ஆர்.

● என். டி. ஆர். சுற்றுப் பயணத்தின்போது அவரது மூன்று மகன்கள் அவருக்கு உதவி செய்கிறார்கள். ஒருவர் சைதன்ய ரதத்தை ஓட்டுகிறாராம். மற்றொருவர், புகைப்படம் மற்றும் கூட்டங்களைத் திரைப்படம் எடுப்பதைக் கவனிக்கிறாராம். இன்னொருவர் என். டி. ஆரின் தேவைகளைக் கவனித்துக் கொள்கிறாராம்.

● இன்று என். டி. ஆரின் வலதுகரமாக விளங்கும் தெலுங்குதேச எம். பி. உபேந்திரா ''நான் ஒரு சோஷலிஸ்ட்' என்றார். தென்கிழக்கு ரயில்வேயில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி விட்டு, பிறகு ஜனதா ஆட்சிக்கு வந்த போது ரயில்வே மந்திரி மது தண்டவதேக்கு உதவியாளராக இருந்தாராம்.

● நிருபர்கள் கூட்டத்திற்கு என். டி. ஆர். வரவில்லை. பரூக் அப்துல்லா நிருபர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். 'சோ'வைப் பார்த்து Are you a party man or Press man என்று பரூக் கேட்டபோது, 'சோ, 'middle man' என்று தமாஷாகப் பதிலளித்தார்.

-தில்லப்பா

புகைப்படம்: சுபா

✕ உபேந்திரா



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

''தரத்தோடு விலையையும் எம் மாதிரி நோட்டம் பார்த்து வாங்குங்க, கெட்டிக்காரி நீங்கதான்''



''நியூட்ரமுல் தான் என் கைராசி.''

''கண்ணை மூடிக்கிட்டு முடிவு பண்றவ நான் இல்லே. கண்முழிப்பா கவனிக்கறவங்களுக்குக் கிடைக்குது சகாய விலையிலே தரமான பண்டம்-- இதோ எனக்கு நியூட்ரமுல். ISI தரம் இருந்தாகணும், இருக்கா பார்ப்பேன். நியூட்ரமுல் ஒண்ணுக்குத் தானே அது இருக்கு. வேறெந்த கோக்கோ மால்ட் பானத்துக்கும் கிடையாதே. அதுவும், குடும்ப மனசுப்போல வாங்கக் குடுத்து வெச்சவ நான், எங்க வீட்டுலே கண்டிப்பா நியூட்ரமுல் தான் வேணும்''.

''விளம்பரக் கதைகள் எல்லாம் என் கண்ணுலே மண்ணைத் தூவும்படி விடமாட்டேன். எதையுமே நான் நேரிலே பார்த்துத்தான் வாங்குவேன்''.



மேலும் லாபமடைவீர்! வாங்குவீர் பெருஞ் சிக்கன 1 கிலோ டின் அல்லது வசதியான 200 கிராம் டின்.

நியூட்ரமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

மார்ச் '84 நிலவரப்படி 500 கி.கார்-பிளெக்ஸிபுள் பேக்குகளுக்கான அதி போக உச்ச விலைகள். வரிகள் தனி.

daCunha/GCM/109(A)/84/TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

